Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

12 - 18. 9.1993 ரூபா 8/50

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 16



## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள் -அரசியல் அலசல்-



புலிகளின் அடுத்த இலக்கு என்ன?

தையல்+சமையல் லேடீஸ் ஸ்பெசல்



உலக ரவுண்டப்

பாப்பா முரசு

வண்ணப் படங்களோடு சினி விசிட்



அரசியலுக்கு ரஜனி வருவாரா?

கலைஞரின் இலக்கிய நயம்

உலகம் அழியுமா?
…யை மோதவரும் விண்கல்லு!
அமெ… நாசாவின் அந்தரங்க அறிக்கை!!

வீடு எரிந்து கொண்டிருந்தது
[illegible]மோ ரி.வி. பார்த்துக் கொண்டிருந்தது
[illegible]

சித்திரத் தொடர் - சிறுகதை - சீறும் 'கவிதைகள்
கண்ணே மதுமிதா புதுமைத் தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
கடந்தவாரம்
அன்பு நண்பர் அஸ்வதி
அருமையான படைப்பொன்றை
'அந்நியம்'
என்ற கதையாக தந்திருந்தார்.

இந்த வாரம்
இனிய நண்பர் இளையவன்
'மக்கள் பிரதிநிதி'
என்னும் கதையை,
காலத்திற்கேற்ற காத்திரப் படைப்பாக
உருவாக்கித் தந்திருக்கிறார்.

இவ்வாறான படைப்புக்களை
முரசு முகம் மலர்ந்து வரவேற்கிறது.
வாசக நெஞ்சங்களும்
வலுவாக வரவேற்பார்கள்
என்ற நம்பிக்கையுமுண்டு.

சுயநலமும், சூதும், வாதும்
உன்னதங்களை
சதி கொண்ட வாளால்
அறுத்துப் போட்டுவிட்டு
அதனால் தமக்குக் கிடைக்கும் லாபங்களை
நிறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.
அப்பட்டமான வியாபாரிகள் அவர்கள்.

இன மோதல்கள்
சமூக மோதல்கள்
சாய்த்துவிட்ட மனித உயிர்கள்
இழக்க வைத்த உடமைகள்
கொட்டப்பட்ட குருதிகள்
யாருக்கு லாபம்?
எங்கோ ஒரு
மைதானத்தில் நின்று முழங்கிவிட்டு-
இனப் பெருமை பேசிவிட்டு
இறங்கிப் போனவர்கள்
மஞ்சத்தில் தூங்கிக் கொண்டிருக்க
சராசரி மனிதர்கள்
சண்டையிட்டு
மரணப்படுக்கையில் விழுந்தார்கள்.

அன்று
மைக்குகள் முன் முழங்கிப் பிரித்தார்கள்;
இன்று
துப்பாக்கிகளால் முழங்கிப் பிரிக்கிறார்கள்.

எவன் மடிந்தாலென்ன
எவன் குடும்பம் அழிந்தாலென்ன
ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று
அவர்கள் கூப்பாடு போட்டுக் கொண்டிருப்பர்.

உள்ளங்களில் விஷம் விதைக்கப்படுகிறது.
வெள்ளைத்தாள்கள் கறைப்படுத்தப்படுகின்றன.
இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால்
மனிதத்துவத்திற்கு கொள்ளிவைப்பதா?
மக்கள் இதை உணர வேண்டாமா?

உன் அயலவனை
அழித்துவிடு என்று
எந்த மதம் சொன்னது?
அடுத்த இனத்தை அழித்த
எந்த இனம்
தான் மட்டும் வாழ்ந்தது?

சாதிக்கப்பட வேண்டிய போதனைகளை
புறம் தள்ளிவிட்டு
மோதி மிதிக்கப்பட வேண்டிய கொள்கைகளை
ஆதிக்க வெறி கொண்டோர் அனைவரும்
தூக்கிப் பிடித்ததும், பிடிப்பதுமே வரலாறு.

இந்த அப்பட்டமான அநியாயத்தை
கண்டிக்கவும், சுட்டிக்காட்டவும்
மனித உறவுகளின்
பரந்த தளத்தை எடுத்துக் காட்டவும்
கலை, இலக்கிய வாதிகள்
தம் கடமையைச் செய்யவேண்டும்.
காலத்தின் தேவையைக்
கலை இலக்கியவாதிகள்
புரிந்து கொள்ள வேண்டும். ■

முரசில் இடம் பெற்ற
'வெற்றிகரமாக காப்பி ஊற்றுவது எப்படி'
கதை தொடர்பாக
கல்லூரி மாணவிகள் ஐந்து பேர்
ஒரு காரசார கண்டனம்
தொடுத்திருந்தார்கள்.

யோசித்துப் பார்த்ததில்
அதில் உள்ள நியாயம் புரிந்தது.
தவறுகள் திருத்தப்படும்.
வாசக நெஞ்சங்களின்
நியாயமான உணர்வுகளுக்கு
முரசு என்றும் முதலிடம் தரும். ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

அன்புடன்
ஆசிரியர்.

பச்சை மரத்தில் ஆணி அடித்தது போல் பதிந்து விட்ட தினமுரசுவே என்னைப்பார். என் இதயத்தை பார். அதில் ஓடும் இரத்த நாளங்களும் முரசு தினமுரசு என்றே உச்சரிக்கின்றது. உனது வரவுக்காக ஏங்கும் இதயம்.

ஆறுமுகம் விஜயகுமார்
நு/ பம்பரெகாலை எஸ்டேட்.

•

தித்திக்கும்- தேன்
மொழியால்
எம்மை
திக்கு முக்காடச்
செய்யும்
முரசே-உன்
சேவைகள்
தொடரட்டும்.

கரீமா ஹஸன்
உக்குவெல.

•

## தினமுரசு
## போன்: 820265

## கவிதைப் போட்டி இல-13

### விதைக்கப்பட்டவற்றில் வெற்றிபெற்ற கவிதையும்- வியக்கப்பட்ட கவிதைகளும்.

**பரிசுக்குரிய கவிதை**

**பஞ்சம்**

ஆயுதம் உங்களை
அகதிகளாக்கியதால்
பஞ்சம் உங்களை
கூலிகளாக்கியதோ?

க. நளினி
திருகோணமலை.

**மலர்ந்திடுமா?**

மூவர் போல்
மூன்றினமும்,
ஒன்றுபட்டிடுமா....?
எம் மூவரின்
முகவாட்டமும்
எதிர்காலமும்
மலர்ந்திடுமா?

அ.முகம்மது ஆதில்
தலை மன்னார் பியர்.

**ஆராய்ச்சி**

"அழிக்கப்பட்ட சமூகத்தின்
சுவடுகளை ஆராய்கின்றோம்.
புதிய சமூகத்தின்
புண்களை ஆற்ற."

நிஜானா ஏ.மஜீத்
அ/இக்கிரிகொல்லாவை.

**வேண்டாம்......**

ஆய்வுகள் நடக்கின்றன ஆயுதம் ஏந்தவா?
வேண்டாம் வேண்டாம்.
வேங்கைகளாய் மாற வேண்டாம்.
மனதை மாற்றுங்கள்.
மனிதராய் மண்ணுலகில் வாழுங்கள்.

எஸ்.எம்.முருகேஸ்
பொகவந்தலாவ.



**எங்கே?**

இந்தத் தேசத்தில்தான்
தொலைத்து விட்டோம்
நம் உறவுகளை
வா
தேடிப்பார்க்கலாம்
இந்தத் தீக் குவியலில்

செல்வி:க.நாகபூஷணி
கம்பளை.

**தீராப் பசி**

ஆயுத வலிமையோ
ஆதிக்க வலிமையோ
தீயின் சூட்டால்
தீனியும் சுவையாமோ
குடிலேனும் இல்லை
குந்திப்பசியாறு.

றோஸ் பேர்னாட்
பண்டாரவளை.

**ஒப்பந்தம்**

ஊதிப்பார்க்கிறேன்...
உணர்வற்றுப் போன
இந்தத் தலைமுறையின்
உயிரில்
எப்போது ஒளி வீசும்...!
கத்தி வேண்டாம்
கருவிகள் கொடுங்கள்...போதும்!

சியானி ஜப்பார்
அக்குறணை.

**தேடல்!**

எரியும் நெருப்புக்குள்ளே...
எதனைத் தேடுகிறீர்...?
மடிந்து போன....
மனித உடல்களையா?

எஸ் ஜீ மனோ
ஹப்புத்தளை.

**துளிர்கள்!**

வறுமையின்
எல்லையிலும்
வாழ்ந்திடத்துடிக்கும்
இளந்துளிர்கள்.

ந. மோகனா
வவுனியா.

**வாட்டம்**

வாட்டுகின்ற மீனோ
வயிற்றுப் பசி போக்கும்
எம்மை
வாட்டுகின்ற போரோ
நசித்து உயிர் போக்கும்.

ச.மகாலிங்கம்
வெலிமடை.

**கவனம்**

இது கிளாலி
கடற்கரையா
கவனம்
நீங்கள் உண்பது
மீனினமோ
மானிட இனமோ
யாரறிவார்!

அ.நிமோசினி
கல்கிசை

**விதி**

இளம்பருவம் தீயாகி
வறுமை இரும்பாகி
இல்வாழ்வு
உருகும் நிலை.

எம்.டி.எம்.சைலாஸ்
கம்மல்துறை.

**வறுமை நிவாரணம்**

வறுமை நிவாரணம்
வயிற்றுக்குப் போதவில்லை
வெந்த மீனால்
வெற்றிடம் நிரப்புகிறோம்.

கு.கவிதா
சின்னப் புதுக்குளம்.

"தெளிவாகப் பார்...!
ஆழி மூழ்கையிலே
கிடைத்த
மீன் துண்டா,
அன்றில் உடல் சிதற
வெடிக்கும்
போர்க்குண்டா,
அந்தோ...,
மனித ஊன்துண்டா
என்று....."

திருமதி சாந்தினி சந்திரன்
ஹெந்தளை.

ஒட்டுத் தொழில்
செய்யும்
சிட்டுக் குருவிகள்.
பட்டுப் போகும்
உள்ளங்களை
ஒட்டக்கூடியவர்
யார்...?

ச. கண்ணன்
பேராதனை.

**எதிர்காலம்**

போர்க் கடலில்
வாழ்க்கைப் படகு
கவிழ்ந்த போதும்- நல்ல
எதிர்காலம் தேடும்
வருங்கால வாலிபர்கள்.

க.வினோத் சகாயராஜ்
மட்டக்களப்பு.

**எதிர்பார்ப்பு!**

வெடிகுண்டே
இன்று
விளை நிலமாய்
போன பின்னால்
நீங்கள் தேடுவது தான்
என்ன?

க.பரமானந்தராஜா
கல்குடா.

**ஜுவாலை (கள்)!**

எரிந்து கொண்டிருக்கும்
நெருப்பு ஜுவாலைக்குள்
மரித்துப் போன எங்கள்
மனித நேயத்தைத் தேடுகிறோம்!


ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

**ஒற்றுமை**

வேற்றுமையின்
வேரூன்றல்கள்
போட்டியிடும் நாட்டில்
பொறாமைப் போட்டிகள்
இல்லாத ஒற்றுமைக்கு
இலக்கணம் நாங்கள்!

யாழமீர் மர்வான்
கல்கிஸ்சை.


## கவிதைப் போட்டி இல-16



பாருங்கள் படத்தை. உள்ளத்தில் உற்பத்தியாகும் எண்ணத்திற்கு மடலிலே உருவம் கொடுத்து அனுப்புங்கள். தபாலட்டை போதும். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி- 18.9.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:16
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

# வாசக(ர்)சாலை



நீங்காத இடம் பிடித்த இளம்முரசே ஓடோடி வா வாரா வாரம் என்னுயிர் "தினமுரசே"

என்.எஸ்.ராஜா-ரியாத்.
AL-TAWIL HEAD OFFICE
RIYADH- 11499 - K.S.A.

•

நடுநிலையாளனே தினமுரசே வாழ்க.
அரசியல் கட்டுரைகள் அபாரம். சகல தரப்பினரையும் விமர்சித்து பக்கச் சார்பின்றி உனது அரசியல் கட்டுரைகள் வெளிவருவது குறித்து மிக்க சந்தோசமடைகின்றேன். தமிழ்- முஸ்லிம் மக்களின் ஒற்றுமை குறித்து நீ எழுதும் கட்டுரைகள்குறித்து மிக்க சந்தோஷமடைகிறேன். வாழ்க தினமுரசே நீடூழி.

றோசான்-வெள்ளவத்தை.

•

'ஐ.நா ஸ்தாபன உதவியை உதாசீனம் செய்வது புத்திசாலித்தனமல்ல' கட்டுரை, அரசுக்கு தகுந்த புத்திமதி. மேலும் அப்துல் ரகுமானின் 'சலவை மொட்டு' அழகாக மலர்ந்து மணம் வீசியது. தேவை இது போன்ற மொட்டுக்கள் எம்மை போன்ற இளையவருக்கு- தொடர்ந்து மலரச் செய்யவும்.

மாத்தளை-தேவ் ஆனந்த்.

•

சத்தான செய்திகளை சொத்தாகச் சேர்த்து முத்தாக வழங்கி வரும் தினமுரசே!
உன்னை ஒரு வாரமேனும் காணாவிடின்-
வெடித்துவி[illegible] எந்தன் சிரசு.

செல்வி கமல்நேசி- களுத்துறை.

•

உதித்து ஒரு சில மாதங்களில் பத்திரிகையுலகில் புரட்சியை ஏற்படுத்திய என் இதய முரசுக்கு திருஷ்டி க்ழிக்க வேண்டும் சார்.

கோணமுட்டால கோபு-அப்புத்தளை.

•

அன்பின் வாரமலரே! போனவாரம் வந்த இதழில் சினிமா செய்திகள் என்னை மிகவும் கவர்ந்தன. மேலும் எனது நண்பர்களும் உன்னைப் பார்த்துவிட்டு இவ்வளவு அழகாக பாகங்களை தயாரித்து வருகின்றதே என்று பூரித்துப் போய் உள்ளார்கள். வாரமலரே உன்னைப் பாராமல் இரவில் தூக்கம் வருவதில்லை. உனது வரவுக்காக என்றும் காத்திருப்பேன்.

பெரியண்ணன் கனேசன்-பம்பரக்கொல்ல டிவிசன்.

•

அழியாமல் வாழ்க
தினமுரசே கன்னித் தமிழ் முரசே நீ
நிலை முரசாய் நின்று மங்காமல் ஒலிக்க வேண்டும்.
அலையற்ற அறிவென்னும் கடல் போல் என்றும்
நிலை பெற்று நீ வாழ வேண்டும்.

செல்வி மஸாஹிறா மொஹிடீன்-காத்தான்குடி-04.

•

இன்னா வாத்தியாரே! தமிழக பத்திரிகைகளையும் மிஞ்சி விடும் அளவுக்கு சுவாரஸ்யமான அம்சங்களை தந்து எங்களை திக்கு முக்காட வைக்கிறீர்களே. பாராட்டுக்கள்! அதிரடி அய்யாத்துரை பல விஷயங்களையும் அலசோ அலசோ என்று அலசி எங்களையும் அசத்துகிறார். கண்ணே மதுமிதா கூட தூள் கிளப்புகிறாள் என்றால் பாருங்களேன். யார் சார் அந்த ரசிகன்? அறிமுகமாகியும் மறைமுகமாகவே இருக்கிறாரே!

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டி.

•

உண்மை சொல்லும் முரசே! நீ உணர்ச்சி வசப்படாதே. தொடர்ந்து முன்னேறு. ஆனால் தொங்கி எழும்பாதே, வேகத்தை அதிகரி. ஆனால் விழிப்பாக இரு, உன்னை இழக்க நானோ தயாரில்லை. அதற்காக நான் வணங்காத நாளுமில்லை. வேண்டாத தெய்வமுமில்லை. வாழ்க முரசு. வளர்க முரசு.

டி.கீதா- தெஹிவளை.

•

மலர்களின் இதழில் மணமுண்டு. தினமுரசே உன்னை வெள்ளிதோறும் வாசிப்பதில் எனக்கு இன்பமுண்டு.

ரா.இந்துமதி- மத்துகம.

•

தினமுரசே, வாரந்தோறும் உனை சுவைப் பதில்தான் எனக்கு எத்தனை அலாதி இன்பம்.

செல்வி ஜனனி-நுகத்தலாவ.

•

படு ஜோருப்பா! முரசு செம வேகம். நம்ம பார்டி ஒற்றன் பயங்கர ஜொல்லுதான். சூடான நெத்தியடி, ஒரு புறம். மொத்தத்தில பின்னிட்டிங்கப்பா.

ஆதவன்-கொழும்பு.

•

வாராய் வாராய் வண்ணமலராக வாரமலராய் தினமுரசு கொட்டி தேன்தமிழில் சுவையூட்டும் கதை எழுதி தெவிட்டாத பல நிகழ்ச்சி தென்றலாக நீ தொடுத்து இளம் உள்ளங்களை இன்பக் கடலில் மூழ்கவைத்து முதுமை நெஞ்சங்களை முக்கடலிலும் மூழ்க வைத்து

22.8.93 வெளியான தினமுரசில் சுவையான அதிசயமான பல அம்சங்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். கிரிக்கெட் சம்பந்தமான கட்டுரைகள் அருமையிலும் அருமை. முன்பெல்லாம் பத்திரிகையே படிக்காதவர்கள் கூட எப்போது வெள்ளிக்கிழமை வரும் எனக் காத்திருக்கிறார்கள். தினமுரசைக் கையில் எடுத்துப் படித்தவர்கள் பத்திரிகையையும் அதில் இடம் பெற்றிருக்கும் சுவையான பல அம்சங்களையும் பாராட்டாமல் இருப்பதே இல்லை. இந்தப் பாராட்டுக்கள் என்றென்றும் தொடர வேண்டும் என்பதே என் போன்றவர்களின் ஆவா. "சிம்பொனி" இசைத்துவிட்டு வெற்றியுடன் திரும்பிய இசைஞானி இளையராஜாவின் வர்ணப் புகைப்படத்துடன் இனிய செய்தி தந்த தினமுரசுக்கும் ஆசிரியருக்கும் இனிய வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறி அன்புடன் விடை பெறுகிறேன்.

ஸிபானா சுபைர்- கலகா.

•

கொஞ்சும் தமிழினில் மித மிஞ்சிய சுவையுடன் எல்லோர்க்கும் பயன்தரும் இலக்கிய ஆக்கங்கள் புதுமைத் தகவல்கள் அரசியல் நிகழ்வுகள் என அறிய பல செய்திகளை தாங்கி வாரமொருமுறை வரவு செய்யும் தினமுரசே! வாழ்க! வளர்க! உன் பணி.

எம்.அகிலன்-டிக்கோயா.

•

கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காவியமான தினமுரசே உன் சிந்தனையில் எம் இள நெஞ்சங்களைப் பறிகொடுத்து விட்டோம்.

ஆர். கேசவலிங்கன்-இரத்தினபுரி.

•

இவ்வார தினமுரசில் இடம் பெற்ற ஆக்கங்கள் அத்தனையும் முத்துக்கள். "கண்ணே மதுமிதா" உட்படக் கவிதைகள், சிறுகதைகள் அனைத்தும் சுப்பர்! "காதுலபூ" படிக்கும் போது வருவது சிரிப்பு. இன்னும் பல புதிய அம்சங்களோடு வெளிவரவேண்டும் தினமுரசு.

வி.சிவசுப்பிரமணியம்- பண்டாரவளை.

•

"என் வாரமலரே" நெஞ்சில் நிறைந்த தினமுரசே. தேவதை என நினைத்து தினம் உன்னை ரசித்தேன். கனவில் உனை நிறுத்தி கவிதைகள் பல வடித்தேன். உறவாக உனை மதித்து உரிமைகள் பல கொடுத்தேன். காலமெல்லாம் உன் நினைவால் காத்திருப்பேன் தரிசனம் தா....

வி.மகேந்திரன்-அக்கரைப்பற்று-09.

•

## இந்திய கடவுச் சீட்டுப் பெற்றவர்களின் அவலம்! போகவும் முடியவில்லை! இப்போது வாழவும் முடியவில்லை!!

(கே.என்)

இந்நாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியில் இருந்த போது 1964ம் ஆண்டு ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. 1965ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்து 1968ம் ஆண்டு இவ்வொப்பந்தத்தை நடைமுறைப் படுத்த சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்த காலம் இருபது வருடங்கள் ஆகும். அதன்படி 1988ம் ஆண்டுடன் இந்த ஒப்பந்தம் முடிந்து விட்டது. அன்று இலங்கை அரசோ அல்லது இந்திய அரசோ இம்மக்களை கேட்காது ஒப்பந்தம் செய்த போதிலும், அப்போது இந்திய கடவுச்சீட்டு பெற்ற பலர் இப்போது உயிரோடில்லை.

1983ம் ஆண்டில் நாட்டில் இடம்பெற்ற வன்செயல், தீவிரவாத அரசியல் போன்ற பல்வேறு காரணங்களினால், மன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டு பத்து ஆண்டுகள் ஆகின்றன. 83ம் ஆண்டு இந்தியா செல்வதற்கு, தோட்ட நிர்வாகத்திடமிருந்து, ஊழியர் சேமலாப நிதி, 14 நாள் சம்பளம் போன்ற சகல கொடுப்பனவுகளையும் பெற்று செல்ல வேண்டிய நிலையில் கப்பற் சேவை நிறுத்தப்பட்டமை இவர்களை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது.

தோட்ட நிர்வாகத்திடமிருந்து கொடுப் பனவுகளை பெற்றதால், தொடர்ந்து தோட்டத் தில் அவர்களுக்கு வேலை மறுக்கப்பட்டது, வன்செயல் போன்றகாரணங்களினால், தம்மிடமுள்ள பணத்தை கொண்டு அன்றாடம் வாழ்க்கை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகினர். இன்றும் கூட பல தோட்டங்களில் இந்திய கடவுச்சீட்டு பெற்றோருக்கு தோட்ட நிர்வாகங்கள் வேலை வழங்க மறுத்து வருகின்றன. இதனால் சுமார் 10 தொடக்கம் 15 மைல்கள் வரை சென்று மரக்கறி தோட்டங்களில் வேலை செய்து வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இவர்களால் எப்படி சேமித்து வைத்த பணத்தை தொடர்ந்து பாதுகாக்க முடியும். அது மட்டுமின்றி அன்று மனு செய்தவர்களின் பிள்ளைகளே இன்று இருக்கின்றனர். இவர்களுக்கு இந்தியாவை பற்றி எவ்வித அறிவோ, அனுபவமோ இல்லை. தாயகம் திரும்பும் எண்ணமும் இவர்களுக்கு இல்லை.

இவர்கள் விடயமாக பல்வேறு வாக்குறுதிகள் பலராலும் வழங்கப்பட்டு வந்தாலும், பாராளுமன்றமோ, அமைச்சரவையோ, இவர்கள் தொடர்பாக தெளிவான முடிவை எடுத்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு எடுக்கப் பட்டிருந்தால் முடிவுகள் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட் டிருக்கும். பிரஜாவுரிமை விடயத்திலும் சத்தியக்கடதாசி முறை கூட செல்லாக் காசாகவே இருந்து வருகின்றது.

இந்திய அரசாங்கமும், இந்திய தூதுவரும் கூட இது விடயத்தில் இம்மக்களின் மனோ நிலையை புரிந்து கொண்டதாக தெரியவில்லை. இவர்களை இந்தியாவில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் வடக்கு-கிழக்கு அகதிகளுக்கு மாற்றீடாக பேரம் பேசிக் கொண்டிருப்பது செல்லாக்காசாகி போன ஒரு ஒப்பந்தத்தின் பேரால் இவர்கள் பலவந்தமாக நாடு கடத்துவதற்கு ஒப்பான ஒரு தன்மையைக் காட்டுகின்றது.

ஆகவே, இம்மக்கள் தொடர்பாக கருத்து கணிப்பீடு செய்யப்படுவது அவசியமாகின்றது. அதன்படி இலங்கையிலேயே பிறந்து, வளர்ந்து, இந்த நாட்டின் வளர்ச்சிக்காக தங்களையே அர்ப்பணித்து கொண்டிருக்கும் இம்மக்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கி, சகல அந்தஸ்த்துகளும் வழங்கப்பட வேண்டும்.

(கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அகதிகளாக செல்வோர் கூட 5 ஆண்டுகளின் பின்னர் அந்நாட்டு குடியுரிமையை பெறுகின்றனர். ஆனால் 150 ஆண்டுகளாக இந்நாட்டுக்கு உழைத்து கொடுத்துக் கொண்டிருக்கும் இந்திய வம்சாவழி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க மறுப்பது வேதனையான ஒன்றாகும்.) ■

## பாதுகாப்புப் படைத் தலைமையில் மாற்றங்கள்! ஆறுமாத காலத்துக்குள் யுத்தத்தை முடிக்கத் திட்டம்!!

வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தை அடுத்து வரும் ஆறுமாத காலத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

அதற்கேற்றவகையில் பாதுகாப் புப் படைக்குள் புதிய மாற்றங் களையும், புதிய தந்திரோபாயங் களையும் செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

சமீபத்தில் புலிகள் அமைப் பினரால் நடத்தப்பட்ட கடற்படை யினர் மீதான தாக்குதல்கள், ஜனகபுர இராணுவமுகாம் தாக்குதல் போன்றவை பாதுகாப்புப் படைக்குள் விரைவான சீர்படுத்தல்களின் தேவையைக் கோடிட்டுக்காட்டுவதாக இராணுவ அதிகாரிகள் சிலர் கூறுகின்றனர்.

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ பலியான பின்னர் இராணுவ நடவடிக்கைகளில் முன்னிலை வகிக்கக்கூடிய அதிகாரி யாக எவரும் பிரபலமாகவில்லை.

இராணுவ நடவடிக்கைகளின் தொய்வு நிலைக்கு அதுவும் ஒரு காரணம் என்றே கூறப்படுகிறது.



இதேவேளையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நியமிக்கப்பட் டுள்ளார்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை வலியுறுத்தும் படை அதிகாரிகளில் அவர் முக்கிய மானவர்.

வடக்கே கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் விமானத் தாக்குதல்கள் விடயத்தில் அவர் கவனம் செலுத்துவார் என்றால் அதுவே வடபகுதி மக்களுக்கு பெரும் அறுதலாக இருக்கும்.

ஏற்கனவே பாதுகாப்பு அமைச் சின் செயலாளராக இருந்தவர் ஏயார் மார்ஷல் வோல்டர் பெர்ணான்டோ. அவருக்கு நிர்வாக விசயத்தில் அனுபவம் இருந்த போதும் நடை முறைப்போர் அனுபவம் இல்லை என்பது ஒரு குறையாகப் பேசப்பட்டு வந்தது.

இதே நேரத்தில் இனப்பிரச்சனை என்பதே இலங்கையில் இல்லை என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தொடர்ந்து கூறிவருவது தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளுக் கிடையே அதிருப்திகளை உருவாக்கி யுள்ளன.

அரசில் உள்ள இனப்பிரச்சனை தீர்வில் அக்கறையுள்ள சிலரும் "ஜனாதிபதி எந்த அடிப்படையில் இவ்வாறான கருத்தை வெளியிடு கிறார் என்று தெரியவில்லையே" என்று கூறுவதைக் கேட்க முடிகிறது.

ஜனாதிபதியிடம் இருந்து திட்ட வட்டமாக அவ்வாறு ஒரு கருத்து வெளிப்பட்டு வருவது ஆறுமாத காலத்திற்குள் போரை முடிவுக்கு கொண்டுவரும் திட்டத்தையும் பாதிக்கவே செய்யும்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் புறக்கணித்துக் கொண்டு போரில் புலிகளை வெல்வது சாத்தியமானதல்ல.

அரசாங்கம் ஒரு கையைக் கட்டிக் கொண்டு சண்டை செய்கிறது.

அரசியல் தீர்வு இருக்க வேண்டிய கரமே அதுவாகும்.

ஒரு கையைக் கட்டியபடி சண்டை செய்து கொண்டு, புலிகளை வெல்ல தமிழர்கள் உதவ வேண்டும் என்று அரசு கேட்குமானால் அந்த அழைப்பை சந்தேகக் கண்கொண்டே தமிழர்கள் நோக்குவார்கள்.

யுத்தத்தை நடத்துவதிலும் புதிய இராணுவ தளபாடங்களை வாங்குவ திலும் காட்டும் தீவிரத்தில் ஒரு பகுதியை அரசியல் தீர்வு விடயத் திலும் செலுத்த வேண்டும் என்பது தான் பொதுவான கருத்தாகும். ●

## கந்தப்பளையில் ஒரு கச்சிதமான திருவிழா!

(கந்தப்பளை நிருபர்)

எழில் கொஞ்சும் மலையகத்தின் கந்தப்பளை நகரில் எழுந்தருளி இருக்கும் சித்தி விநாயகர் கோயிலில் எதிர்வரும் 17.9.1993 அன்று கொடியேற்றம் நடைபெறுகிறது. அடுத்தநாள் அன்னபூசை. மறுநாள் சித்தி விநாயகர் அலங்காரத் தேரில் மேளவாத்தியத்துடன் கரக காவடி ஆட்டத்துடன் கந்தப்பளை கடைவீதியில் பவனி வருவார். இம்முறை இங்குவாழும் பக்தர்கள் பெரும் அளவில் வருவார்கள் என எதிர்பார்க் கப்படுகின்றது. கடைசி நாள் அன்று தீர்த்த உற்சவத்துடன் புரட்டாதி மாத திருவிழா நிறைவு பெறும்.

## மடிந்தார் நடிகர்

'காத்திருப்பேன் உனக்காக' 'எங்களில் ஒருவன்' மற்றும் இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'இரத்தத்தின் இரத்தமே' போன்ற படங்களில் நடித்தவர் தர்மலிங்கம்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக இருந்தவர்.

கொழும்பில் இருந்து யாழ் சென்ற தர்மலிங்கம் புலிகள் அமைப்பினால் கைது செய்யப்பட்டார்.

தற்போது அவர் கொல்லப்பட்டு விட்டதாக புலிகள் அமைப்பினர் அவரது குடும்பத்தாரிடம் கூறியுள்ளனராம்.

## மீளக்குடியேற்றமும் தமிழர்களின் அச்சமும்

அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல அகதிகளும் இவ்வருட இறுதிக்குள் மீளக் குடியமர்த்தப்படப் போவதாக புனர்வாழ்வு அமைச்சர் திரு.பி. தயாரத்தின தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் அறிவிப்பை அடுத்து அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் மத்தியில் சில சந்தேகங்களும் அச்சமும் ஏற்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் அகதிமுகாம்களில் இருந்து வருகின் றனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது உறவினர்களதும் நண்பர் களதும் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மீளக்குடியமர்தல் நடவடிக்கையின் பின் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு செய்யப்படவுள்ள உத்தரவாதம் பற்றி அமைச்சர் தயாரத்ன எதுவும் குறிப்பிடவில்லை.

வன்செயல்களின் இடையே தாம் சிக்கிக் கொள்ளக்கூடும் என்று அஞ்சியே தமிழர்கள் அகதி முகாம்களில் இருந்து வருகின்றனர்.

ஏற்கனவே கொழும்பு அகதி முகாம்களில் இருந்து கிழக்குக்கு அனுப்பப்பட்டவர்கள் கூட சரிவரக் கவனிக்கப்படவில்லை என்றே கூறப் படுகிறது.

இந்நிலையில் மீளக் குடியமர்த்தல் நடவடிக்கைகளில் வாக்குறுதிகளை விட நடைமுறையில் நம்பிக்கையூட்டும் செயற் பாடுகளையே அகதிகள் எதிர்பார்த்து நிற்கின்றனர். ●

## பத்திரமாய் பிறந்தன பதினைந்து பிள்ளைகள்!

## ஈன்றபொழுதில் இருந்தே உலகம் வியக்கும் தாய்!!




பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்துவ துண்டு.

டென்மார்க்கில் உள்ள ஒரு தாய் பதினைந்து பிள்ளைகள் பெற் ஒருநாளில் உலகப்புகழ் பெற்று விட்டார்.

சத்திரசிகிச்சை மூலம் 11ஆண் பிள்ளைகளும் 4 பெண்பிள்ளைகளும் ஒரே நாளில் பிரசவமானார்கள்.

குழந்தை இல்லாமல் பல ஆண்டு கள் வாடினார்கள் கிறிஸ்ரன், சொறென்சென் தம்பதியினர்.

கருவளச் சிகிச்சை கொடுக்கப் பட்டது. இப்போது கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுத்த கதையாகிவிட்டது.

12 குழந்தைகளை ஒரே தடவையில் பிரசவித்ததே இதுவரை உலக சாதனையாக இருந்தது.

இப்போது அந்தச் சாதனையை முறியடித்து உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம்பிடிக்கப் போகிறார் சொறென்சென்.

சொறென்சனுக்கு வயது 34. இன்னமும் மருத்துவமனையில் 15 குழந்தைகள் புடைசூழ தங்கியுள்ளார்.

உள்ளூர் தாதிமார்கள் முறை வகுத்து குழந்தைகளைப் பராமரித்து வருகின்றனர்.

பெற்றாலும் பெற்றாள் பெரும் புகழும் அன்றோ பெற்றாள். வாழ்க வளமுடன். ■

# பொலிவிழந்த நூலகம்! எலி தின்னும் நூல்கள்!

(திருகோணமலை நிருபர்)



திருகோணமலை பொது நூலகத்தின் பரிதாப நிலைமையையே இங்கு காண்கிறீர்கள். இலங்கையின் மிகப் பழைய நூலகங்களில் ஒன்றானதும் வடகிழக்கு மாகாண மைய நகரத்தில் அமைந்துள்ளதுமான இந்நூலகம் தனது கம்பீரமான இரண்டு மாடிச் சொந்தக் கட்டிடத்தை மாகாண சபையிடம் பறி கொடுத்து விட்டு ஐந்து வருடங்களுக்கும் மேலாக நகரக் கொட்டகையிலும் தனியார் வீட்டிலுமாக முடங்கிக் கிடக்கிறது.

இடவசதி போதாமல் புத்தகங்கள் சரியாகப் பேணப்பட முடியாமலும், வாசகர்கள், மாணவர்களால் தேடி எடுக்க முடியாமலும் இருப்பதோடு கறையான், எலி என்பன வற்றுக்கும் அன்றாடம் உணவாகி விடுகின்றன. படிப்பதற்கு வரும் மாணவர்கள் இருந்து படிக்க இட வசதி இன்றிச் சிரமப்படுவது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் பொதுமக்களின் வரிப்பணத்தில் வாங்கப்பட்ட அறிவுக் கருவூலங்கள் எவருக்கும் பயனின்றி வருடக்கணக்காக தொடர்ந்து அழிந்து போகும் நிலை மாறி நூலகத்துக்கு விடிவு காலம் வராதா எனப் பொதுமக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

# சகதி ஒரு புறம்! சரியற்ற பணிகள் மறுபுறம்!!

(எஸ். ரமேஸ்)

இலங்கையில் மிகப்பெரிய பஸ்தரிப்பு நிலையம் குருணாகலையில் உண்டு. அத்துடன் குருணாகல் நாட்டின் பல இடங்களுக்கும் செல்ல பிரதானமான சந்தி. ஒரு காலகட்டத்தில் மிகவும் சிறப்பாக இருந்த இந்நிலையம் இன்று மிகவும் அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது. மழை நாட்களில் நீர் நிறைந்து சகதியாகக் காணப்படுகிறது. அத்துடன் அருகில் புதிதாகக் கட்டப்படும் கட்டிடப்பகுதியில் இருந்து வரும் அசுத்த நீரும் இங்கே தேங்கி நிற்கின்றது. மக்கள் வசதிக்காக ஒலிபரப்பப்பட்ட அறிவித்தல்கள் தற்போது இல்லை. பிச்சைக்காரர்களின் தொல்லை ஒரு புறம். மலசலகூடப் பக்கம் எவரும் செல்ல முடியாது. வண்டிகளை நிறுத்த குறிப்பிட்ட இடங்கள் இல்லை. இதனால் நெருக்கடியும், தோன்றுகின்றது. குறிப்பிட்ட கால அட்டவணைப் படி வண்டிகள் ஓடுவது குறைவு. இதனால் தூர இடங்களுக்குப் பயணம் செல்ல உள்ளவர்கள் சிரமமடைகின்றனர். இரவு நேரத்தில் போதை வஸ்து விற்பனையும் நடைபெறுகிறது. இங்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட இரண்டு டிப்போக்களினதும், தனியார்களினதும் வண்டிகள் பல சேவையிலிருந்தும் ஒன்றிலும் அரசகரும மொழியாகிய தமிழ் இல்லை. தினமும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து பல பயணிகள் வருவதால் இங்கு தமிழும் நிச்சயம் இடம் பெற வேண்டும். சற்று இரவாகி இங்கு வந்தால் நகரத்திற்குள் ஓடும் சேவையும் இருப்பதில்லை. இங்கு வாழ் மக்கள் முன்பிருந்ததைப் போன்று சிறந்தவொரு சேவை கிடைக்க வழி செய்யப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கின்றனர்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல—15

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ |
| | 3 | | | | ■ | 4 |
| | ■ | 5 | | | | |
| | | ■ | | 6 | | |
| ■ | | 7 | | | ■ | |
| 8 | 9 | | ■ | | ■ | ■ |
| | ■ | 10 | | | | |

**இடமிருந்து வலம்**

1. இதில் அமர்ந்தவர்கள் நிம்மதியாக இருந்தது குறைவு.
3. பஞ்சிருக்கும் உள்ளே.
5. இது கையிலிருந்தால் சிலருக்குத் தலைகால் புரிவதில்லை.
6. எதிரியை இப்படியும் சொல்வதுண்டு.
7. ஆட்டுவித்தால் ஆடும் மனிதர்களை இப்படியும் சொல்வார்கள்.
9. காட்டு விலங்குகளில் ஒன்று.
10. மீன்போன்ற கண்களையுடைய பெண்.

**மேலிருந்து கீழ்**

1. பின்னுவதில் புத்திசாலி.
2. அரிச்சந்திரனின் மூச்சு.
4. சுவையோ சுவை (திரும்பியிருக்கிறது)
6. இதுபற்றி முரசில் செய்முறை விளக்கமும் உண்டு.
8. திருமணத்தின் போது இதுவும் முக்கியமாகக் கருதப்படுகிறது.
9. பாண்டியனின் தலைநகரம் (தலைகீழாக இருக்கிறது)

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் மட்டும் வெட்டி ஒட்டி 18.9.93 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். (அஞ்சலட்டைகளை மாத்திரம் உபயோகிக்கவும்) அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல.-15
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

# கல்வி அமைச்சு கவனிக்க வேண்டும் மதிய உணவுபெறும் மாணவரின் அவதி!

இராகலை பகுதியிலுள்ள பல தோட்டங்களில் கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் இருந்தது. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் இவை படிப்படியாக மூடப்பட்டன.

தற்போது பாடசாலை பிள்ளைகள் மதிய உணவு கூப்பனுடன் கூட்டுறவு சங்கக் கடைகளுக்கு செல்லும் போது ஒரு சில பிள்ளைகளுக்கு ஒரு மாதிரியாகவும் வேறு சில பிள்ளைகளுக்கு வேறு மாதிரியாகவும் பொருட்கள் வழங்கப்படுகின்றனவாம். பெரும்பாலும் சவர்க்காரம், தீப்பெட்டி, பற்பசை போன்றவைகளே மதிய உணவாக வழங்கப்படுகின்றனவாம். மேலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களிலிருந்து உரிய காலத்தில் கூப்பன்கள் கிடைக்காத காரணத்தாலும் பாடசாலைகளில் உரிய முறையில் கூப்பன்கள் நிரப்பப்படாத காரணத்தாலும் பொருட்கள் வாங்கச் செல்வோர் வெறுங்கையோடு வீடு திரும்ப வேண்டியுள்ளது. ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கணக்கான கூப்பன்கள் திருப்பிவிடப்படுவதாக கூறப்படுகின்றது.

இதனால் வறிய பிள்ளைகளின் நன்மை கருதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் மதிய உணவு கூப்பன்கள் பயனற்று போவதாக தெரிவிக்கும் இப்பகுதி பெற்றோர், கல்வி அமைச்சின் பார்வை இந்த பிரச்சனை பக்கம் திரும்பாதா என எதிர்பார்க்கின்றனர்.

சே. நவநீதராஜா.

# சேவையில் திருப்தி அதனால் மீண்டும் தெரிவு

(கல்முனை நிருபர்)



சாய்ந்தமருது முதலாம் குறிச்சி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாபா எஸ்.றசினா சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றவர். 1978ம் ஆண்டு தொடக்கம் 1993ம் ஆண்டு வரை இச் சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றிய இவர் பல பொதுப் பணிகளிலும், கிராம முன்னேற்றப் பணிகளிலும் கிராம அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தவருமாவார்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-13க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | ஹி | ம் | சை | ■ | 2 கை | 3 தி |
| ர | 4 ம | 5 க | ■ | 6 ம் | க | ரா |
| ங் | ம் | வி | 7 ப | ல் | ல | வி |
| 8 கே | ட | ய | ம் | ■ | ப் | ட |
| ற் | ■ | ர | ப | ■ | பு | ன் |
| ற | 9 அ | சு | ர | ன் | ■ | ■ |
| ம் | டி | ■ | ம் | ■ | 10 சா | து |

குறுக்கெழுத்துப் போட்டி இல.13இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ஹனீபா அமீர்அலி புத்தளம்.
2. விச்சு தவபாலன் மட்டக்களப்பு.
3. ஏ.ஆர்.ஜவ்னுல் கபூர் ஏறாவூர்-02.
4. பீ. சுகுமார் திருகோணமலை.
5. சி. மலர்விழி கண்டி.
6. ஏ.டபிள்யூ.எம். அஸாம் முறுத்தலாவை.
7. திருமதி பார்வதி சுப்பிரமணியம் நுவரெலியா.
8. எஸ். லட்சுமி கண்டி.
9. எம்.எஸ்.எம். ராஸிக் வரக்காமுறை.
10. கே. ஜீவரட்ணம் கொழும்பு-06.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

# புகார் பெட்டி

## தபால் இங்கே பெட்டி எங்கே?

"திருமலை மாவட்டத்தின் மூதூர்ப் பிரதேசத்திலே அமைந்துள்ள பாலத்தோப்பூர் கிராமத்திலே இது வரை தபால் பெட்டி இன்றி மக்கள் தவிக்கின்றனர்.

ஒரு கடிதம் அனுப்புவதற்கு ஒரு மைல் நடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். கிராமங்களின் வளர்ச்சிப் பாதையிலே தபால் பெட்டியும் ஒரு அவசிய தேவை என்பதை உணர்ந்து எமது மக்களின் தேவையை நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும்."

எஸ். நௌபர்
பாலத்தோப்பூர்.

# வைத்தியர்கள் பற்றாக்குறை வாடுகிறார்கள் நோயாளர்கள்!

(திருமலை நிருபர்)

மூதூர் ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள டாக்டர்கள் பற்றாக்குறை காரணமாக மூதூர் மக்கள் பெரிதும் சிரமப் படுகின்றனர். மூதூர் தொடக்கம் சேனவிலை வரை உள்ள மக்கள் இந்த ஆஸ்பத்திரியைத்தான் நம்பியிருக்கிறார்கள்.

மூன்று அப்போதிக்கரி தரத்தினர் மட்டுமே இங்கு கடமையாற்றுகின்றனர். வெளி நோயாளர் பிரிவையும் தங்கிச் சிகிச்சை பெறுவோர் பிரிவையும் இவர்களே கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எம்.பி.பி.எஸ் தரத்திலான வைத்தியர் ஒருவரேனும் இல்லாமையால் பல நோயாளிகள் கடல் கடந்து திருகோணமலை ஆஸ்பத்திரிக்கே அனுப்பப்படுகிறார்கள். இதனால் நோயாளர் மட்டுமன்றி அவரைச் சார்ந்தோர் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இந்த நிலை கடந்த மூன்று வருடங்களாக நிலவுகிறது. பல் வைத்தியரால் திருகோணமலையிலிருந்தே வாரமொரு தடவை இங்கு வந்து செல்கிறார்.

ஒரு தேர்தல் தொகுதியின் தலைமை ஆஸ்பத்திரிக்கே இந்தக் கதியா என மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

# கவனம் தப்பினால் படுகுழிதான்! பள்ளமாகி வரும் புத்தளம் வீதிகள்!

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்ததும், உப்பு, தென்னை, மீன், வெங்காயம் போன்ற பெரும் வருமானத்தைத் தேடித்தரும் உற்பத்திப் பொருட்களைத் தன்னகத்தே கொண்டு விழங்கும் புத்தளம் நகர வீதிகள் எல்லாம் மேடு, பள்ளம், படுகுழிகள், கல், மண், குப்பைகூளங்கள் நிரம்பியதாக -போக்குவரத்துக்கு லாயக்கற்ற வகையில் காணப்படுகின்றன. இவ்வீதிகளில் பயணம் செய்வோர் பயந்த நிலையில் மிகவும் அவதானத்துடன் செல்ல வேண்டும். கவனம் தப்பினால் படுகுழியில் தான் விழவேண்டும். அப்படி விழுந்தாலும் பரவாயில்லை. காலை, கையை உடைத்துக் கொண்டு காயங்களுடன்தான் செல்ல வேண்டும். அந்த அளவுக்கு இப்பகுதி வீதிகள் மிகவும் படு மோசமான நிலையில் காணப்படுகின்றன.

பல்லாண்டு காலமாக இந்த அவல நிலையிலே தான் இவ்வீதிகள் காணப்படுவதை புத்தளம் நகர சபைகூட கண்டும் காணாதது போல் கவலை கொள்ளாது இருப்பதை அறிந்து மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மன்னார் வீதி, குருநாகல் வீதி, செட்டிவீதி, மரைக்கார் வீதி, நெடுங்குளம் வீதி, வான்குளம் வீதி, கடையாக்கன்குளம் வீதி கே.கே.எஸ்.வீதி, ஜும்ஆப்பள்ளி வீதி, கடற்கரை வீதி, 1ம், 2ம், 3ம், 4ம், 5ம் குறுக்கு வீதிகள், இஸ்மாயில் மாவத்தை, இவை போன்ற இன்னும் பிரதான பெரிய சிறிய வீதிகளும் போக்குவரத்துக்கு லாயக்கற்ற வகையில் காணப்படுகிறன. பல வீதிகள் கிறவல் நிரம்பியதாக இருப்பதினால் மழை காலங்களில் சேறும் சகதியுமாகக் காட்சி தருகின்றன. இந்த வீதிகளில் மின்சார சபையாலும், குழாய்களைப் பதிப்பதற்காக நீர் விநியோகத் திட்டத்தாலும் தோண்டப்பட்ட குழிகள் பல மாதங்களாகியும் மூடப்படாத நிலையிலும் காணப்படுகின்றது. இது விடயத்தில் புத்தளம் மாநகர சபை விரைவில் கவனம் எடுத்து வீதிகளில் காணப்படும் குப்பை கூளங்கள் அகற்றப்பட்டு, படுகுழிகள் மூடப்பட்டு வீதிகள் நவீன முறையில் செப்பனிட்டுத் திருத்தியமைக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் "தினமுரசு" மூலம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

புத்தளம் உதுமான்.

# "சீடா"வின் உதவி எமக்கில்லையா?

நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கோல்புறூக், அக்கரைப் பத்தனைக் கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகள் பழைய கட்டிடங்களுடனும், போதிய இடவசதியின்மையுடனும், ஆசிரியப் பற்றாக்குறையுடனும் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், கடந்த ஆண்டு இங்கு நடைமுறைப்படுத்தவிருந்த சீடாத் திட்டம் வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டதன் பின்னர், இது வரை எவ்விதமான அபிவிருத்தித் திட்டங்களும் இப்பகுதிக்கு வந்து சேரவில்லை. ஆயினும் பெருந்தோட்டத் துறைக்குள் அமைந்துள்ள பெரும்பான்மை இனப்பாடசாலைகள் சிலதாயினும் கூட அவற்றிற்கு கிடைக்கின்ற வசதிகளும், வாய்ப்பு களும் சொல்லிலடங்கா!

தோட்டப்புற கல்வி அபிவிருத்திக்காக, பரிணமித்த, சீடா செயற்திட்டம் இப்பகுதி பாடசாலை கட்டிடப் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்யும் என பெற்றோர், அதிபர், ஆசிரியர், மாணவர்கள் உட்பட பலரும் எதிர்பார்க்கின்றனர்.

சந்துரு
நுவரெலியா.

# நாவலடியில் நமது அவதி

மட்டக்களப்பு மாவட்ட மாநகர எல்லைக்குள் நாவலடி எனும் கிராமம் அமைந்துள்ளது. இக் கிராமத்தின் பாதைகள் அனைத்தும் கிறவலாகவே உள்ளது. இப்பாதையால் தற்போது கிராம வாசிகள் பெரிதும் சிரமப் படுகின்றனர். ஏனெனில் ஒரு துவிச்சக்கர வண்டி செல்வதற்கும் பாதை அருகதையற்று பள்ளமும், படுகுழியும், மூலை, சந்தி என்பன மண் நிரப்பப்பட்டும் காணப் படுகின்றன. இப்பாதைக்கு தார் தான் இடா விடினும் உரிய முறையில் கிறவலிட்டு பாதையைச் சீர்திருத்தித் தரும்படி உரிய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றேன்.

உ. யுவநாதன் -நாவலடி.

# என்று தீரும் இந்த நிலை?

திருகோணமலை மாவட்டத்தின் பின் தங்கிய கிராமமான பள்ளிக் குடியிருப்பில் உள்ள மக்கள் மின்சாரம் இன்றி மிகவும் கஷ்டப் படுகின்றனர். பாடசாலை மாணவர்கள் இந்நிலமை காரணமாக பாடசாலை, மற்றும் பொது இடங்களில் ஒரு விளக்கில் ஐந்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பரந்த ஒளியில் தங்கள் இரவு நேரக் கல்வியைத் தொடர்கின்றனர்.

எனவே தயவு கூர்ந்து இம்மக்களின் கஷ்ட நிலையையும் மாணவர்களின் கல்வி நிலையையும் கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவும் தாங்கள் இதைப் பிரசுரிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க. ரவி
தோப்பூர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட் —நாரதர்—

# புலிகளின் அடுத்த இலக்கு எது?

அமைச்சர் தொண்டமான் தனது 81வது பிறந்தநாளுக்கு முன்னர் வெளிநாடு சென்றிருந்தார்.

அவர் திரும்பிவந்தபோது கையோடு புலிகளின் சமாதானத் திட்டத்தையும் கொண்டுவந்துள்ளதாக தினசரிகள் சில சொல்லிக் கொண்டிருந்தன.

ஒருவேளை தன்னால் யாழ்ப்பாணம் செல்ல முடிந்து, அங்கு புலிகளிடம் இருந்து ஒரு திட்டத்தோடு வரும்போது தலைநகரில் அதன் பிரதிபலிப்பு எப்படியிருக்கும்? அதனைக் கண்டறியும் ஒரு வெள்ளோட்ட நடவடிக்கையாகத்தான் அமைச்சர் மௌனம் சாதித்தாரோ

காரணமாக இருக்கும்.

ஆனால் தீவிரவாதிகள் மிதவாதிகள் பற்றிய கேலியான கண்ணோட்டங்களையே கொண்டிருப்பர்.

தீவிரவாதிகள் பார்வையில் மிதவாதிகள் கையாலாகாதவர்களாகவே தெரிவார்கள்.

எனவே தம்மைப் போன்ற

அமைச்சரும் அவற்றை மறுக்கவில்லை. அதனால் சமாதானத்திட்டத்தில் உள்ளதை அறிய நாடே ஆவலாக இருந்தது.

இதற்கிடையே சிங்களப் பத்திரிகைகள் சில அமைச்சர் தொண்டா தன் பயணப்பையிலே புலியைப் போட்டுக் கொண்டு வந்தது போல கூப்பாடு போட ஆரம்பித்தன.

அமைச்சர் தொண்டாவுக்கு பிறந்த நாள் பரிசாக சமாதானத் திட்டத்தைப் புலிகள் வழங்கியிருக்கிறார்கள் என்றார்கள் சிலர்.

பாரிசில் உள்ள புலிகளின் பேச்சாளர் திரு. லோறன்ஸ் திலகர் அண்மையில்தான் புதுமாப்பிள்ளையானவர்.

தனது கல்யாணப் பரிசாகத்தான் சமாதானத்திட்டத்தை அவர் கொடுத்தனுப்பியிருக்கிறார் என்று நகைச்சுவை கலந்து பேசினார்கள் தமிழ் அரசியல்வாதிகள் சிலர்.

பிறந்த நாள் பரிசோ? கல்யாணப் பரிசோ? இனப்பிரச்சனை தீர்வு




பற்றி புலிகளின் இன்றைய அபிப்பிராயம் என்னவென்று அறிய அனைவருமே ஆவலாய் இருந்தனர்.

புலிகளின் திட்டத்தை அரசிடம் கொடுக்கப் போகிறார் என்றளவுக்குக் கூட செய்திகள் வெளியாகின.

அப்போதும் அமைச்சர் தொண்டா வாய் திறக்கவில்லை.

ஆனால் பாரிசில் இருந்து புலிகள் பேச்சாளர் திலகர்தான் வாய்திறந்தார்.

"எந்தவொரு சமாதானத்திட்டத்தையும் அமைச்சரிடம் கொடுக்கவில்லை" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

உண்மைச் சம்பவம் போல தோற்றமளித்து சுவாரசியமாக ஆரம்பித்த கதையை யாவும் கற்பனையே என்று சடுதியாக முடித்து வைத்தார் திலகர்.

அப்படியா என்று அமைச்சரைக் கேட்டபோது, "ஆமாம் அப்படித்தான். திட்டம் எதுவும் தரப்படவில்லை என்பது உண்மைதான்" என்றார் அமைச்சர்.

புலிகளின் சமாதானத் திட்டம் தன்னிடம் இருப்பதாக சொல்லப்பட்ட செய்திகளை அமைச்சர் தொண்டா ஏன் உடனடியாக மறுக்கவில்லை.

என்று நினைக்கத் தோன்றுகிறது.

அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிகள் பற்றி யாழ்ப்பாணத்திலும், வெளிநாடுகளிலும் புலிகள் அவநம்பிக்கையோடுதான் பேசுகின்றனர், எழுதுகின்றனர்.

ஈரோஸ் இயக்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போது புலிகள் அமைப்பின் பிரமுகர்களில் ஒருவராகவும் இருக்கும் வே.பாலகுமார் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

அமைச்சர் தொண்டமான் தனது அரசியல் சதுரங்கத்துக்கு புலிகளையும் அதன் தலைவர் திரு. வே. பிரபாகரனையும் பயன்படுத்துவதாக அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

அமைச்சர் தொண்டாவின் பேரன் விடயத்தையும் பாலகுமார் இழுத்திருந்தார்.

ஆக, மொத்தத்தில் அமைச்சர் தொண்டமான் மீது அரசியல் ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் முரண்பாடு கொண்டவர்களாகவே புலிகள் காட்டிக்கொள்கின்றனர்.

எனினும், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும் போதும், அமைச்சருக்கு எழுதும் கடிதங்களிலும் மட்டும் சமாதான முயற்சியை வரவேற்பதாகக் கூறிவருகின்றனர்.

ஆனால் அமைச்சர் தொண்டமான் புலிகள் மீது ஏதோ ஒரு வகையில் பரிவு கொண்டவராகவே தோன்றுகிறார்.

அண்மையில் புலிகள் அமைப்பின் வெளிநாட்டுச் செய்திப் பிரிவு ஒன்று அமைச்சரிடம் பேட்டி எடுத்திருந்தது.

"பிரபாகரன் போரிடுவதிலும், அரசியல் நடத்துவதிலும் திறமையானவர்" என்று அமைச்சர் கூறியதாக அந்தச் செய்திப் பிரிவு தெரிவித்திருந்தது.

ஒரு புறம் அமைச்சர் தொண்டமான் மீது நம்பிக்கையீனங்கள் உருவாக்கப்படுகின்றன.

மறு புறம் திரு. தொண்டமானின் தமக்குச் சாதகமான கருத்துக்களையும் பயன்படுத்துகின்றனர்.

அமைச்சர் தொண்டா விடயத்தில் ஒரு இரட்டைப் போக்கு நிலையைத்தான் புலிகள் கைக்கொள்ளுகின்றனர்.

மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் முரண்பாடு கொண்ட சக்திகளுடன் உறவுகளை வைத்துக் கொள்வதிலும் புலிகளுக்கு நாட்டமிருக்கிறது.

தீவிரவாதிகள் மிதவாதிகளோடு எங்குமே ஒத்துப் போனதில்லை.

தற்காலிகத் தேவைகள், சூழ்நிலை நிர்ப்பந்தங்கள் இடைக்கிடையே சில உறவுகளை ஏற்படுத்தினாலும் அவை நிரந்தரமாக நீடிப்பதில்லை.

ஆனால் மிதவாதிகள் தீவிரவாதிகளோடு ஒத்துப் போவதை விரும்புவதுண்டு.

சில சமயங்களில் அவர்களில் தீவிரத்தில் உள்ள நியாயங்கள் அதற்கு காரணமாக இருக்கும்.

வேறு சில சந்தர்ப்பங்களில் வம்பை ஏன் விலை கொடுத்து வாங்க வேண்டும், என்ற எண்ணமும்



தீவிரவாத சக்திகள் மீதுதான் அவர்களின் நம்பிக்கை இருக்கும்.

இந்தியாவில், குறிப்பாக சொல்ல வேண்டுமானால் தமிழ் நாட்டில் புலிகள் அமைப்பினர் தி.மு.க.உடன் நல்லுறவை ஏற்படுத்தினார்கள்.

கலைஞர் கருணாநிதி தமிழக முதல்வரான நிலையில் ஏற்படுத்தப்பட்ட உறவு அது.

கலைஞர் ஆட்சியில் புலிகள் அமைப்பினரின் சில சட்டமீறல் நடவடிக்கைகள் கூட கண்டும் காணாமல் விடப்பட்டன.

அப்படியிருந்தும் கூட தி.மு.க. ஆட்சிக்குத் தெரியாமல் அங்குள்ள தீவிரவாதக் குழுக்களுக்கு புலிகள் அமைப்பினர் உதவினார்கள். ஆயுதம் கொடுத்து பயிற்சியும் கொடுத்து வளர்த்தார்கள்.

தி.மு.கவும் கலைஞரும் தம்மை எப்போதாவது கைவிடக்கூடும்.

தமது அரசியலைக் காக்க புலி ஆதரவு நிலையை மாற்றக்கூடும்.

அப்போது நம்பகமாக உதவக் கூடியவர்கள் அங்குள்ள தீவிரவாதக் குழுக்களே என்பது புலிகளது நினைப்பாக இருந்தது.

தற்போதைய தமிழக நிலவரப்படி புலிகளின் நினைப்பு சரி என்றே தெரிகிறது.

ஆக, புலிகளுக்கு கலைஞர் உதவி தேவைப்பட்டது. அதற்காக மிதவாதியான கலைஞரை புலிகள் முற்றாக நம்பிவிடவுமில்லை.

அவ்வாறான ஒரு அணுகுமுறையைத்தான் அமைச்சர் தொண்டமான் விடயத்திலும் புலிகள் பின்பற்றுவதாகத் தெரிகிறது.

சமாதானத் திட்டம் ஒன்றை கொண்டு வந்திருப்பதாகக் கூறி ஆழம்பார்க்கும் நோக்கத்தோடு அமைச்சர் தொண்டா மௌனமாக இருந்திருக்கலாம்.

சமாதான முயற்சியில் ஈடுபடும் ஒருவருக்கு, அதுவும் செல்வாக்குள்ள ஒரு தலைவருக்கு தர்மசங்கடமான நிலையை தோற்றுவிக்க புலிகள் முற்பட்டமை விவேகமானதல்ல.

இனி புலி வருகுது கதைதான். உண்மையாகவே புலிகள் ஒரு சமாதானத் திட்டத்தை அமைச்சர் தொண்டாவிடம் இனிமேல் கொடுத்தார்கள் என்றால் கூட, அதிலே பலவித சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும் தோற்றுவிக்க திலகரின் மறுப்பு காரணமாகிவிட்டது.

சமாதான முயற்சியில் ஈடுபடும் ஒருவர் சகல தரப்புக்களிலும் நம்பிக்கைக்குரியவராக இருக்க வேண்டும்.

அமைச்சர் தொண்டாவின் சமாதான முயற்சிமீது அவநம்பிக்கை தோன்ற வைத்துவிட்டனர் புலிகள். ■

கடற்படையினர் மீது வடபகுதிக் கடல் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட புலிகளின் தாக்குதல்கள் வெற்றியாக முடிந்துள்ளன.

தற்கொலைத் தாக்குதல் மூலமே புலிகள் வெற்றி பெற முடிந்துள்ளது.

பாரிய கடற்படைப் படகையும் அதிகாரிகள் உட்பட கடற்படை வீரர்களையும் இழந்தமை கடற்படையினருக்குப் பேரிழப்பேயாகும்.

வடக்கே தற்போது படையினரின் நடவடிக்கைகள் ஒரு வரையறைக்கு உட்பட்டவையாகவே நடந்து வருகின்றன.

ஒரு குறிப்பிட்ட தூரம் வரை முன்சென்றுவிட்டு பின் மீண்டும் முகாமுக்கு திரும்பிச் செல்லும் நடவடிக்கையைத்தான் படையினர் மேற்கொள்கின்றனர்.

விமானத் தாக்குதல்களும் இலக்குத் தவறிய தாக்குதல்களாகவே நடக்கின்றன.

இவ்வாறான நடவடிக்கைகள் புலிகளை பெரியளவில் பலவீனப்படுத்த முடியாதவை என்றே தோன்றுகிறது.

மாறாக மக்களிடையே ஒருவித பீதியுணர்வையே தோற்றுவிக்கின்றன.

கடற்பலத்தை அதிகரிப்பதன் மூலம் ஒரு பாரிய ஆயுதக் கடத்தலுக்கு புலிகள் பாதையைச் சுத்தமாக்க முயல்கிறார்கள் என்றே கருதப்படுகிறது.

அவ்வாறு இருக்குமாயின் இந்தியக் கடற்படை மீதும் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள புலிகள் முற்படலாம்.

தமது யாழ்ப்பாண முன்னாள் தளபதி கிட்டுவின் மரணத்திற்கு இந்தியாவை குற்றம் சாட்டி வருகிறார்கள் புலிகள்.

இந்தியக் கடற்படை மீது தற்கொலைத் தாக்குதல் ஒன்றை நடத்துவதன் மூலம் கிட்டுவின் இழப்புக்கு கணக்குத் தீர்த்ததாகக் கூறிக்கொள்ளமுடியும்.

இந்தியக் கடற்படையினரின் தீவிரமான ரோந்து நடவடிக்கைகளை குறைப்பதற்கான அவசியம் புலிகளுக்கு முக்கியமான ஒன்றாகவே இருக்கிறது.

எனவே புலிகளின் அடுத்த இலக்காக, பாக்குநீரிணையில் ரோந்து வரும், இந்தியக் கடற்படையினர் மாறக் கூடும்.

அப்படி நடக்குமானால் இந்தியா கடும் சீற்றம் கொள்ளக்கூடும்.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான இந்தியாவின் கண்ணோட்டமும் புலிகளை முற்றாக ஒடுக்குவதை முதன்மைப்படுத்துவதாக மாறலாம்.

ஆனால், புலிகள் அவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று சொல்லமுடியாது.

இராணுவ ரீதியான வெற்றி, இராணுவரீதியாக தமது பலத்தை



தக்கவைத்தல் என்ற சிந்தனைகளே புலிகளின் நடவடிக்கைகளை தீர்மானிக்கின்றன.

ஆகவே விளைவுகள் பற்றி அவர்கள் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

எதிர்காலத்தில் எதுவும் நடக்கலாம். ■



## அதிரடி அய்யாத்துரை

கிரிக்கெட் சீசன் இரண்டெழுத்துக்காரருக்கும் உதவி செய்து போட்டுது. பருத்திக் கடலில் படகில் இருந்த ரி.வியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த நேரத்திலதான் தாக்குதல் நடந்ததாக ஒரு கதை. சமயம் பார்த்து இரண்டெழுத்துக்காரர் காரியம் நடத்திப் போட்டினம் எண்டு இரகசியமாய் முக்கிய இடங்களில் பேசப்படுகிறது - நாமறியோம். கடலில் நடந்ததை யாரறிவார்!

இராணுவத்தினருக்கு உதவி செய்யாமல் வேறை யாருக்கு விமானப்படை உதவி செய்யிறது? நல்லா உதவட்டும். ஆனா அதில பாருங்கோ தேர் முட்டியளையும், கோயில் பக்கங்களிலையும் டும் போடுறதுதான் என்ன மாதிரி உதவி எண்டு விளங்காமக் கிடக்கு. 'கோயில் கூடாது என்பதால் அல்ல கொடியவர்களின் கூடாரமாக மாறக்கூடாது என்பதால்' எண்டு வசனம் பேசினாலும் அதுக்காக டும் டும் போட வேணும் எண்டு அர்த்தமில்லைக் கண்டியளோ. உதவி வேற. உபத்திரவம் வேற. என்ன, நான் சொல்லுறது?

கிழக்கில் இரண்டெழுத்துக்காரர் அரிசி கேட்டு பயிரிட்டோரை பயப்படுத்துகினமாம். கட்டபொம்மன் பட வசனம்தான் ஞாபகத்துக்கு வருகுது. 'வரி-திறை, வட்டி, கிஸ்தி. வயலுக்கு வந்தாயா, வாய்க்கால் இறைத்தாயா?' இப்படி நீண்ட வசனம் பேச ஆள் இருக்க வேணுமே பாருங்கோ. அதால கேட்பதைக் கொடுப்பதே உத்தமம் என்பது பயிரிட்டோரின் பொலிசி.

தனித்துவ அமைச்சர் இரண்டெழுத்தார் விட்ட அறிக்கையால கொஞ்சம் கவலையாகத்தான் இருக்கிறாராம். திட்டமும் இல்லை வட்டமும் இல்லை என்பது அவரை மட்டம் தட்டி பேசினது மாதிரித்தானே பாருங்கோ.

கொழும்பு ரயில் நிலையத்தில் வவுனியா செல்லும் புகைவண்டி ஸ்தலத்தை வந்தடைய முன்னரே சீற் பிடிக்கப் பாயினம் அவங்கட ஆக்கள். இதில சில பெண் பிரசுகளும் கவுண் போட்டபடி பாயுறதுதான் பெரிய வம்பு. அந்த பாய்ச்சலைப் பார்க்கவே சிலர் அங்கை வந்து நிற்கிறதும் சத்தியமாய் உண்மை. சூழல் புரிஞ்சு நடந்தால் என்ன? சமத்துவமும் வேணும். அதுக்காக பக்குவம் வேண்டாம் எண்டு அர்த்தமில்லைப் பாருங்கோ.

பாதுகாப்பு உயர் வட்டாரத்திலும் அரசியல் தீர்வுதான் முக்கியம் எண்டு முக்கிய அதிகாரிகளே பேசுகினம். இதிலை தீவிரமா இருப்பவர் கூட்டு பொறுப்பாளர்தானாம். அவை தீவிரமா இருந்தாலும் அரசியல் வாதிகள் அடிக்கடி அங்க இங்க தாவிக்கொண்டல்லோ இருக்கினம். தீர்வு எந்தப் பக்கத்தால வாறது?

தென்னாபிரிக்க அணியில ஒருவர் பிழையாப் பந்தைப் பிடிக்க நம்நாட்டு நடுவர் அவுட்டை கொடுத்துப் போட்டார். ஆனால் பிடிச்ச வீரர் நேர்மையானவர். அவுட் இல்லை என்று சொல்லிப்போட்டார். அவர்களிடம் கற்றுக் கொள்ள எங்கட ஆக்களுக்கு கன விசயம் இருக்குது.

வெற்றி நிச்சயம். இலங்கை அணி வெல்வது சத்தியம் எண்டு ஏரிக்கரை பத்திரிகை அலட்சியமாக கணிப்பு போட்டது. வெடி வாங்கி ரெடியாய் இருந்தவை கனபேர். விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம். எவரையும் எளிதா எடை போடக்கூடாது எண்டதை பலத்த அடி மூலமாவது அலட்சியக்காரர் உணர்ந்தாச் சரிதான்.

சித்தர் பாடல் பலருக்கு பிடிச்சுப் போச்சு. பாட்டைப் படிச்சா மட்டும் போதாது. கருத்தையும் கவனிக்க வேணும்.

"மனமென்னும் மாடு அடங்கில்
தாண்டவக் கோனே! -முத்தி
வாய்த்தது என்று எண்ணமோடா
தாண்டவக் கோனே!"

கேட்டியளோ, மாட்டைக் கட்டிப் போடுங்கோ.

# பேரழிவின் மடியில் பொஸ்னியா?



யூகோஸ்லாவியா சோசலிசத்தைக் கைவிட்டது. யூகோஸ்லாவியாவின் கட்டுக்கோப்பில் இருந்து பொஸ்னியா பிரிந்து சென்றது.

பிரிந்ததோடு பொஸ்னியாவின் சேர்பியர்கள், முஸ்லிம்கள் மற்றும் குரோதியர்கள் இடையே இன மோதல்கள் வெடித்தன.

பொஸ்னியாவின் முஸ்லிம்கள் 44 வீதம்.

போரின் இழப்புக்களால் இப்போது அந்த வீதம் குறைந்திருக்கக் கூடும்.

பொஸ்னியா உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர ஐ.நா. சபை எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை.

முஸ்லிம்கள் வதைக்கப்படுகின்றனர். இருண்ட சிறைகளுக்குள் அடைக்கப்படுகின்றனர்.

தாம் வாழ்ந்த பிரதேசங்களை முஸ்லிம்கள் பறிகொடுத்துள்ளனர்.

துப்பாக்கி முனையில் அவர்களின் காணிகள் எழுதி வாங்கப்படுகின்றன.

காணி பூமியை எழுதிக் கொடுத்தால் உயிரோடு விடுவதாக அதிகாரிகள் மிரட்டுகிறார்கள்.

இதிலும் கொடுமை என்னவென்றால் சொத்துக்களை எழுதி வாங்கிவிட்டு அவர்களை யுத்த முனைக்கு கொண்டு செல்கிறார்கள்.

அங்கு மண்மூட்டைகளுக்கு பதிலாக அவர்களே அரண்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள்.

சேர்பியர்களும், குரோதியர்களும் சூழ உள்ள பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் நிலை பரிதாபமானது.

அவர்களுக்கு உணவோ, மருத்துவப் பொருட்களோ போய்ச் சேர முடியாது.

மொஸ்டார் என்ற நகரத்தின் கிழக்குப் பிரதேசத்தை குரோதியர்கள் தமது தலைநகராகப் பிரகடனப்படுத்தினார்கள்.

இங்கு வாழ்ந்த முப்பத்தைந்தாயிரம் முஸ்லிம்கள் மூன்று மாதங்கள் உணவின்றி வாடினார்கள். தண்ணீர் எடுக்கக்கூட தடாகங்களுக்கு செல்ல முடியாதிருந்தது. இப்போது அமெரிக்கா வானிலிருந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டுள்ளது.

மூன்று இன மக்களுக்கும் சொந்தமான பிரதேசங்களை பகிர்ந்தளிக்கும் ஐ.நா. சபையின் முடிவும் நிராகரிக்கப்பட்டு விட்டது.

தொடரும் போரால் மூன்று இனத்திலும் இளவயதினர் மடிந்து வருகிறார்கள்.

விரைவில் ஒரு முடிவு காணப்படாவிட்டால் பொஸ்னியாவில் பேரழிவு நிச்சயம்.

## உலக ரவுண்டப்

### எய்ட்ஸ் தந்தவளே! எடு நஷ்ட ஈட்டை!!

பிரேசில் நாட்டைச் சேர்ந்த நடனசாணி லூசினி. வயது 28.

அமெரிக்காவின் மியாமி பகுதியைச் சேர்ந்தவர் புரூஸ் லீலாண்ட். வயது 29.

இருவரும் சந்தித்தனர். லூசினியின் அழகில் மயங்கிய புரூஸ் அவளைத் தன் துணைவியாக்கிக் கொண்டார்.

ஆனால் லூசினி அரங்கத்தில் மட்டும் ஆடும் அழகியல்ல. அந்தரங்கத்திலும் அழகை விருந்தாக்கி ஆடும் மதனராணி.

ஆட்டம் எய்ட்ஸ் என்னும் கொடிய நோய் கொடுத்தது.

லூசினியுடன் உறவு கொண்ட கணவன் புரூஸ்மீதும் எய்ட்ஸ் தொற்றிக் கொண்டது.

புரூஸ் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

18 கோடி டொலர் நஷ்டஈடு கேட்டார்.

புரூஸ் கேட்பது நியாயம். கொடு நஷ்ட ஈடு என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## சூதாட்டக் கப்பலை நெருப்பு தின்றது சூதாடிகளைக் கவலை தின்கிறது



ஹொங்கொங்கில் சூதாட்டம் தடை செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் சூதாடிகளுக்கு கவலை இல்லை.

ஹொங்கொங் கடல்பரப்பை தாண்டினால் போதும் - சர்வதேச கடல் எல்லையில் கப்பல் ஒன்று காத்திருக்கும்.

எஸ்.எஸ். நியூ ஓரியண்ட் பிரின்சஸ் என்பது கப்பலின் பெயர்.

சூதாட்டத்துக்காகவே தயாரிக்கப்பட்டு தரித்து நிற்கும் கப்பல் அது.

சூதாடிகளுக்கு கொண்டாட்டம்தான். கொண்டாட்டம். இப்போது தடைப்பட்டுவிட்டது.

அந்தக்கப்பலின் ஒரு அறையிலே பிடித்த தீ பரவி கப்பலை கருக்கி விட்டது.

மகா பாரதத்தில் சூதாட்டத்தால் நாட்டை இழந்தான் தருமன்.

தீயால் சூதாட்ட கப்பலை இழந்த சூதாடிகள் தருமனை விட அதிகமாக வருந்துகிறார்கள்.

கப்பல் எரியும் காட்சிதான் படத்தில் உள்ளது.

## நள்ளிரவில் கதவு தட்டும் பேய்? காஷ்மீர் மக்கள் ஆடுகிறார்கள் பயத்தில்!!

இந்தியாவில் காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் தொல்லை மக்களை அச்சுறுத்தியது.

இப்போது அதைவிடப் பயங்கரமான செய்தி ஒன்று காஷ்மீர் மக்களை நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

காஷ்மீர் பத்திரிகைகள் சமீபகாலமாக பேய்க்கதைகளை வெளியிட்டு வருகின்றன.

பத்தி, பத்தியாக செய்திகளும் பேய்களின் நடமாட்டம் பற்றி வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

நள்ளிரவில் காஷ்மீர் வீதிகளில் பேய்கள் நடமாடுகின்றன.

இளம் பெண்களில் அந்தப் பேய்களுக்கு ஒரு பிரியம். சீண்டித் துன்புறுத்துகின்றன.

சில இடங்களில் பேய்கள் ஆட்களை அடித்தும் போட்டு விட்டன.

இந்த செய்திகளை அறிந்த மக்கள் இருட்டத் தொட்ங்கியதும் வீட்டுக் கதவுகளை இறுகப் பூட்டியபடி உள்ளே அடைந்து கிடக்கின்றனர். நள்ளிரவில் ஜல் ஜல் சத்தமும் வீட்டைத் தட்டும் சத்தமும் கேட்கிறது.

பேய்ப் பயம் பரவியிருப்பதால் தெரு விளக்குகள் சரி செய்யப்பட்டுள்ளன.

பேயும் இல்லை. ஒரு இழவும் இல்லை. தீவிரவாதக் கும்பல் மக்களையும், பாதுகாப்பு படையையும் பயமுறுத்த கிளம்பிவிட்ட புரளி. கட்டுக்கதை"

என்று பாதுகாப்பு படையினர் கூறுகின்றனர்.

தீவிரவாதிகளைக் கேட்டால் "பாதுகாப்பு படையினர்தான் புரளி கிளப்புகின்றனர். பேய்ப் பயத்தால் யாரும் கதவைத் திறப்பதில்லை. இதனால் எங்களுக்கு பாதுகாப்பாக தஞ்சம் புக முடிவதில்லை" என்று கூறுகின்றனர். இருதரப்பும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகிறது. காஷ்மீர் மக்களை பேய் பயம் வாட்டிக் கொண்டிருக்கிறது.

ஏற்கனவே காஷ்மீரில் குளிர் வேறு. பேயின் பயமும் சேர்ந்தால் உடம்பு என்ன ஆட்டம் போடும்?

## நகர் ரவுண்டப்

-திருமலை நிருபரோடு ஒற்றன்-

# திரும்பி வந்த அகதிகள் சொன்ன கதைகள்! திகைக்க வைக்கும் தகவல்கள்!!

(சென்றவாரத்தின் மறுபகுதி)

பெருமாளுக்கு தமிழக அகதி வாழ்க்கையில் சோகங்களை மறக்கச் சில வசதிகள் இருந்தன.

தமிழ்நாட்டில் அவருக்கு உறவுக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் உதவியும் செய்தார்கள்.

அகதி வாழ்க்கையென்றாலும் அதற்கிடையேயும் ஒரு சந்தோஷமான காரியத்தையும் செய்து முடித்த திருப்தியோடு பெருமாள் பேசினார்.

"என் மூத்த மகளை அங்கேயே என் மருமகனுக்குக் கட்டிக் கொடுத்துவிட்டேன்." என்று சொன்னதில் திருப்தி முழுதாகத் தெரிந்தது.

பெருமாள் நுவரெலியாவைச் சேர்ந்தவர். அங்கு இனவாதம் மிரட்ட வடக்கு பாதுகாப்பான இடம் என்று வவுனியா சென்று குடியேறியவர்.

பெருமாளின் நினைப்பு பொய்த்தது. பதினெட்டு மாடுகள். எழுபத்தைந்து ஆடுகள். நூற்றிஐம்பது கோழிகள். எல்லாம் போயின.

அகதியானதும், இப்போது 'தாயகம் திரும்பிய அகதி'ப்பட்டமும்தான் மிஞ்சியிருக்கிறது.

[illegible]க்கு காரோட்டத் தெரியும். அதை வைத்து இங்கே வாழ்க்கையை ஓட்டும் நம்பிக்கையோடு நாடு திரும்பியிருக்கிறார்.

எமது நிருபர் இனப்பிரச்சனை பற்றி பெருமாளிடம் அபிப்பிராயம் கேட்டார்.

அரசியல்வாதிகளுக்கே இனப்பிரச்சனை எப்போது தீரும் என்று தெரியாது. இனப்பிரச்சனையே இல்லை என்று வேறு சொல்கிறார்கள்.

பாவம் அப்பாவி பெருமாளுக்கு என்ன தெரியும். எமது நிருபர் அபிப்பிராயம் கறப்பதில் படுகுறியாக இருந்ததால் குறுக்கிடப் பயமாக இருந்தது. காதை மட்டும் கொடுத்தோம்.

"எனக்கென்னங்க தெரியும். தமிழர் தாக்கப்படாமல் இருந்தால் சரிதான்" என்று சொல்லியபடி அருகில் நின்ற தன் பிள்ளையின் தலையைத் தடவினார் பெருமாள்.

பெருமாளிடம் விடைபெற்று விலகி இன்னொரு குடும்பத் தலைவரை நெருங்கினார் நமது நிருபர். இவர் மெல்லப் பேச்சுக்கொடுக்க ஆரம்பிக்க அவர் உஷாரானார்.

தனக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருப்பதால் எதையும் கதைக்க முடியாத நிலைமை என்றார். மிகத் தெளிவான ஆரோக்கியக் குரலில். அவர் கூறியதுதான் ஆச்சரியம்.

எதற்கடா வம்பு என்று ஒதுங்கும் ரகம்.

யாழ்ப்பாணத்திற்குப் போகப்போவதாகத் தெரிந்தது. இப்போதே அதற்கான பயிற்சியில் இறங்கிவிட்டார் என்று புரிந்தது.

'மிக்க நன்றி'யை அவருக்குப் பத்திரமாகக் கொடுத்துவிட்டு இன்னொருவரை அணுகி கறக்கத் தொடங்கினார் நிருபர். நமது பணி காதைக் கொடுப்பது. கொடுத்து நின்றோம்.

தட்டுமுட்டுச் சாமான்களில் தலைவைத்து மரநிழலில் காற்றுவாங்கியவர் கதைக்க ஆள் கிடைத்த சந்தோஷத்தில் எழுந்து முகம் மலர்ந்து அமர்ந்தார்.

அவர் கிருஷ்ணமூர்த்தி. இரண்டு பிள்ளைகள்.

கிருஷ்ணமூர்த்தியின் அனுபவம் வித்தியாசமானது.

வேலைதேடி குவைத்துக்குப் போனார். ஈராக்-குவைத் பிரச்சனை அவரை அகதியாக்கியது. சவூதிக்கு ஓடித் தப்பினார்.

அவர் மட்டுமல்ல, அவரோடு ஆயிரம்பேர் இலங்கை மக்கள் சவூதியில் அகதிமுகாமில் இருந்தனர்.

இலங்கை அரசின் உதவியோடு நாடு திரும்பினார். யாழ்ப்பாணம் நெல்லியடியில்தான் கிருஷ்ணமூர்த்தியின் வீடு இருந்தது.

நாடுதிரும்பிய கிருஷ்ணமூர்த்தி உறவுகளைக் காண ஊருக்கு ஓடினார்.

ஊர் இருந்தது. சில கட்டிடங்கள் காயத்தோடிருந்தன. சில காணாமல் போயிருந்தன.

கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்தையும் காணவில்லை.

தலையிலே அடித்துக்கொண்டு ஊரிலே விசாரிக்க அவர் குடும்பம் அகதியாக இந்தியா போனதை அறிய முடிந்தது.

கிருஷ்ணமூர்த்தி என்ற தமிழன் தனது தலைவிதியை, தமிழனாய்ப் பிறந்ததால் ஏற்பட்ட கதியை நினைத்தபடி கடல் கடந்து ஓடினான்.

எப்படியோ தேடிப்பிடித்து வேதாரணியம் முகாமில் இருந்த தனது மனைவியைக் கண்டு பிடித்தார்.

"அகதிகள் மீது தமிழக மக்கள் பரிவு கொண்டிருந்தனர். ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் நிலமை மோசமானது. ஊரவர்கள் முகாமைச் சுற்றிவளைத்து தாக்க வந்தார்கள்."

என்று சொன்னார் கிருஷ்ணமூர்த்தி.

"ஊரவர் திரண்டுவந்ததைக்கண்ட முகாம் காவலாளி ஓடித் தப்பிவிட்டார். முகாமிலிருந்த குழந்தைகளையும் பெண்களையும் பாதுகாப்பான இடத்தில் அமர்த்தினோம். வேறு வழியின்றி ஊரவர்களை எதிர்க்கத் தயாரானோம்."

என்று பதட்டமான பழைய நினைவுகளை கூறிய கிருஷ்ணமூர்த்தி, பல இரவுகள் அகதிமுகாமில் இருந்தவர்கள் தூக்கத்தை தொலைத்துவிட்டு பயத்தோடு இருந்ததாகக் கூறினார்.



"எம்மிடம் நவீன ஆயுதங்கள் இருக்கலாம் என்ற பயத்தில் ஊரவர்கள் உள்ளே வர அஞ்சினார்கள். அதனால் தப்பினோம்"

என்று சிரித்தபடி சொல்லி முடித்தார். அடைக்கலம் கொடுத்தவர்களை எதிரிகளாக்கியதும் ஆயுதக் கலாசாரம்தான்.

அகதிகளைக் காத்ததும் அந்த ஆயுதக் கலாசாரம் விதைத்த பயம்தான்.

ராஜீவ் கொலைக்கு பின் தேடுதல் வேட்டை என்ற பெயரில் அகதிகள் எதிர்நோக்கிய சிரமங்கள் ஏராளம்.

சந்தேகப்பார்வைகள், வேண்டாத விருந்தாளிகள் போல் நடத்தப்பட்டமை என்று ராஜீவ் கொலை நிலமையைத் தலைகீழ் ஆக்கியது.

அகதிவாழ்வில் தமிழக மண்ணில் மலர்ந்த தனது இரண்டாவது குழந்தையை தூக்கிக் காண்பித்தார் கிருஷ்ணமூர்த்தி. அந்தக் குழந்தையின் எதிர்காலம் எப்படி அமையுமோ? கவலையோடு கன்னத்தில் தட்டிவிட்டு அவரிடம் விடைபெற்றோம்.

நம்மை மோப்பம் பிடித்து தானாக வந்து பேச்சுக் கொடுத்தார் ஒரு முதியவர். பெயர் சொல்ல விரும்பவில்லை. நாமும் வற்புறுத்தவில்லை.

அகதிகளின் பெயர் கெட்டதற்கு அகதிகளில் சிலரும் காரணம் என்பது அவரது வாதம்.

நிறை போதையில் தமிழகத்தவர்களோடு பிரச்சனைகளை விலைக்கு வாங்கியவர்கள் இருக்கிறார்கள். நமது மரியாதையை அவர்கள் தண்ணியில் கரைத்து விட்டார்கள் என்பது அவரது கோபம்.

இன்னொரு விசயத்தையும் அவர் சொன்னார்.

"ஒரு சில பெண்கள் முகாமை விட்டு வெளியே போய் முறை தவறி நடந்து கொண்டார்கள். பணம் தேடும் நோக்கமே மேலோங்கியிருந்தது."

கசப்போடு அவர் கூறியவை நிறைய. பெண்களைத் தேடி முகாம் பகுதிக்கு ஆட்கள் வரத் தொடங்கி விட்டார்கள்.

அவர்களை வைத்துப் பிழைக்க முகாமுக்குள்ளும் வெளியிலும் சிலர் இருந்தார்கள். வாடகையில் ஒரு பகுதி அவர்களுக்கு. உடல் நோகாத உழைப்பு.

ஊரவர்களும் விசயம் தெரிய வெட்கமாகிப் போனது. அது மட்டுமல்லாமல் ஒரு சிலரின் நடவடிக்கையால் முகாமில் இருந்த ஏனைய பெண்களுக்கும் தலைகுனிவு.

கேட்க கவலையாக இருந்தது. வயிற்றுப் பசி தீர்க்க உடலை விலையாக்குபவர்களை விட்டுவிடலாம். ஆடம்பர மோகத்தில் உடல் வியாபாரம் செய்பவர்கள் மோசம். அதிலும் அவர்களை வைத்துப் பிழைப்பவர்களை முறித்துப் போடவேண்டும்.

முதியவரிடமிருந்து விடைபெற்றுச் செல்ல எங்கே உடைந்து விடுவாரோ என்ற மெலிந்த தோற்றத்தோடு ஒருவர் நட்புடன் புன்னகைத்தார். பதிலுக்கு புன்னகைத்த நமது நிருபர் "அவர்தான் திருமலை முன்னாள் நகரசபை உறுப்பினர் திரு.ந.துரைராஜா" என்று அறிமுகப்படுத்தினார்.

துரைராஜாவுக்கு ஏழு பிள்ளைகள். அகதி வாழ்வில் நொந்து போயிருக்கிறார் என்று தெரிந்தது.

தமிழக அகதி முகாமில் அதிகாரிகள் சிலர் அகதிகளின் மடியில் கைவைத்து சுருட்டியதை மேலதிகாரியிடம் சொல்லிவிட்டார்.

'தினமணி' பத்திரிகைக்கும் "அகதிகள் இன்னல் தீராதோ" என்று அதிகாரிகளின் சுரண்டலை சொல்லி கடிதம் எழுதியிருந்தாராம்.

தினமணியில் கடிதம் பார்த்த கலைஞர் கருணாநிதி தனது முரசொலி ஏட்டில் "துளைக்கிறது நெஞ்சை துரைராசாவின் கடிதம்" என்ற தலைப்பில் தனது வேதனையை வெளிப்படுத்தினார்.

அதன்பின்னர் உண்மை சொன்னதற்கான அச்சுறுத்தல்கள். சி.ஐ.டி விசாரணைகள்.

அகதி முகாம் வாழ்க்கை போதும் என்ற நிலையில் நாடு திரும்பிவிட்டார்.

அதிகாரிகள் நடத்தையின் அத்துமீறல் பற்றி அவர் சொல்லிக் கொண்டிருக்க,

அருகில் வந்தார் ஒருவர். பழைய தமிழரசுக் கட்சி அபிமானி அவர் என்பது நமது நிருபர் சொல்லித் தெரிந்தது.

தமது பெயரைப் போட வேண்டாம் என்று கூறிவிட்டு அகதிகள் மீது நம்மவர்கள் சிலர் சவாரி செய்த கதை சொன்னார்.

அகதிகளுக்கு உதவுவதாக அமைப்புக்களை உருவாக்கி, வெளிநாடுகளிடம் இருந்து நிதி பெறுகிறார்கள். பெறப்படுவது ஒழுங்காகப் போய் சேருகிறதா என்று யார் கவனிப்பது?

லாபகரமான தொழில் மாதிரி நிவாரண அமைப்புக்களை மாற்றிவரும் சிலரால் நல்ல அமைப்புக்களுக்கும் கெட்ட பெயர்.

தந்தை செல்வாவின் புத்திரர்களில் ஒருவரான திரு. சந்திரகாசன் "ஈழ ஏதிலிகள் புனர்வாழ்வுக் கழகம்" என்ற பெயரில் அங்கொரு அமைப்பு நடத்துகிறார்.

அது பற்றிக் குறையாகச் சொன்னார் அந்த அபிமானி. அவரது அபிப்பிராயம் அது. காதில் வாங்கி வைத்துக் கொண்டோம்.

அந்த இடம் விட்டு சற்று நகர்ந்த போது பெருந்தொகையான பொட்டலங்களுடன் இருந்தவரைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

"இத்தனை பொருட்களும் எப்படி வாங்கி வந்தீர்கள்." என்று வினா விடுத்தார் நமது நிருபர்.

அவர் அரிச்சந்திரனுக்கு உறவாக இருக்க வேண்டும். உண்மை பேசினார்.

"பொருட்களைக் கொண்டு வந்தது நான்தான். ஆனால் பொருட்கள் என்னுடையதல்ல" என்று புதிர் போட்டார்.

குழப்பமாய் நாம் பார்க்க சிரித்தபடி தொடர்ந்தார்.

"அகதிகளுக்கு சுங்கத்தீர்வை, பரிசோதனை என்பவை இல்லையென்பதால் வியாபாரிகள் சிலர் தமது பொருள் பொதிகளை அகதிகளிடம் கொடுத்துவிடுகின்றனர். கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஒரு கூலி கொடுக்கப்படும்."

வியாபாரிகள் சிலரின் தந்திரம் தெரிந்து கொண்டோம்.

"ஊசிமுனை நுழையாத இடத்திலும் தந்திரமான வியாபாரி நுழைந்து விடுவான்" என்று ஒரு புதுமொழி இயற்றினால் தவறில்லை.

நேரம் இரண்டுமணி என்றது கையில் கட்டியிருந்தது.

பிரச்சனைகள் தீரவில்லை என்றாலும் நாடு திரும்பியது ஏதோ ஒருவகைத் திருப்தியைக் கொடுத்திருப்பதை அகதிகள் முகங்களில் படித்துக் கொண்டு விடை பெற்றோம்.

அகதிகள் திரும்பி வருதல் என்பது பிரச்சனைகள் தீர்ந்தன. பாதுகாப்பு உத்தரவாதம் படு கெட்டி என்று அர்த்தமல்ல!

அதுதான் நமது அபிப்பிராயம்.

அலசுவது–இராஜதந்திரி

# வல்வெட்டித்துறையிலிருந்து —அமெரிக்காவரை சென்ற அன்னபூரணி!

மணலாறுப் (வெலிஓயா) பகுதியில் ஜனகபுர இராணுவ முகாம் மீது புலிகள் மேற்கொண்டிருந்த பாரிய தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்தும் அரச படையினர் விடுபடுமுன்னர், வடக்கே கடற்படையினர் மீது புலிகள் கடந்த வாரங்களில் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். இத்தாக்குதல்கள் கிளாலிக் கடல் நீரேரிப் பகுதியிலும், பருத்தித்துறைக் கடலிலும் இடம் பெற்றிருந்தன.

கடற்படையினரின் படகுகள் நிர்மூலமாக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரிகள் உட்பட படைவீரர்கள் பலரும் இத் தாக்குதல்களின் போது கொல்லப் பட்டிருந்தனர்.

தரையிலேயே இது வரைகாலமும் பெரியளவிலான தாக்குதல்களை மேற்கொண்டு வந்த புலிகள் தற்போது கடலிலும் துணிகரமாக இயங்கத் தொடங்கியுள்ளதையே கடற்படையினர் மீதான அவர்களது தாக்குதல் வெளிப் படுத்துகின்றது.

வடக்கே தமிழ்த் தீவிரவாதப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்தே, தமிழ்ப் போராளிகள் தரையிலும், கடலிலும் ஏககாலத்தில் செயற்பட்டிருந்தனர். தரையில் மட்டுமல்லாது, பேரலைகளைக் கொண்டிருந்த பாக்கு நீரிணைப் பிரதேசம், வங்காள விரிகுடா போன்ற நீர்ப் பிரதேசங்களில் பல ஆபத்தான அனுபவங்களுக்கும் அவர்கள் முகங் கொடுத்திருந்தனர்.

எனவே தரையில் மட்டுமல்லாது, கடலிலும் எத்தகைய பாரதூரமான நிலைமைகளையும் சமாளிக்கக்கூடிய தன்மை படைத்தவர்களாகவே புலிகள் விளங்குகின்றனர்.

இந்தியாவில் தமிழகத்தில் இலங்கைத் தமிழ் போராட்டக்குழுக்கள் தஞ்சமடைந்திருந்தவேளை, அங்கிருந்து யாழ் குடா நாட்டுக்கு தமிழ்ப் போராளிகள் கடல் வழியாகவே பயணங்களை மேற்கொண்டிருந்தனர். இதனால் அனுபவ ரீதியாக கடலோடும் திறன் அவர்களிடம் அபரிமிதமாகவே விளங்குகின்றது.

ஆனால் தற்போது தமிழ்ப் போராட்டக் குழுக்களில் புலிகள் தவிர ஏனைய அனைத்துக் குழுக்களுக்கும் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ளதையடுத்து, வடக்கின் தரை, கடல் பிரதேசங்களில் புலிகளே அரச படையினரின் ஏக எதிரணியினராகக் காணப்படுகின்றனர்.

கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் பலாலி இராணுவ முகாமிலிருந்தும் இராணுவத்தினர் மேற்கொண்ட 'ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி' என்ற இராணுவ நடவடிக்கையின் போது கீரிமலைப் பகுதியினூடாக கரையோரமாக முன்னேறிய இராணுவத்தினர், மாதகல், இளவாலை என்ற இடங்கள் வரை சென்றிருந்தனர்.



அப்போது மாதகல் பிரதேசத்தில் கடற்கரையோரமாக அண்டியிருந்த புலிகளின் கடற்பிரிவுத் தளமொன்றையும் இராணுவத்தினர் கைப்பற்றியிருந்தனர்.

இத்தளம் இராணுவத்தினரிடம் வீழ்ச்சியடைந்ததையடுத்து புலிகளின் கடற்பிரிவு பலத்த இழப்பை அடைந்திருந்தது என்ற அபிப்பிராயமே தோன்றியிருந்தது.


ஆயினும் கடந்த வாரங்களில் கிளாலிக் கடலேரி, பருத்தித்துறைக் கடல் பகுதிகளில் கடற்படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதல்கள், அவர்களின் கடற்பிரிவு விழிப்புடன் இயங்குவதையே புலப்படுத்தியுள்ளது.

இன்று உலகின் பல்வேறு பாகங்களிலும் தீவிரவாத இயக்கங்கள் இயங்கிவருகின்றன. இந்த இயக்கங்களில் பெரும்பாலானவை தரையில் கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களை மேற்கொள்வனவாகவே காணப்படுகின்றன.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளே உலகில் தமக்கென ஒரு கடற்படைப் பிரிவைக் கொண்டு இயங்குகின்ற தீவிரவாத இயக்கமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு வடக்கே நீர்ப்பிரதேசத்திலும் புலிகள் இராணுவரீதியாக இயங்குவதற்கு யாழ் குடா நாட்டின் புவியியல் அமைப்பே முக்கிய காரணமாக இருக்கின்றது.

இது தவிர யாழ்குடா நாட்டினர் கடல் பயணங்களை மேற்கொள்வதில் மிகுந்த அனுபவசாலிகளாகவே இருக்கின்றனர். குறிப்பாக வல்வெட்டித்துறை மக்கள் கடல் பயணங்கள் மட்டுமல்லாது கடல் வாணிபத்திலும் நன்கு அனுபவம் பெற்றவர்களாகவே விளங்குகின்றனர்.



வல்வெட்டித்துறையில் மரக் கலங்கள், பாய்மரக்கப்பல்கள் என்பனவும் தயாரிக்கப்பட்டிருந்ததோடு அவற்றை நீண்ட தூரப்பயணங்களுக்கும், வல்வெட்டித்துறை மாலுமிகள் பயன் படுத்தியிருந்தனர்.

1937ம் ஆண்டில் வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்கா வரை 'அன்னபூரணி' என்ற பாய் மரக்கப்பல் ஒன்றில் வல்வெட்டித்துறை மாலுமிகள் பயணஞ் செய்து வியத்தகு சாதனை ஒன்றைப் புரிந்திருந்தனர்.

'அன்னபூரணி', என்ற பாய்மரக் கப்பல் அக்காலத்தில் வல்வெட்டித் துறைக்கு விஜயம் செய்திருந்த கோடீஸ்வரரான அல்பேர்ட் றொபின்ஸன் என்ற அமெரிக்கர் ஒருவரின் விருப்பத்தின் பேரில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த கப்பல் கட்டும் நிபுணர்களினால் உருவாக்கப்பட்டிருந்தது.

பின்னர் அக்கப்பல் வல்வெட்டித் துறை மாலுமிகளினாலேயே, அதனை வாங்கியிருந்த அமெரிக்கரின் விருப்பத்தின் பேரில் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

வல்வெட்டித்துறையிலிருந்து ஆரம்பித்த 'அன்னபூரணி'யின் கடல் பயணம் இந்து மகாசமுத்திரம், அரபுக்கடல், செங்கடல் ஆகியனவற்றைக் கடந்து சூயஸ் கால்வாய் ஊடாக மத்தியதரைக் கடலை சென்றடைந்திருந்தது. பின்னர் அங்கிருந்தும் அத்திலாந்திக் மகா சமுத்திரத்தினுள் பிரவேசித்து நீண்டகடல் பயணத்தின் பின்னர் அன்னபூரணி அமெரிக்காவை சென்றடைந்திருந்தது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல் பயணம், யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறை மாலுமிகளின் கப்பல் கட்டும் திறமையையும் மாலுமி சாஸ்திர அறிவையும் பறைசாற்றுவதாக அமைந்திருந்தது.

வல்வெட்டித்துறைப் பிரதேசம் பன்னெடுங்காலமாகவே கடல் வாணிபத் துறைக்குப் பெயர் பெற்ற பகுதியாக இருந்து வருகின்றது.

பல நூற்றாண்டுகாலமாகவே வல்வெட்டித்துறை வாசிகள் இந்தியா, மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் கடல் வாணிபத் தொடர்புகளைக் கொண்டிருந்ததுடன், தமக்கு வேண்டிய மரக்கலங்களையும் தயாரித்து வந்திருந்தனர்.

வெல்வெட் (Velvet) என்றழைக்கப்படும் பட்டுத்துணியின் வியாபாரத்துக்குப் பெயர் பெற்ற பகுதியாக இருந்ததனாலேயே, வல்வெட்டித்துறை என்ற பெயரும் நாளடைவில் தோன்றலாயிற்று என்றே, வல்வெட்டித்துறை மக்கள் தமது பிரதேசத்தைப் பற்றிக் குறிப்பிடுவதுண்டு.

இது தவிர தனிப்பட்ட ரீதியிலும் வல்வெட்டித்துறை மக்கள் சமுத்திரத்தின் சவாலுக்கு முகங்கொடுத்தவர்களாகவே காணப்படுகின்றனர். திரு. நவரத்தின சாமி என்ற வல்வெட்டித்துறையின் நீச்சல் வீரர் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனைபடைத்திருந்தார்.

இவருக்குப் பின்னர் 'ஆழிக்குமரன்' ஆனந்தன் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனையாளராகியிருந்தார். ஆழிக்குமரன் ஆனந்தனும் வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரே.

தொடர்ந்து ஆழிக்குமரன் ஆனந்தன் சிலவருடங்களுக்கு முன்னர், பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையிலான ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதே இடை நடுவில் தமது உயிரை நீத்தார்.

எனவே யாழ் குடாநாட்டின் வல்வெட்டித்துறை வாசிகள் சிறந்த கடலோடிகளாகவும், சமுத்திர சாஸ்திரத்தில் நன்கு கைதேர்ந்தவர்களாகவுமே விளங்கிவந்துள்ளனர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனும் வல்வெட்டித்துறையையே பிறப்பிடமாகக் கொண்டவராக இருப்பதனால், புலிகள் தமது கடற் பிரிவிலும் தீவிர அக்கறை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

வடக்கே நீடித்துவரும் தாக்குதல்களில் படை அதிகாரிகளும், வீரர்களும் பெருமளவில் கொல்லப்பட்டு வருவது, வடக்கு-கிழக்கின் கொடிய உள்நாட்டு யுத்தம் இந்நாட்டில் விரைந்து தீர்க்கப்பட வேண்டுமென்பதனையே வலியுறுத்துவதாக இருக்கின்றது.

இளவயதிலேயே முப்படைகளிலும் சேர்ந்து பயிற்சிகளைப் பெற்று



வெளியேறும் படை அதிகாரிகள், தமது வாழ்க்கையைப் பூரணமாக அனுபவிக்க முடியாதவர்களாக உயிரை இழக்கின்றனர். அல்லது ஊனமாகி விடுகின்றனர்.

படை அதிகாரிகளாகப் பதவியேற்று சில காலம் சேவையாற்றிய பின்னர், வைபவரீதியான இராணுவச் சீருடையில் மணவாளக் கோலம் காணும் இளம் படை அதிகாரிகள், சில மாதங்கள் சென்றதும் ஏதாவது தாக்குதல்களில் சிக்குண்டு உயிரிழக்கின்றனர்.

இதனையடுத்து கம்பீரமாக மணவாளக் கோலத்தில் தோன்றிய ஓர் இராணுவ மணமகன், பிணமாகத் தனது சகாக்களினால் சுடுகாடு நோக்கிச் சுமந்து செல்லப்படுகின்றான்.

அவனின் பூதவுடலின் பின்னால் அவனைக் கைத்தலம் பற்றிய இளம் மனைவி உற்றார், உறவினர்களின் அரவணைப்பில் தலைவிரிகோலமாக நடந்து செல்கின்றாள்.

கொழும்பு பொரளை கனத்தை பொது மயானத்தின் முன்பாகவுள்ள பௌத்தலோக மாவத்தையின் நெடுஞ்சாலையிலேயே படை அதிகாரிகளின் இறுதி ஊர்வலங்கள் ஆரம்பமாவது வழக்கம்.

இந்த நீண்ட நெடுஞ்சாலை வழியே நடந்து செல்லும் போது வீதியில் தடித்த எழுத்துக்களில் குறியீடுகள் பல போடப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

இராணுவ அதிகாரிகளின் இறுதி ஊர்வலத்திற்கான படைப்பிரிவுகள், மற்றும் இறந்த வீரரின் பூதவுடலைத் தாங்கிச் செல்லும் பீரங்கி வண்டி, சோக இசை வழங்கும் இராணுவ பாண்ட் வாத்தியக் கோஷ்டி ஆகியன அணிவகுத்து நிற்கவேண்டிய இடங்களைக் குறிப்பதாகவே அக்குறியீடுகள் காணப்படுகின்றன.

எனவே கனத்தை பொது மயானத்தின் முன்பாக உள்ள நெடுஞ்சாலையில் நிரந்தரமாகவே இக்குறியீடுகள் போடப்பட்டிருப்பதை அவதானிக்கும் போது, படையினரின் இறுதிச் சடங்குகள் கொழும்பில் ஒரு நாளாந்த நிகழ்வாக இருப்பதையே அறியக்கூடியதாக இருக்கின்றது.

மறுபுறத்தே யாழ் குடா நாட்டில் சஞ்சரித்து அங்குள்ள நிலைமைகளை அவதானித்தால், திரும்புமிடமெல்லாம் போராட்டங்களின் போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களின் உருவப்படங்கள் நெடிதுயர்ந்த 'கட் அவுட்' சித்திரங்களாக இருப்பதையே காண முடிகின்றது.

அச்சித்திரங்களின் கீழே அவர்களது பிறப்பு, இறப்பு விபரங்களை நோக்கும் போது, இளந்துளிரிலேயே கருகியவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றனர்.

எனவே கொடிய போரினால் தோன்றியுள்ள நிலைமைகள், பலரை விதவைகளாக்கியும், மேலும் பலரை அநாதைகளாக்கியும், வேறு ஆயிரக் கணக்கானவர்களை அங்கவீனர்களாக ஊனமாக்கியும் விட்டுள்ளது.

## தொண்டாவின் தொண்டினை அரசு தட்டிக்கொடுக்க வேண்டும்!

ஆனால் ஆட்சியிலிருப்பவர்களோ வடக்கு-கிழக்கின் கொடிய யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதில் எதுவித அக்கறையுமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் தமது வரட்டுக் கௌரவங்களைப் பாதுகாக்க தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுப்பதிலேயே கரிசனை கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

இத்தகைய அநாவசியமான போர்க் காலச் சூழ்நிலையிலேயே அண்மையில் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்ட பின்னர் நாடு திரும்பியுள்ள அமைச்சர் எஸ். தொண்டமான், புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு உதவத் தாம் தயாராக இருப்பதாக அரசிடம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் திரு. தொண்டமான் இன்று அரசியலில் ஈடுபட்டுள்ள அரசியலாளர்களில் மிகவும் வயது முதிர்ந்தவராகக் காணப்படுகின்றார். கடந்த ஆகஸ்ட் மாதம் 30ந்திகதியன்று அவர் தமது 81வது பிறந்த தினத்தைக் கொண்டாடியிருந்தார்.

எண்பது வயதைக் கடந்துள்ள போதிலும் தமது, சிந்தனை, மற்றும் அரசியல்நடவடிக்கைகள் என்பவற்றில் எதுவித சலனமுமற்ற மிகவும் கூர்மையான கண்ணோட்டத்தைக் கொண்டவராகவே திரு. தொண்டமான் விளங்குகின்றார்.

மலையக மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து இன்று அவர்களை இந்த நாட்டில் பூரண உரிமைகள் பெற்றவர்களாக மாற்றிய பெருமை திரு. தொண்டமானையே சாரும்.

திரு. தொண்டமான் அண்மையில் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குப் பயணஞ் செய்து இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

பிரிட்டனிலும், பிரான்சிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களுடனும் அமைச்சர் தொண்டமான் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

பிரான்சில் புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் திரு. லோரன்ஸ் திலகரையும் அமைச்சர் தொண்டமான் சந்தித்து உரையாடியிருந்தார்.

திரு. தொண்டமான் இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்ப்பது தொடர்பாக தம்மால் தயாரிக்கப்பட்ட யோசனைகள் சிலவற்றை கடந்த ஆண்டு முன்வைத்திருந்தார்.

அத்துடன் அந்த யோசனைகளுடன் யாழ்ப்பாணம் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் திரு. தொண்டமான் முன்வந்திருந்தார்.

ஆனால் ஆட்சியாளர்கள் தொண்டாவின் இந்த முயற்சிக்குப் போதியளவு ஆதரவை வழங்கியிருக்கவில்லை.

தென்னிலங்கையின் பேரினவாத விஷமச் சக்திகள் திரு. தொண்டமான் மேற்கொள்ளவிருந்த சமாதான முயற்சியை ஏளனஞ் செய்திருந்ததுடன், அவர் முன் வைத்த யோசனைகளையும் கடுமையாக விமர்சித்திருந்தன.

இத்தகைய கண்மூடித்தனமான ஏளனங்கள், விமர்சனங்களின் விளைவாகவே இன்றைய இலங்கையின் இனப்பிரச்னை ஓர் உயிர்ப்பலி எடுக்கும் விவகாரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அண்மையில் ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் உதவியுடன் இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது குறித்து நோபல் பரிசு பெற்றவர்கள் முன்வைத்த யோசனைகளையும் இலங்கை அரசு நிராகரித்திருந்தது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் இலங்கையினாலேயே இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்திருந்தனர்.

எனவே அமைச்சர் திரு. தொண்டமான் இன்று ஒரு முதிர்ந்த அரசியல்வாதி என்ற நிலையில் இனப்பிரச்னைக்கான தீர்வைக் காண்பதில் ஒத்துழைக்க முன்வந்துள்ளார்.

ஆட்சியாளர்களும் தொண்டாவின் இம்முயற்சியைத் தட்டிக் கொடுத்து கொடிய இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் கூட்டாக இயங்க முன்வரவேண்டும். இல்லையேல் நாட்டில் மரணஓலம் நீடிப்பது ஒரு சகஜமான நிகழ்வாகவே மாறிவிடும்.

தகவல் பெட்டி

# உலகம் அழியுமா?

# விரைந்துவரும் விண்கோள் பூமியில் மோதுமா?

நாம் வாழும் பூமிக்குத்தான் எத்தனை அச்சுறுத்தல்கள். அபாயங்கள்.

சில செயற்கையானவை. சில இயற்கையானவை.

இப்போது இயற்கையான அபாயம் ஒன்று விண்வெளியில் இருந்து பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

அதனை விண்வெளி வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் கண்டுபிடித்து சொல்லியிருப்பதைக் கேட்டால் அதிர்ந்து போவீர்கள்.

விண்வெளியிலிருந்து விரைந்து வந்துகொண்டிருக்கும் ஏழு மைல் சுற்றளவான அந்த பிரமாண்டமான விண்கோள் பூமியில் மோதப் போகிறது.

அவ்வாறு அது மோதுமானால் என்ன நடக்கும்?

அதையும் அந்த விண்வெளி வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள்.



அப்போதும் பெரும்பாலான மக்கள் அழிவது உறுதி என்கின்றனர் அந்த விஞ்ஞானிகள்.

உடனடியாக நடவடிக்கை எடுத்து தீவிரமாக செயற்படா விட்டால் உலகின் கதி அவ்வளவு தான் என்கின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்ட அறிக்கையிலும் விரைந்து வரும் விண்கோள் ஏற்படுத்தப்போகும் விளைவுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

இப்போது கேள்வி இதுதான்:

வெல்லப்போவது விஞ்ஞானிகளா? அல்லது விரைந்து வரும் விண்கோளா?

விஞ்ஞானிகளே வெல்லட்டும். மோசமான நடுவராக விதி செயற்படாமல் இருந்தால் சரிதான்.

## இதற்கு முன்னரும்.......

பூமியை நோக்கி இதற்கு முன்னரும் பல விண்கோள்கள் விரைந்து அச்சுறுத்தியுள்ளன.

பூமியை நோக்கி வால் வெள்ளிகளும் விண்கல்களும் ஒவ்வொரு நாளும் வருகின்றன. தினசரி இத்தகைய விண் துகள்கள் சராசரி 200 வரை வருகின்றன. ஆனால் மிக நெருக்கமாக வந்து நழுவி விடுகின்றன.

1899ல் அமெரிக்காவின் கன்சாஸ் மாநில அளவிலான விண்கோள் பூமியை நோக்கி விரைந்து வந்தது. பூமியின் மேல் 1,200 மைல் வரை வந்த இக்கோள் திசைமாறி வேறு புறம் சென்று விட்டது. இருப்பினும் இதனுடைய வேகத்தின் தாக்கத்தால் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் சில பகுதிகளில் பெரும் மரங்களெல்லாம் முறிந்து வீழ்ந்து விட்டதாக வரலாற்றாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- ★ பூமியில் உள்ள ஜீவராசிகள் அழியும்.
- ★ சூழல் பாதிப்படையும்.
- ★ சீதோஷ்ண நிலை மாற்றமடைந்து குளிர் அதிகரிக்கும்.
- ★ அழியாமல் மிஞ்சியிருக்கும் ஜீவராசிகளுக்கும் உணவு கிடைக்காது.

இந்த விபரங்கள் கொம்பியூட்டர் மூலம் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றை கண்டறிந்து சொல்லியுள்ளவர்கள் சாதாரண வல்லுநர்கள் அல்ல.

அமெரிக்காவின் தேசிய விண்வெளி நிர்வாக நிறுவனமான 'நாசா'வைச் சேர்ந்தவர்கள்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனிடம் அந்தரங்கமான அறிக்கை ஒன்றை 'நாசா' வைச் சேர்ந்த வல்லுநர்கள் கையளித்துள்ளனர்.

ஏதாவது மார்க்கம் ஒன்றைக் கண்டுபிடித்து பூமியை நோக்கி வரும் விண்கோளை திசை திருப்புவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

"உடனடியாக ஒரு விண்வெளி மேடையினை அமைத்து, அணு ஏவுகணைகளை அங்கிருந்து அக்கோளை நோக்கி ஏவுவதன் மூலம் அதனை திசைதிருப்பலாமா என்று ஆராய்ந்து வருகிறோம்" இவ்வாறு கூறியிருக்கிறார் பன்னாட்டு விண்வெளி ஆய்வக நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் கஷ்ரவ் றிங்க்மான்.

இவ்வாறான ஏற்பாடுகள் 67 சதவீதம் தோல்வியைத் தழுவுவதே வழக்கம் என்று வேறு சில விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இதே போன்ற ஒரு விண்கோள் பூமியில் மோதியது. அதனால் பலவகையான ஜீவராசிகள் அழிந்து போயின.

# அதிரவில்லை அசையவில்லை வீடு எரிந்த போதிலும்

நாடு பற்றி எரிந்து கொண்டிருந்த போது பிடில் வாசித்துக் கொண்டிருந்த மன்னனின் கதையை அறிந்திருப்பீர்கள்.

தம் வீடு பற்றி எரிந்து கொண்டிருந்த போது ரி.வி பார்த்துக் கொண்டிருந்த குடும்பத்தின் கதை தெரியுமா உங்களுக்கு?

அதுவும் முதல் தடவையல்ல. இரண்டாவது தடவை.

பட்டும் அறிவு வராமல் துப்பறியும் தொடர் பார்த்துக் கொண்டிருந்த குடும்பம் அது.

ஆச்சரியம் வரத்தான் செய்யும். இப்படியும் நடந்திருக்கிறதோ என்று வியப்பு வினா தொடுக்கும்.

என்ன செய்வது ஆச்சரியங்களும் நடக்கத்தானே செய்கின்றன!

இனி நடந்த கதை அறியுங்கள்.

தென் ஆபிரிக்காவிலுள்ள போட் எலிஸபத் என்ற நகரத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. ரோபட் தனது மனைவி சால்லி மற்றும் இவர்களுடைய மகள் பாற் ஆகிய மூவருமே இக்குடும்பத்தவராவர். 1990ஆம் ஆண்டு 'மேடர் ஷி றோட்' (கொலை என்று அவள் எழுதினாள்) என்ற மர்மத் தொடர் தொலைக் காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அப்போதுதான் இவர்களுடைய வீட்டில் தீ பிடித்துக் கொண்டு எரிய ஆரம்பித்தது. தீ பரவிக் கொண்டிருந்த போதிலும் இவர்களால் அதனைக் கவனிக்க முடியாமல் முழுக் கவனத்தையும் காட்சியில் பதித்திருந்தனர். அயலவர்கள் தக்க தருணத்தில் உதவிக்கு வந்தமையினால் இவர்கள் மூவரும் காப்பாற்றப்பட்டனர்.

இவர்கள் வேறு வீட்டில் குடியேறினார்கள். இம்முறையும் அதே மர்மத் தொடர் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இத்தடவையும் அதே கதி அவர்களுக்கு ஏற்பட்டது. திருமதி பூத் சமயலறையில் மீன் பொரித்துக் கொண்டிருக்கும் போது தொலைக்காட்சி ஆரம்பமாகியிருக்கிறது. அடுப்பை அணைக்காமல் அப்படியே விட்டுவிட்டு வந்த அவர் மெய் மறந்து காட்சியுடன் ஒன்றிப் போய் விட்டார். அடுப்பிலிருந்து தீ முதலில் யன்னல் கேட்டின் துணியை தாவியது. படிப்படியாக வீடு முழுவதும் தீ கொடூரமாகப் பரவ ஆரம்பித்து விட்டது.

"ஏதோ எரிந்து கொண்டிருக்கும் மணத்தை என்னால முகர முடிந்தது. இருப்பினும் தொலைக்காட்சியிலிடம்பெற்ற காட்சியைப் பாராமல் எழுந்திருக்க எங்களால் முடியவேயில்லை" என்று கூறினார் திருமதி பூத். இவருடைய கணவர் ரொபட் பூத் கதை இன்னும் சுவாரசியமாக இருக்கிறது. "வீடு முழுவதும் தீ பரவிக் கொண்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. தரை விரிப்புகள், சுவர் எங்கணுமே- எங்களைச் சுற்றி நெருப்புத் தகதகவென்று எரியத் தொடங்கிவிட்டது. இடையில் வரும் விளம்பரம் ஒளிபரப்பாகும் வேளையில் நெருப்பணைக்கும் படையினருக்கு தொலைபேசி அழைப்புக் கொடுக்கலாம் என்று இருந்துவிட்டோம். விளம்பரமும் வந்தது. ஆனால் அப்போதும் எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை, மிகவும் பரபரப்பான காட்சி அடுத்த கட்டமாக அமைந்தது. அந்தக் கொலையைச் செய்தவர் யார் என்று அறிய வேண்டிய ஆர்வத்தில் நாங்கள் எவரும் அதே இருக்கைகளை விட்டு அசயாமல் இருந்து விட்டோம்" என்று அவர் தெரிவித்தார்.

இந்த இருவிபத்துக்களுக்கும் காரணமாக இருந்தது ஒரே கதைத் தொடர்தான். அது மட்டுமல்லாமல் முதல் தடவையில் இம்மூவருடைய உயிர்களையும் காப்பாற்ற வந்த அதே தீ அணைக்கும் படை அதிகாரியே இம்முறையும் வந்திருக்கிறார். காப்டன் மைக்கேல் ஸ்டெயின் என்ற அந்த அதிகாரி "இவர்கள் ஒரு தடவை பட்ட அநுபவத்திலிருந்து அறிவு பெற முடியாத மூடர்கள்" என்று பலவாறாகத் திட்டியிருக்கிறார்.



வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததைக் கண்ட அயல் வீட்டுப் பெண் ஒருவர் போட் எலிஸபத் நகரத் தீ அணைக்கும் படையினருக்கு தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு அறிவித்திருக்கிறார்.

அப்படைக்குத் தலைமை தாங்கி வந்தவர் காப்டன் ஸ்டெயின், "நாங்கள் சென்ற போது தீ வேகமாக எங்கும் பரவிவிட்டது. ஒரே பெரிய சோபாவில் மூவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தனர். மூச்சு விட முடியாமல் திணறிக் கொண்டும் கடுமையாக இருமிக் கொண்டும் அவர்கள் இருந்தனர். நாங்கள் அங்கு போனதைக் கூட அவர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை" என்றார். எங்கும் புகை சூழ்ந்து தொலைக் காட்சித் திரையே சரியாகத் தெரியாதிருந்த போதிலும் அவர்கள் அக்காட்சியிலேயே மூழ்கியிருந்தமையினால் அவர்களை பலாத்காரமாகவே வெளியில் இழுத்துக் கொண்டுவர வேண்டியிருந்தது என்று காப்டன் ஸ்டெயின் சொன்னார்.

இவர்கள் வெளியே கொண்டுவரப்பட்டதும் இவர்களுக்கு மருத்துவ உதவியாளர்களால் சுவாசத்துக்கான முதலுதவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. "இதில் வேடிக்கை என்னவென்றால், இவர்களைக் கட்டுப்படுத்தி ஒரே இடத்தில் அமைதிப்படுத்தி வைக்க முடியாமற் போய் விட்டது. தொலைக்காட்சி நாடகத் தொடரின் முடிவு எவ்வாறிருக்கும் என்பதைப் பார்க்க இவர்கள் மூவரும் அயலில் உள்ள வீடுகளை நோக்கி ஓட ஆரம்பித்து விட்டனர். இருபது நிமிடங்களுக்கு மேல் இவர்களுடன் மல்லுக் கட்ட வேண்டியதாயிற்று" என்று மருத்துவ உதவியாளர் ஜேம்ஸ் புறூடி சொன்னார்.

# நீங்கள் எவ்வழி -உங்கள் குழந்தையும்....?



பெற்றோரைப் பார்த்தே குழந்தைகள் நடக்கின்றன. எனவே உங்களுடைய பழக்கவழக்கங்கள் தான் அவர்களுக்கு வழிகாட்டி. தவறான காரியங்களை நீங்கள் செய்து கொண்டு குழந்தைகளைத் திருத்த முடியாது.

பிறந்த குழந்தைகளுக்குச் சில நாட்களுக்குக் காது கேட்பதில்லை. இதைக் கொண்டு அவை செவிடு என்று முடிவு செய்து விடக்கூடாது. காதிலே இருக்கும் திரவம் போன பின்பு தான் காது கேட்கும். இதற்குச் சில நாட்கள் ஆகும்.

குழந்தையின் இரண்டு கண்களும் ஆரம்பத்தில் ஏககாலத்தில் ஒன்றையே பார்ப்பதில்லை. அதனால் ஒன்றரைக்கண் போல் தோற்றமளிக்கும். ஒரு வயதாகும் வரை இரண்டு கண்களையும் சேர்ந்தாற் போல் உபயோகிக்க குழந்தைக்குத் தெரிவதில்லை. பின்னரே கற்றுக் கொள்கிறது.

# பள பளப்பாகட்டும் உங்கள் பவழமுகம்!



முகத்தில் தோன்றும் பருக்கள் பெண்களின் முக அழகைக் கெடுக்கும். முகப்பரு வராமல் கவனித்துக் கொள்ள வேண்டும். சருமத்தின் உட்புறம் அழுக்குகள் சேருவது தான் முகப்பருவின் தோற்றத்திற்கு அடிப்படை. உடலை ஆரோக்கிய நிலையில் வைத்திருக்க வேண்டும். உடற்கழிவுகளை அப்போதைக் கப்போது முறைப்படி அகற்ற வேண்டும். இவ்வாறெல்லாம் முயற்சியில் ஈடுபட்டால் முகப்பரு வராமலே தடுத்து விடமுடியும்.

★ முகப்பருவைக் கிள்ளி விடக்கூடாது. கிள்ளி விட்டால் புரையோடி முகத்தை விகாரப்படுத்துவதோடு சில சமயம் உயிருக்குக் கூட ஆபத்தைத் தோற்றுவிக்கும்.

★ இரவு படுக்கைக்குப் போகுமுன் எலுமிச்சம் பழத்தைப் பாதியாக அரிந்து, முகப்பரு உள்ள இடத்தில் இலேசாகப் பூசி, சில நிமிடங்கள் கழித்து குளிர்ச்சியான நீரைக் கொண்டு கழுவி விட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் செய்து வந்தால் முகப்பரு அகன்று விடும்.

★ ஒரு பாத்திரம் நிறைந்த கொதித்த தண்ணீரை வாய் அகன்ற பாத்திரத்தில் ஊற்றி அதிலிருந்து அப்போது நீராவியை வெளியே செல்லாதபடி கனமான போர்வையால் முக்காடு போட்டு முகத்தை நீராவியில் காட்டுவது நல்லது. முகப்பருவை அகற்ற இது ஓர் எளிய முறை.

# சமைப்போம் சுவைப்போம்

## பருப்பு, கிழங்கு ஸ்பெசல் குழம்பு

| | |
|---|---|
| மைசூர் பருப்பு | - 1/4 கிலோ |
| வெங்காயம் (வெட்டியது) | - 1/4 கிலோ |
| உருளைக்கிழங்கு (வெட்டியது) | - 1/4 கிலோ |
| தக்காளி (வெட்டியது) | - 1/4 கிலோ |
| உள்ளி | - 100 கிராம் |
| இஞ்சி | - 2 துண்டு |
| பச்சை மிளகாய் (வெட்டியது) | - 6 |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| ரம்பை இலை | - சிறிதளவு |
| கடுகு | - ஒரு தேக்கரண்டி |
| பெருஞ்சீரகம் | - ஒரு தேக்கரண்டி |
| மஞ்சள் தூள் | - சிறிதளவு |
| மிளகுத்தூள் | - சிறிதளவு |
| எண்ணெய் | - 2 மேசைக்கரண்டி |
| தேங்காய்ப் பால் | - 1 கப் |
| இரண்டாம் பால் | - 2 கப் |
| எலுமிச்சம் பழம் | - சுவைக்கேற்ப |
| ஏலக்காய் | - சிறிதளவு |
| உப்பு | - சுவைக்கேற்ப |
| கறுவா | - சிறிதளவு. |

**செய்முறை:**

பருப்பைச் சுத்தம் செய்து நீர் விட்டுக் கழுவவும். கழுவிய பருப்பை ஒரு பாத்திரத்தில் இட்டு அதனுள் இரண்டாந்தடவை பிழிந்த பால், வெட்டிய உருளைக்கிழங்கு, தக்காளி, மஞ்சள் தூள் ஆகியவற்றை நன்றாக வேகவிடவும். பருப்பு நன்றாக வெந்ததும், வேறொரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றிக் கொதித்ததும் அதனுள் வெங்காயம், பச்சைமிளகாய், உள்ளி, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை, ரம்பை இலை, பெருஞ்சீரகம், கடுகு, ஏலக்காய், கறுவா ஆகியவற்றை இட்டு வதக்கவும். பொன்னிறமாகப் பொரிந்ததும் அப்பாத்திரத்தினுள் பருப்பைக் கொட்டி தேங்காய்ப்பால், உப்பு எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றை விட்டுக் குறைந்த வெப்பத்தில் மேலும் சில நிமிடங்கள் வெந்ததும் இறக்கி வைக்கவும்.

## சமையல் குறிப்புகள்

- சமைக்கும் போது கொதிநிலை வந்ததும் அடுப்பைத் தணிவாக எரிய விடுங்கள். இதனால் 40 சதவீதமான காஸ் மற்றும் மண்ணெண்ணை மிச்சம்.
- சமைக்கும் அடுப்பு நல்ல காற்று வசதியுடன் நேராகச் சீராக இருக்க வேண்டும்.
- எரிபொருளுக்குத் தகுந்த அளவில் காற்று கலந்திருக்க வேண்டும். எனவே அடுப்பின் வாய் அகலமாக இருக்க வேண்டும்.
- வேக விடுவதற்குத் தண்ணீரைத் தேவைக்கு அதிகமாக வைக்காமல், தேவையான அளவு வையுங்கள். இதனால் விரைவாகச் சமைக்கலாம்.
- எப்போதும் மூடி வைத்துச் சமையுங்கள். இதனால் வேகமாகச் சமைக்கலாம். உணவுச் சத்தும் குறைவதில்லை.
- ஜுவாலை முழுவதும், தாங்கக் கூடிய வாய் அகன்ற தட்டையான பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள். இந்த வகையிலும் வேகமாகச் சமைக்கலாம்.
- ஸ்டவ்வைப் பற்றவைக்கும் முன் எல்லாப் பொருட்களையும் தயாராய் வைத்துக்கொள்ளுங்கள்.
- ஒரு நாளைக்கு வேண்டிய உணவை ஒரே நேரத்தில் சமைத்தால் நேரமும் எரிபொருளும் மிச்சம்.

# நீங்களும் தைக்கலாம்

## 3வயது ஆண் குழந்தைக்கான சட்டை

முன் பக்கம்
சட்டையின் உயரம் - 16 1/2"
அகலம் - 7 1/2"
தோள் நீளம் - 3 3/4"+2= 5 3/4"
அகருள் சுற்றளவு - 6"
தோளில் இருந்து நடு மார்பு வரை உயரம் - 6 1/2"
கழுத்தின் சுற்றளவு - 12 1/2"÷6 = 2 1/4"
பக்கமுட்டு - 10 1/2"

வெளியே 3/4" பின் 1" எடுப்பது பொத்தான் தைப்பதற்கு. சட்டை தைக்கும் போது ஒரு துணியை E,F உடன் உள்ள கோட்டுடன் மடித்து விட வேண்டும். ஒரு துணியை A,C உடன் உள்ள கோட்டுடன் மடித்து விட வேண்டும். E,F மடித்த துணியில் பொத்தான் பொருத்த வேண்டும்.


சட்டையின் பின் பக்கம்
சட்டையின் உயரம்- 16 1/2"
சட்டையின் அகலம்- 7 1/2"
தோள் நீளம் - 3 3/4+2= 5 3/4"
அக்குள் சுற்றளவு-6"
தோளில் இருந்து நடு மார்பு வரை உயரம்- 6 1/2"
கழுத்தின் சுற்றளவு- 2 1/4 (12 1/2÷ 6 = 2 1/4")
பக்கமுட்டு- 10 1/2"

**கொலர்**
முன் பக்கத்தினதும் பின் பக்க கழுத்தினதும் அளவை அளக்க. நீளம் 6"வரும். அகலம் 2" எடுத்து அகலப் பக்கம் கூடுதலாக 1/2" எடுக்க வேண்டும். கீழும் உட்குடைவாக 1/4" எடுக்க வேண்டும். அகலப் பக்கத்தில் சரிவாக 3/4" எடுக்க வேண்டும்.


**கை**
கையின் நீளம்- 5 1/2"
கையின் பின் பக்க அகலம்- 11+ 1/2= 11 1/2÷ 2 = 5 3/4"
கையின் முன்பக்க அளவு- 10+1/2= 10 1/2÷2= 5 1/4"
நுனிக் கையின் மடிப்பு- 3 1/2"

குறிப்பு:- ஆண் குழந்தைகளின் ஆடையின் கையின் முன் பக்கம், பின் பக்கம் குறிப்பிடத் தேவையில்லை.


கொலர்





கை




முன் பக்கம்




பின் பக்கம்





# லேடீஸ் ஸ்பெசல்

## வீட்டுக் குறிப்புக்கள்



தயிரில் சீனி சேர்த்துச் சாப்பிடுவது என்றால் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். நல்ல தரமான பீட்றூட்டை துண்டு துண்டாக நறுக்கி தயிருடன் கலந்து, குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுங்கள். சுவையாக இருப்பதோடு, உடலுக்கும் நல்லது.



சோபாவில் போடப்படும் குஷன்களுக்கு எப்போது உறை தைப்பதாக இருந்தாலும், சோபாவின் வடிவமைப்பு-அது வைக்கப்பட்டுள்ள சூழலுக்குப் பொருத்தமான கலரிலேயே உறை தைக்க வேண்டும். அப்போது தான் பார்க்க அழகாக இருக்கும்.

•

அப்பமாவு புளிக்காமல் இருந்தாலோ, பலகாரம் நன்றாக மெத்தென்று வரவேண்டும் என்றாலோ சிறிதளவு லெமனேட் கலந்து கொள்ளுங்கள். சுவையாக இருப்பதோடு மெத்தென்று இருக்கும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.


சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.




சாலட் செய்யும் போது தக்காளியை வட்டவட்டமாக நறுக்கிப் போடுவீர்கள் அல்லவா? தக்காளியைக் கடையிலிருந்து வாங்கி வந்து அப்படியே நறுக்கிப் போடாமல் சிறிது நேரம் ஃபிரிட்ஜில் வைத்திருங்கள். பிறகு வட்டவட்டமாக நறுக்கி மீண்டும் ஃபிரிட்ஜில் அரைமணி நேரம் வைத்திருந்து சாலட்டில் கலக்கவும். இதனால் தக்காளி, சாலட்டில் கரைந்துபோய் விடாமல் இருக்கும்.



கம்பளி ஆடைகளில் பட்ட கறை எவ்வளவுதான் தோய்த்தாலும் எளிதில் போகாது. துணிதான் பாழாகி விடும். ஒரு கப் வெது வெதுப்பான நீரில், இரண்டு தேக்கரண்டி போரக்ஸ் பவுடரைக் கலந்து கொள்ளவும். கறைபட்ட இடத்தில் இந்தக் கரைசலை ஊற்றி சிறிது நேரம் ஊற வையுங்கள். பிறகு பஞ்சால் அழுத்தித் துடைக்க, கறை இருந்த இடம் தெரியாமல் போய் விடும்.



வாரத்திற்கு ஒரு நாள் உங்கள் வீட்டு சமையல் அறை, மற்றும் குளிர்சாதனப் பெட்டி ஆகியவற்றைச் சுத்தப்படுத்த வேண்டும். சுத்தப்படுத்தும் போது, ஒரு பெரிய பாத்திரத்தில் வெது வெதுப்பான நீரில் ஒரு கப் அப்பச் சோடாவைக் கலந்து நன்றாகத் துடைத்து விட வேண்டும். சுத்தமாக இருப்பதுடன், பூச்சிகள் சேராமலும் இருக்கும்.

# சினி விசிட்



## கலராய் இருந்தால் கதாநாயகனா? மாறியது விதி. மாற்றியவர் விஜி

விஜயகாந்தின் சமீபத்திய படங்களில் சில சரியாகப் போகவில்லை.

ராஜதுரையில் விஜயகாந்த்



## காதோடு சொல்லுகிறோம்

★ நான்கு கவர்ச்சி நடிகைகள் முன்னாள் கவர்ச்சி நாயகி 'அனு' தலைமையில் ஒரு கூட்டம் நடத்தினார்களாம். ஹீரோயின்கள் எல்லாம் நெஞ்சோடு நெஞ்சு மோதி நடிக்கத் தொடங்கிவிட்டதால் இனி நம் ஆட்டம் எடுபடாது என்று சுமிதுமானவர் கூறினாராம். இறுதியில் புதிய உத்திகள் சிலதை பின்பற்றுவது என்று முடிவெடுத்தார்களாம். தற்போதைக்கு அது ரகசியமாம். உத்தி சொல்லிக் கொடுத்தவர் அனுபவானவர்தான் என்று பேச்சு.

★ இந்திப்படங்களில் ஆடுவதற்காக சென்ற சாந்த நடிகைக்கு மிதுனமான சக்கரவர்த்தி மீது அளவு கடந்த பற்றுதல் ஏற்பட்டுவிட்டதாம். மிதுனர் சென்னை வந்த போது ஸ்டுடியோவுக்கு தேடி ஓடினாராம். இருவரும் நீண்டநேரம் தனித்து பேசினார்களாம்.

★ 'கெள' நடிகை வீட்டில் எந்நேரமும் தொலைபேசி அலறுகிறதாம். வீட்டில் இருந்தபடியே 'இல்லை' என்று பதில் சொல்லுகிறார். காரணம் விரக்திதான். பல தயாரிப்பாளர்கள் கவர்ச்சி நடனமாட கூப்பிடுகிறார்கள். தொந்தரவு தாங்காமல் தொலைபேசியில் பொய் பேசுகிறார்.

★ 'கோழி கூவுது' நாயகிக்கு அடுத்த படத்தில் 'நாயகி' வேஷம் தருவதாகக் கூறி பவித்திர இயக்குநர் வாக்குக் கொடுத்தாராம். அதை நம்பி அவரது படத்தில் ஒரு கவர்ச்சி நடனமும் ஆடிவிட்டார். அத்தோடு இயக்குநர் வாக்குறுதியை மறந்துவிட்டார். நாயகி கோபத்தில் இருக்கிறார். வாக்குறுதியை நம்பி ஆடியது திரையில் மட்டுமல்லவாம்.

★ பூ நடிகையின் அலை ஓய்ந்து வருவதால் அந்த இடத்தைப் பிடிக்க கடும் போட்டி நடக்கிறது. சுகன்ய நடிகைதானே நம்பர் வன் என்று சொல்லித் திரிகிறார். ரஞ்சன நடிகை 'நான்தான்' அது என்கிறார்.

★ செண்பக நடிகைக்கு இயக்குநர் ஒருவரின் தொல்லை தாங்க முடியவில்லையாம். பூச் செண்டு கொடுத்து அனுப்புகிறாராம். ஒரு நாகரிகம் கருதி அதை வாங்கட்டாக. "பூவே சூடவா" என்று அழைக்கிறாராம்.

## தவக்களைக்கும் தெரியும்!

பச்சரிசியை இடித்தால் நொய்யாவது உண்டு. பாழும் காதலை நம்பினால் பொய்யாவதும் உண்டு. இந்த தத்துவ முத்தை சிந்தியவர் யார் தெரியுமோ? நம்ம தவக்களைதான். அட... இத்தனை சிறிய மனிதனிடம் எத்தனை பெரிய விசயம் இருக்கு!



கரிஷ்மா கபூர்

## வினிதாவுக்கு யோகம்தான்!

ஹாபூரியன் படத்தில் அருண் பாண்டியனுக்கு ஜோடியாக நடித்து வரும் வினிதா அப்படம் வெளி வருவதற்கு முன்பாகவே கட்டப்பொம்மன் திரைப்படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக நடிக்கிறார்.

தற்போது குட்டி பத்மினி ரவாரத் தொலைக்காட்சித் தொடரொன்றைத் தயாரித்து வருகிறார். இதில் வினிதா சி.ஐ.டியாக நடித்து வருகிறார். இந்தத் தொடரை மனோபாலா இயக்குகிறார்.

## தேவை முடிந்ததா? முகத்தை திருப்பு!

நடிகை ராதாவை மறந்திருக்க மாட்டார்கள். அவருக்கு குழந்தை பிறந்திருக்கிறது. கார்த்திகா என்று பெயர். பப்பாவில் முதல் பிறந்தநாள் கொண்டாடினார்கள். தமிழ் திரையுலக பெரும் புள்ளிகளுக்கு ராதா அழைப்பு அனுப்பியிருந்தார். யாரும் கண்டு கொள்ளவில்லை. நேரில் போய் வாழ்த்துச் சொன்னவர் மலையாள நடிகர் மோகன்லால் மட்டுமே. இதுதான் சினிமா உலகம். தேவை முடிந்தால் திரும்பியும் பார்க்காது.

## இசைக்கே முதலிடம்

பிரசாந் நடிக்கும் முத்துமணிமாலை கிராமிய சூழலில் உருவாகி வருகிறது. பிரசாந் ஜோடிகள் இருவர். ஒருவர் மதுபாலா. மற்றவர் சவுந்தர்யா. படத்தில் இசைக்குத்தான் முக்கியத்துவமாம். ஏழு பாடல்கள்.

இசையமைக்கப் போவதும் இருவர்தான் எம்.எஸ். விஸ்வநாதன். இளையராஜா.



பாதுகாப்பு படத்தில் அபிலாஷா

## கைவிட்டது தமிழ் படவுலகம்! கைதூக்கிவிட்டது கன்னடப் படவுலகம்!!

தமிழ்ப் படவுலகம் கைவிட்ட நடிகைகள் வேற்று மொழிப் படங்களில் கொடி கட்டிப் பறப்பது புதிய விசயமல்ல.

அந்தப் பட்டியலில் ஒருவர் ஸ்ரீபாநு. கன்னடப் படவுலகை கலக்கி வரும் நம்பர் வன் நடிகை.

'எங்க ஊரு சிப்பாய்' படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடித்தார். பின்னர் வாய்ப்பு வரவில்லை. அடுத்துப் போய் கன்னடப் படவுலகம் போனார். பெயரையும் ஸ்ரீசாந்தி என்று மாற்றிக் கொண்டார். அதிஷ்டக் காற்று அவரைத் தூக்கி உச்சத்தில் வைத்துவிட்டது.

இப்போது தான் தமிழ் படவுலகம் அவரைத் தேடிப் போயிருக்கிறது.

ஒரு வழிப்பாதை, காவல் பறவைகள் என்ற இரு தமிழ் படங்களில் நடித்து வருகிறார்.



## மதம்மாறிய மணமகள்! பெயரையும் மாற்றினார்!



வினோதினி

# காட்சிக்குத் தேவையா? கவர்ச்சிக்கு ஓ.கே!

வினோதினி குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர். இன்று முன்னணி நாயகியாக வளரத் துடித்துக் கொண்டிருப்பவர். சித்திரப் பூக்கள், வண்ண வண்ணப்பூக்கள் போன்ற படங்களின் கதாநாயகியாக புகழ் பெற்றவர். வினோதினியை நமது தமிழக சினிமா நிருபர் அருணா கண்ட பேட்டியும் பிரத்தியேகப் புகைப்படங்களும் இங்கே.

***நடிகையானது எப்படி?***

என்னோட அம்மா விகசாரின் அண்ணன் நடாத்திய நாடகக் கம்பனியில் நடித்துக் கொண்டிருந்தார். அப்போது விகசார் மனல் கயிறு படத்தின் கதை விவாதத்தில் இருந்தார். அப்போது மணல் கயிறு படத்தில் நடிப்பதற்கு நான்கு வயது சிறுவன் வேண்டும் என்று கேட்டார் - என்னைப் பார்த்த அவர் சிறுமியை சிறுவன் ஆக்கினார். மணல்கயிறு முதல் தொடர்ந்து விகசாரின் நந்து படத்தில் நடித்தேன். மற்றும் மண்ணுக்குள் வைரம், போலீஸ் போலீஸ் என்றபடங்களிலும் நடித்தேன். பின்னர் இரண்டு வருட இடைவெளியின் பின் எனது பதின்மூன்றாவது வயதில் "சித்திரைப்பூக்கள்" படத்தில் நாயகியாகினேன்.

***நடிகையாகவில்லை என்றால் என்ன செய்து கொண்டிருப்பீர்கள்?***

நான் சின்னப் பொண்ணுங்க. பதின் ஒன்றாவது படித்துக் கொண்டிருப்பேன்.

***தொலைக்காட்சி தொடர்களில் நடிக்கிறீர்களே?***

ஆமாம் என்னைப் பொறுத்தவரையில் தொலைக்காட்சித் தொடர்களில் நடிப்பதன்மூலம் நிறைய பப்ளிசிட்டி கிடைக்குது. இப்ப பாத்தீங்கன்னா வீட்டில உள்ளவங்க அத்தனை பேருமே சினிமாவுக்கு போக முடியாது. வீட்டில இருந்தே அத்தனை பேரும் சின்னத்திரையில் பார்க்கலாம். அதனால தொலைக்காட்சித் தொடர்களில் நடிப்பதில் தாழ்வு எதுவும் இல்லை.

***இப்போது அனைத்து நடிகைகளுமே கவர்ச்சிக் கடலில் நீந்துகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்தென்ன?***

காட்சிக்கு தேவை என்று டைரக்டர் கருதும் போது நடிகை கவர்ச்சியாக வருகின்றார். என்னைப் பொறுத்தவரையில் கட்டாயம் கண்டிப்பாக தேவையாயின் அளவுக்கு அதிகமில்லாமல் நடிப்பதில் தவறில்லை என்று நினைக்கிறேன்.

***பாலு மகேந்திரா அவர்களுடன் ஏற்பட்ட அனுபவம் பற்றி?***

பாலு மகேந்திரா சார் உடன் எனக்கு பழகும் வாய்ப்பு 'வண்ண வண்ணப்பூக்கள்' படத்தில் ஏற்பட்டது. அவரது படப்பிடிப்பு நடைபெறும் இடம் மிகவும் அமைதியாக இருக்கும். காட்சிக்கு தேவையானவர்கள் மட்டுமேதான் சூட்டிங்கின்போது படப்பிடிப்பின் போது இருப்பார்கள். என்னை நாங்களே தயார் செய்வதற்கு நிறைய சந்தர்ப்பம். இடையூறுகள் இருக்காது.

***இலங்கை ரசிகர்கள் பற்றி சில வரிகள்?***

இலங்கை ரசிகர்கள் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் இலங்கையைச் சேர்ந்த பலர் எங்கள் குடும்ப நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை அதிகம். நன்றாகப் பழகத் தெரியும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது கண்டிப்பாக இலங்கை வரும் எண்ணம் உண்டு என்றவர் ஒரு நிமிசம் இருங்கள் என்று கூறிவிட்டு உள்ளே சென்றார். வரும் போது கையில் கேக்.

***என்ன விசேசம் என்றோம்.***

இன்று 31.08.93 எனது பிறந்த நாள் என்றார். (விஷ் யூ ஹப்பி பர்த்டே) பிறந்த நாள் வாழ்த்துக்கள் கூறி கேக் சாப்பிட்டு வந்தோம்.



ஆசை நாயகி படத்தில் சிலுக்கு சுமிதா

இந்தப் பாம்பு கண்டு படை நடுங்காது. நெருங்க விரும்பும்!

# மினி சினி

- ★ ரஜினியின் வள்ளி படத்தில் இயக்குநரான கே. நடராஜ், சத்தியஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் புதிய படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தின் முழுப்படப்பிடிப்பும் மலேசியா, சிங்கப்பூர் என வெளிநாடுகளில் நடக்கவிருக்கிறது.
- ★ வோல்டர் வெற்றிவேல் பெருவெற்றி பெற்றதைத் தொடர்ந்து பி.வாசு இயக்கி தயாரிக்கும் அடுத்த படத்திலும் சத்தியராஜே கதாநாயகனாக நடிக்க இருக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக சுகன்யா நடிக்கிறார்.
- ★ கிழக்குவாசல், இதயம் போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தவர் அப்துல் ரஹ்மான். இவர் தற்போது ஒளிப்பதிவு செய்து கொண்டிருக்கும் ராஜகுமாரன் திரைப்படத்தை அடுத்து, கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
- ★ நாகார்ஜுன், நக்மா நடித்து வெற்றி பெற்ற தெலுங்குப் படமொன்று கொமாண்டர் என்ற பெயரில் மொழிமாற்றப்படவுள்ளது. இப்படத்திற்காக, பாடல் காட்சியொன்று சிங்கப்பூரில் கடலுக்கடியில் உள்ள பொருட்காட்சியில் படமாக்கப்பட்டது.
- ★ மலையாளத்தில் மோகன்லால், ரேவதி நடித்து வெற்றியீட்டிய கிலுக்கம் படத்தைத் தொடர்ந்து, மாயாமயூரம் என்ற படத்தில் இருவரும் மீண்டும் இணைந்து நடிக்கிறார்கள்.
- ★ சபாஷ் பாபு படத்தின் இயக்குநரான சசிமோகன், மலையாள இயக்குநர் ஐ.வி. சசியிடம் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர்.
- ★ பிரபல நடிகை கஸ்தூரி, அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் தயாரிக்கும் விவரணப் படமொன்றில் நடிக்கவிருக்கிறார். இது ஒரு நடிகையின் வாழ்க்கையை மையமாக கொண்டு உருவாகும் கதையாகும்.
- ★ நீங்க நல்லா இருக்கணும் படத்திற்குப் பின்னர் எந்தப் படத்தையும் இயக்க திரையுலகை விட்டு ஒதுங்கியிருந்த விசு, விரைவில் ரமேஷ் அரவிந்த் கதாநாயகனாக நடிக்க ஒரு படத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.
- ★ நகைச்சுவை நடிகரான வெண்ணிற ஆடை மூர்த்தி ஜூலை 17, என்னும் பத்துவாரத் தொலைக்காட்சித் தொடரின்மூலம் இயக்குநர் அந்தஸ்தைப் பெறுகிறார்.
- ★ பானுப்பிரியா தான் நடிக்கும் படங்களுக்கான உடைகளுக்கு அவரே உடைகளை வடிவமைக்கும் டிசைனராகப் பணியாற்றி உடைகளைத் தேர்வு செய்கிறார்.



அடக்கமான அழகும் அசத்தல் தான்!

## சத்யராஜ் இன்னும் வளரவேண்டும்!!!

வால்டர் வெற்றிவேல் பட 200வது நாள் வெற்றிவிழா நிகழ்ச்சியில் ரஜினியும் கலந்து கொண்டார்.

சத்யராஜ் குழந்தை மனம் கொண்டவர். இந்தியில் அமிதாப் பச்சன் போல இங்கே உயரமாகவும், கம்பீரமாகவும் தோற்றமளிப்பவர் சத்யராஜ். அவர் இன்னும் பெரிய ஆளாக வரவேண்டும் என்றார் ரஜினி. சத்யராஜ் பேசும் போதும் ரஜினியை போற்றித் தள்ளிவிட்டார்.

இருவருக்கும் இடையே வேறுபாடு என்று கதைவிட்ட சிலர் முகத்தை மறைத்துக் கொண்டார்கள்.



## சாகும் வரை காதலி! சரத் சொல்லுகிறார் அப்படி!!

காதல் அனுபவம் உண்டா உங்களுக்கு சரத்குமாரிடம் கேட்டபோது சட்டென்று பதில் சொன்னார்.

"இருக்கிறது. எனக்கிருக்கிறது. காதல் மனிதனுக்கு தேவையான ஒன்று. வாழ்க்கையில் ஒரு மனிதன் தன் கடைசி மூச்சு உள்ளவரை காதலித்துக் கொண்டிருக்க வேண்டும். காதல் தெய்வீகமானது உலகளாவியது. காதலைப் பிரித்துப் பார்க்கக்கூடாது. எதை வேண்டுமானாலும் காதலிக்கலாம்."

சரத் சொல்வதும் மெத்தச் சரிதான்.



## கமலின் பையில் அரைடசின் பேனா!

கமலஹாசன் இப்போது விழாக்களுக்கு வரும் போது அவரது சட்டைப் பையில் வரிசையாக குத்து ஆறு பேனாக்களை காட்சி தருகின்றன.

அவரே அதற்கு விளக்கமும் சொன்னார் 'மகளிர் மட்டும்' 'மஹாநதி' ஆகிய இரு படங்களுக்கும் வசனம் எழுத வேண்டியிருப்பதால் எப்போதும் எனக்குப் பேனா அவசியமாகிறது" என்கிறார்.



மதுபாலா

## நொந்து போன சொந்தக்கதை!

"ஜென்டில் மேன்" படு வெற்றியாக ஓடிக்கொண்டிருப்பதால் பிடிக்க முடியாத சந்தோசத்தில் இருக்கிறார் அர்ஜுன்.

அடுத்து வரவிருப்பது "ரோஜாவைக் கிள்ளாதே" ரசனையான தலைப்பு. ஜோடி குஷ்பு. "இனி ஒரு நேரத்தில் ஒரு படம்தான் நடிப்பேன்" என்று முன்னர் பட்ட அனுபவங்களோடு பேசுகிறார்.

ரோஜாவைக் கிள்ளாதே படத்தில் குஷ்பு தாராளமாக நடித்திருக்கிறார். தொய்ந்து வரும் மார்க்கட் படம் வந்த பின் கொஞ்சம் சூடு பிடிக்க இடமிருக்கிறது.

அடுத்து அர்ஜுன் கதை திரைக்கதை எழுதி இயக்கவிருக்கும் படம் புரட்சிக்காரன். பெரிய பட நிறுவனங்களுக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் செவன்ராஜ் ஜெயின் தயாரிக்கும் படம். பணத்தை கொட்டி எடுக்கப் போகிறார்களாம்.

அர்ஜுன் கன்னட மொழிக்காரர். ஆனாலும் ரஜினி போல தமிழில் ஈடுபாடு அதிகம். சொந்தக் குரலில் பேசி நடித்து வருகிறார். சொந்தக் குரலில் பேசி நடிக்கும் விடயத்தில் நொந்து போன சொந்தக் கதை ஒன்றும் வைத்திருக்கிறார். ஏவி.எம் பட நிறுவனத்தின் சொந்தக்காரன் படத்தில் நடிக்க, தான் சொந்தக் குரலில்தான் பேசுவேன் என்று நிபந்தனை போட்டாராம்.

டப்பிங்கில் குரல் கொடுக்க ஆரம்பிக்க காண்ட் கட் ஆகிவிட்டது. பொறுத்திருந்து பார்த்துவிட்டு அர்ஜுன் வீடு சென்றுவிட்டார் பிறகுதான் தெரிந்தது.

வேண்டுமென்றே காண்ட கட் பண்ணிவிட்டு பின் வேறு ஒருவரை வைத்து அர்ஜுனுக்காக குரல் கொடுத்திருக்கிறார்கள். கேள்விப்பட்டதும் நொந்து போனேன் என்று வேதனையோடு சொல்கிறார் அர்ஜுன்.

சினிமா விமர்சனம்

## சேலை வேண்டாம்! வேலை வேண்டும்! ரஜனியின் வசனம் ஒரு சாட்டை!

கதை திரைக்கதை வசனம் ரஜனி என்பதால் வள்ளி எப்படி வரப்போறா? என்று எதிர்பார்த்திருக்க வைத்த படம்.

- இப்போது தமிழகத் திரைகளில் வெற்றிகரமாக வருகை அள்ளிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் சின்னத்திரைகளிலும் வள்ளி துள்ளி வருகிறாள்.

பசுமையான கிராமத்துப் பின்னணியில் வள்ளியை நல்ல காவியமாக கொண்டு போயிருக்கிறார்கள்.

நடிக்கவருகிறாரா என்று கேட்டால் படிப்பை உதறிவிட்டு போகும் ரகமல்ல இந்த வள்ளி.

கல்லூரி வாசலில் வள்ளியின் கொஞ்சும் அழகு கண்டு கற்பிக்க ... ஆனால் படிப்பும் வேண்டாம் ... வேண்டாம் என்று தூக்கிப் போட்டுவிட்டு தன் கிராமத்திற்கு வந்துவிடுகிறாள் வள்ளி.

கிராமத்துக்கு சுற்றுலா வருகிறான் சேகர். மந்திரி மகன். வள்ளியைக் காதலித்து கெடுத்து விடுகிறான். கை கழுவிவிட்டு நழுவி விடுகிறான்.

வள்ளி வித்தியாசமானவள். கெட்டுப் போன இடத்தில் வைத்து அந்த சேகர் வந்து கட்ட வேண்டும் தாலி என்று அதே இடத்தில் இருந்து விடுகிறாள்.

கெடுத்தவனைக் கண்டுபிடிக்க சென்னைக்கு போகிறார்கள் வள்ளியின் மாமனும் நண்பர்களும். கண்டுபிடித்துக் கையோடு கட்டியும் வருகிறார்கள். இப்படிப் போகிறது கதை. வழக்கமான கதைதான். ஆனாலும் திரைக்கதையை உயிரூட்டும் ... என்று பல்வகை சம்பவங்கள் கலந்து ரஜனி கொண்டு போயிருப்பது பாராட்டத்தக்கது. திரைக்கதைத் துறையிலும் தன் முத்திரையை பதித்திருக்கிறார்.

தமிழ் நாட்டிலும் சக கால அரசியலை ரஜனியின் பேனா சாடியும் இருக்கிறது. மாற்றம் தேவை என்பதை வலியுறுத்தி சொல்லுகிறார்.

"நமக்கு சேலை தேவையில்லை. வேலை வேண்டும் என்று கேளுங்க. இல்லை நாமே சேலை வாங்கலாம்" என்ற வசனம் தமிழக அரசின் இலவச சேலை, வேட்டி திட்டத்திற்கு ஒரு சாட்டை. புது முக நடிகை வள்ளி மிக இயல்பாக நடித்திருக்கிறார். சத்யராஜின் உருவியமான ... வெறுமையானவரை நடிப்பில் வெளுத்து வாங்கி விட்டார். ஒரு ரஜனிகாந்தின் குரலில் பாடல்கள் இல்லை. இளையராஜாவின் இசையும் ஒன்றும் வைக்கவில்லை. கரும் கிராமத்தை கவ்வியிருக்கிறது. இயக்குநர் தன் பங்கை நேர்த்தியாகச் செய்திருக்கிறார்.

மொத்தத்தில் வள்ளி ஏமாற்றவில்லை.

பி.கு. வள்ளி இயக்குநர் கே. நடராஜ் இயக்குனரைச் சேர்க்கணும் ... அட்டகாசம்.

# பாப்பா முரசு

சிங்காரம் தன் பெயருக்கேற்றபடி அழகானவன். அவனைத் தனியார் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார் அவனுடைய அப்பா. படிப்பில் கெட்டிக்காரனாக இருந்த சிங்காரத்திடம் இயற்கையாகவே சில நல்ல குணங்கள் இருந்தன.

## வீண் பயம்

பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதே தன்னுடன் யாரையாவது ஒரு நண்பனை அழைத்து வருவான். "அம்மா, இவனுக்குப் பாவம். அம்மா இல்லையாம். எனக்காக வாங்கி வைத்திருக்கும் புதிய சட்டையை அவனுக்குக் கொடுக்கலாமா?" என்று கேட்பான். அவனது அம்மாவுக்குத் தர்ம சங்கடமாகி விடும். "ஆகட்டும், அப்பா வந்ததும் வேறு வாங்கித் தரலாம்," என அப்போதைக்கு அவனைச் சமாதானப் படுத்தி விடுவாள்.

தனக்குக் கொடுக்கும் தின்பண்டங்களைத் தன் நண்பர்களுக்கும் கொடுக்கும்படி வற்புறுத்துவான். இதையெல்லாம் அவனுடைய தாராள குணம் என்று தாயும் மகிழ்ந்து அவன் சொற்படியே நடந்து வந்தாள்.



ஒரு நாள் சிங்காரம் புதிய நண்பன் ஒருவனைப் பள்ளியிலிருந்து அழைத்து வந்தான். அவன் பெயர் முத்து என்று அம்மாவிடம் சொன்னான். அவனுடன் அம்மா கொடுத்த தோசையைச் சாப்பிட்டுக் கொண்டே முத்துவைப் பற்றி மேலும் அம்மாவிடம் சொல்லலானான்.

"இவனுடைய அப்பா ஒரு அரசியல்வாதி. மேடைப் பேச்சாளர். நேர்மையானவர். கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைப் பொலிசில் காட்டிக் கொடுத்து நல்ல பெயர் எடுத்திருக்கிறார்", என்பதெல்லாம் அவன் முத்துவைப் பற்றிச் சொன்னதிலிருந்து புரிந்து கொண்டாள். என்றாலும் அவன் சொல்லச் சொல்ல சிங்காரத்தின் அம்மாவுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

காரணம் நேர்மையான அரசியல்வாதிகளுக்கு ஏற்படும் சோதனைகளைப் பற்றியெல்லாம் அவனது தாயார் பேப்பரில் படித்திருக்கிறாள். சினிமாவில் பார்த்திருக்கிறாள்.

கள்ளக்கடத்தல்காரர்கள் அதிகாரிகளின் குழந்தைகளைக் கூடக் கடத்துவார்கள் என்பதை நினைத்துப் பார்த்தாள். மனம் பீதியடைந்தது. காரணம் நேர்மையான அரசியல்வாதிகளின் மகனோடு தன் மகன் சிங்காரம் நட்பு வைத்திருக்கிறான் அவருடைய மகனைக் கடத்தும் போது தன் மகன் சிங்காரத்தையும் கடத்திச் சென்று விட்டால் என்ன செய்வது? மனம் பதறிப் போயிற்று.

சிங்காரத்தையும் முத்துவையும் சேர்ந்த மாதிரி வெளியில் செல்லாமல் பார்த்துக் கொள்வது என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டாள்.

ஒரு நாள்.... நீண்ட நேரமாகியும் சிங்காரம் பள்ளியிலிருந்து திரும்பவில்லை. கடிகாரத்தில் முள் நகர்ந்து கொண்டே இருந்தது. மனவேதனையோடு வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த தாயாருக்கு ஒரு சமயம் சிங்காரம் முத்துவோடு வெளியே போய்....

குப்பென்று உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. இரண்டு முரட்டு ஆசாமிகள், இரண்டு சிறுவர்களைக் கடத்திக் கொண்டு போவது போன்றதொரு கற்பனை செய்து பார்த்தவளுக்கு அழுகையே வந்து விட்டது.

முத்து வீட்டு ரெலிபோன் எண் தெரிந்தாலாவது அங்கு ரெலிபோன் செய்து கேட்கலாம். அதைக்கூடக் கேட்டு வைத்துக் கொள்ளவில்லையே, என மனம் வருந்தினாள்.

அந்தச் சமயம் பார்த்து அவர்கள் வீட்டு ரெலிபோன் மணி அடித்தது. அவசர அவசரமாகப் போய் ரெலிபோன் ரிசீவரைக் கையில் எடுத்து "ஹலோ" என்ற அந்தக் குரலில் பீதி தெரிந்தது.

"யாரம்மா நீ பேசறது? அய்யா இருந்தால் கூப்பிடுங்க?"

அந்தக் கரகரத்த குரலுக்குச் சொந்தக்காரனைக் கற்பனை செய்து பார்த்தாள். மனம் ஆடியது. குரலைச் சரி செய்து கொண்டு, "நான் தான் மிஸிஸ் ராம்கோபால் பேசறேன்", என்றாள்.

அப்போ இது விறகுக்கடை இல்லையா? சண்முகம் கடை எண்டு நினைச்சேன்", என்றதும் பெருமூச்சு விட்டபடி, "ரோங் நம்பர்", என்றபடி ரிசீவரை கீழே வைத்துவிட்டுத் திரும்பினாள்.

என்ன ஆச்சரியம்! அங்கே சிங்காரமும், முத்துவும் நின்று கொண்டிருந்தார்கள். அவனது அம்மா சிங்காரத்தைக் கட்டி அணைத்தபடி "எங்கேடா போனீர்கள் என் தங்கங்களா?" என்று கொஞ்ச ஆரம்பித்தாள்.

சிங்காரம் நடந்ததைச் சொல்ல ஆரம்பித்தான்.

"அம்மா நானும் முத்துவும் ஸ்கூல் விட்டு வந்திட்டிருந்தோமா? அப்போ ஒரு முரட்டு ஆசாமி எங்களைப் பின்னாலேயே துரத்திட்டு வந்தான். நான் முத்து கிட்டே சொன்னேன்".

"இருடா, மீதியை நான் சொல்றேன்", என்று இடைமறித்தான் முத்து. "சரி சொல்லடா, என்றான் சிங்காரம்.

முத்து சொன்னான், "அவன் எதுக்கு எங்களைத் துரத்துறான்னு தெரியேல்ல. நாங்க ரெண்டு பேரும் ஒரு ஹோட்டலுக்குள்ளே போனோம்.

"அங்கேயும் அவன் வந்தான். எங்களுக்குப் பயமாகப் போயிற்று.

"ம் அப்புறம்?" பயமும், வியப்பும் மிகுந்த குரலில் அம்மா கேட்டாள்.

"நாங்க ரெண்டு பேரும் ஒரு மேசையிலே போய் இருந்தோம். அவனும் அதே மேசைக்கு வந்தான். நாங்கள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தோம். அதற்கு அவன், 'தம்பிகளா! என் மீசையைப் பார்த்துப் பயப்படாதீங்க. எனக்கு உங்க மாதிரியே ரெண்டு மகன்கள் இருந்தார்கள். அவங்க இப்போ இல்லை. செத்துப் போயிட்டாங்க. உங்களைப் பார்த்தால் அவங்களைப் பார்த்த மாதிரியே இருந்தது. கொஞ்ச நேரம் உங்களைப் பார்க்கலாமேன்னு உங்க பின்னாலேயே வந்தேன். பயப்பிடாதீங்க. நான் உங்களை ஒண்ணும் செய்ய மாட்டேன். நான் உங்களுக்குத் தேனீர் வாங்கித் தரக் கூட காசில்லை. நான் புறப்படுறன் தம்பி,' என்று புறப்பட்டான்".

சிங்காரம் தொடர்ந்தான், "பாவம் அம்மா, அந்த ஆளைப் பார்த்தா பாவமா இருந்தது. அவருக்கு முத்து தான் தேனீர் வாங்கிக் கொடுத்தான். என்னிடம் இருந்த காசும் போட்டுதான் பில் கொடுத்தேன். பாவம் அம்மா," என்றான்.

சிங்காரத்தின் தயாரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தது. குழந்தைகளின் தைரியத்தையும், இரக்க குணத்தையும் பாராட்டிய மனம், அதே சமயம் தன்னுடைய மனப்பிரமையையும் நினைத்து வெட்கப்பட்டாள்.

### முக்கியமான மூன்று!

- ★ மதிப்பளிக்க வேண்டிய மூன்று- முதுமை, மாதம், சட்டம்.
- ★ காப்பாற்ற வேண்டிய மூன்று-செல்வாக்கு, நட்பு, பற்று.
- ★ பாராட்ட வேண்டிய மூன்று- அழகு, குணம், அறிவு.
- ★ கவனிக்க வேண்டிய மூன்று- நடத்தை, பேச்சு, செயல்.
- ★ விரும்ப வேண்டிய மூன்று- தூய்மை, நேர்மை, கடின உழைப்பு.
- ★ கட்டுப் படுத்த வேண்டிய மூன்று-நாக்கு, இச்சை, உணர்ச்சி.
- ★ விலக்க வேண்டிய மூன்று- சூதாடல், மதுவருந்துதல், புகைத்தல்.

தொகுப்பு: செல்வி: இஹ்ஸானா பரீட்
தி/அல்- அக்ஸா ம.வி-கிண்ணியா-02.

## விடுகதைகளும் - விடைகளும்

1. ஊர் எங்கும் காட்டாறு. உடல் எங்கும் சிற்றாறு.
2. கடித்தால் கடிபடாது. பிடித்தால் பிடிபடாது. அது என்ன?
3. பதுங்கிக் கிடப்பான். ஆனால் படுக்கைக்கு முந்துவான். அவன் யார்?
4. பக்கத்தில் உள்ளது பட்டணம் எட்டிப் பார்க்க முடியாது.
5. அந்தரத்தில் பறக்கும் கருடனல்ல. அழகான வாலுண்டு அநுமார் அல்ல. உயர்வான திருநாமம் அவருக்கே உண்டு.

விடைகள்
1. இரத்தம்
1. தண்ணீர்
3. பாய்
4. முதுகு
5. பட்டம்

கே. சத்தியவாணி
புனித அன்னம்மா மகளிர் மகா வித்தியாலயம்
வத்தளை.

1. டாக்குபீக்கு என்னும் குதிரை, தண்ணீரைக் கண்டால் தவிக்கும். அது என்ன?
2. நாலு கை குத்தி வரும் இரண்டு புறம் புடைத்து வரும். துடுப்பு துழாவி வரும். துரை மக்கள் ஏறிவரும் அது என்ன?
3. ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படித் தண்ணீர். அது என்ன?
4. ஆயிரம் வேலையாட்கள் கூடி அழகான மண்டபம் கட்ட ஒருவனின் கால் பட்டு உடைந்ததாம் மண்டபம்.
5. எலும்பு இல்லாதவன் கிளை இல்லாத மரத்தில் ஏறுகிறான்.

விடைகள்
1. செருப்பு
2. யானை
3. தேன்கூடு
4. தேங்காய்
5. பேன்.


வே. லோகேஸ்வரி
கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டி.

## குறித்து வையுங்கள்

1. உலகிலே மிகப் பெரிய வைரக்கல் எது?
குவினன் வைரம்.
2. உலகிலே மிகப் பெரிய மலைச் சிகரம் எது?
எவெரஸ்ட்.
3. அனுராதபுரத்தை முதலில் இராஜதானியாக்கிய அரசன் யார்?
பாண்டுகாபயன்.
4. ஆகக் குறுகிய காலம் உயிர் வாழும் உயிரினம் எது?
மேயிலை.
5. உலகிலே மிகப் பெரிய கடிகாரம் எங்குள்ளது?
டர்பன் விமான நிலையத்தில் உள்ளது.
6. பச்சை தேயிலை உற்பத்தி செய்யும் நாடு எது?
தாய்வான்.
7. எப்போது பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பு ஏற்றது?
01.12.1960.
8. ஐக்கிய நாட்டு சபை எப்போது ஆரம்பிக்கப் பட்டது?
11.08.1941.
9. இலங்கையின் பரப்பளவு கிலோ மீற்றரில் எவ்வளவு?
65,610 சதுரக் கிலோ மீற்றர்.
10. சந்திரனுக்கு முதல் போன செய்மதி எது. எந்த நாட்டில் இருந்து அனுப்பப்பட்டது?
செய்மதியின் பெயர்-லூனா-02.
நாட்டின் பெயர்-ரஷ்யா.

தொகுப்பு: கி. கிருபேசன்
திருகோணமலை.


## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி 18.9.93க்கு முன்னர் அனுப்புங்கள். சிறந்த வர்ணத்திற்கு பரிசு ரூபா 25/=. வர்ணம்தீட்டும் போட்டி இல 4இல் வெற்றிபெற்றவர்களின் விபரங்கள் அடுத்த முரசில். இடையே ஏற்பட்ட விடுமுறை தினங்களால் மடல் வரவுகளில் ஏற்பட்ட தாமதமே காரணம்.

முகவரி:
வர்ணம் தீட்டும் போட்டி இல-06
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-05.

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!



மேலே உள்ள இருபடங்களும் பார்ப்பதற்கு ஒரேமாதிரியாக தெரிகிறதல்லவா? ஆனால் வித்தியாசங்கள் உண்டு. 4 வித்தியாசங்களை மட்டும் கண்டுபிடித்து தபாலட்டையில் எழுதி 18.9.93க்கு முன்னர் அனுப்புங்கள். வெற்றிபெற்ற அதிஷ்டசாலிகள் ஐந்துபேரின் பெயர்கள் பிரசுரமாகும்.

முகவரி- கண்டுபிடியுங்கள்
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-05.

## எங்கும் இப்படித்தான்!

1. வருவதும் போவதும்- இன்பம், துன்பம்
2. வந்தால் போகாதது- புகழ், பழி
3. போனால் வராதது- மானம், உயிர்
4. தானாக வருவது- இளமை, முதுமை
5. நம்முடன் வருவது-பாவம், புண்ணியம்
6. அடக்க முடியாதது- ஆசை, துக்கம்
7. தவிர்க்க முடியாதது- பசி, தாகம்
8. பிரிக்க முடியாதது- பாசம், பந்தம்
9. அழிவைத் தருவது- பொறாமை, கோபம்
10. எல்லோருக்கும் சமமானது- இறப்பு, பிறப்பு.

எம். சுஜிதரன்
கந்தப்பளை.

# தேன் கிண்ணம்

## ஒரு கைதியின் வரிகள்

நான் வசிக்கும்
இந்த
மாளிகைக்கு
வாசல் ஒன்றுதான்,
சாளரங்களுக்குப் பதிலாக
இரும்புக் கம்பிகள்
போடப்பட்ட
நான்கு
சிறிய துவாரங்கள்.

★★★

எனது
மாளிகையினுள்
தென்றல் வீசுவதில்லை
பதிலாக
என் காதுகளில்
ரீங்காரம் இசைப்பவை
இங்குள்ளவர்களின்
நிர்வாண
வார்த்தைகள் தான்.

★★★

நான்
காணும் வானத்தில்
ஆதவன் தெரிவதில்லை
என் மாளிகைக் கூரையைத்
தவிர
என் கண்களுக்கு
நட்சத்திரங்கள்
தெரிவதே இல்லை.

★★★

நான்
பால் பழங்களைக்
கண்டு
நீண்ட நாட்கள்
ஆகின்றன.
இங்கு
எனக்கு
தினமும் கிடைப்பது
பாணும் சம்பலும்தான்.
ஏன்
கல்லோடு கலந்த
சோறும்
அளந்து போடுவார்கள்.

★★★

இங்கு
போதிக்கப்படுவது
புதிய பாடம்-
பொருத்தமான
தலைப்பு வைத்தால்
அது-"நிர்வாணம்".

★★★

சட்டம்
எங்களைத் திருத்துவதாக
சொல்லிக் கொண்டு
மேலும்
எங்கள் ரத்தத்தில்
குற்ற உணர்வை
தூண்டுகிறது.
இவை வெளியிலுள்ள
நியாய வாதிகளுக்கும்
சத்திய வாதிகளுக்கும்
தெரிவதில்லை.
ஏனெனில்......
பாவத்தின் முன்
அவர்களும் கைதிகளே.

★★★

ஆயுட் கைதி
இரா: விஜய்

## கண்ணீர்

இதய தேசத்தில்
சோகப் போர் நடப்பதால்
இமைத்தீவில் இருந்து
வெளியேறும் அகதிகள்.....

கே. தர்மராஜ் -கொழும்பு-13.

## விழி மூடிய தீபம்

ஆலமரத்தின் விழுதைப் போல,
ஆழமான பாசங்கொண்டு
இல்லை இது போல் உறவென்று
இறு மாந்திருந்தேன் இதுகாலும்.

கள்ளமில்லா உள்ளமதை
சல்லடையாய் ஆக்கியதால்
செல்லரித்த ஏடாகி
செல்லாக் காசு போலானேன்.

உயிர் வரையில் வேரோடி
உதிரமெல்லாம் கலக்கிவிட்டு
கதியின்றி இப்போது
கதிகலங்கி நிற்கின்றேன்.

உயிர் வரையும் எடுத்துக் கொண்டு
உறவு தந்த உனை நானும்
கல்லாக மாறியும்
தள்ளி வைக்க முடியவில்லை.

கதையல்ல இது வென்று
சிதையேறும் காலம் வரை
தளராத உறுதியுடன்
தனிவழியே நடந்திடுவேன்.

கல்
நுவெரலியா.

## எரிந்த வீணை

இரவுகளில் கூட
தூக்கம் வர
மறுத்து விடுகிறது.

■

அழுதழுது கடிதங்களுக்கு
முற்று வைக்காதே
என் பார்வை நரம்புகள்
அறுந்து போகிறது.

■

உன்
கடைசிக் கடிதம்
என் இதைய இதழ்களால்
தினமும்
அர்ச்சிக்கப்படுகிறது!

■

அந்த கிழடுகளுக்கு
சொல் "அவர்களி"ன்
நியாயங்களை
நிஜப்படுத்த....

■

இந்த நாறிப்போன
பிரபஞ்சத்தில்
மனிதங்கள்
அழுகிவிட்டது!

■

மன்னித்து விடு
'அவர்கள்'

மலரை மணக்காதவர்கள்
புழுதிகளை முகர்ந்தவர்கள்!

■

புல்லாங் குழல்களை
மூங்கில்கள் என்பவர்கள்!

■

எம்: ஏ. தஸ்ரீப்
அக்கரைப்பற்று.

## தீத் தோழமை

ஓ......
வறுமைத்தோழன்
எங்கள்
வந்து போவது
வாசற்படிக்கு
மட்டுமல்ல
எங்கள்
வயிற்றுக்குள்ளும்தான்.

■

வனாந்திரம்
பூசப்பட்ட
பாலை முகடுகளில்
எங்கள்
வரண்ட பயணம்
தொடர்கிறது.

■

எடுத்து வைக்கும்
ஒவ்வொரு அடியும்
மண்ணில் தான்
பதிக்கின்றோம்
என எண்ணினோம்
பாதங்களைப்
பார்த்த போது தான்
நாங்கள்
முள்ளில் நடந்தது
தெரிய வந்தது.

■

இப்போதெல்லாம்
எங்கள்
தேகங்களில்
ஈக்கள் கூட
மொய்ப்பதில்லை.
ஏனென்றால்
குருதி ஆறு!

வற்றிப் போய்
வரண்டு போனோம்.

■

வசந்தம்
எம்மைப் பார்த்ததும்
அது கூட
வாடிப் போய் விட்டது
வறுமையும்
வெறுமையும்
வந்து கொண்டிருப்பது....
எங்கள்
வாயிற்படிக்கு
மட்டுமல்ல
எங்கள்
வயிற்றுக்குள்ளும் தான்

■

வயிற்றுக் குழந்தை
தினம் தினம்
வாய் கிழியக் கத்தும்.

■

அங்கே
'தீ'யமைதி
மிக நிதானமாகவே
நீரில்லாமல்
அறுவடை
நடந்து முடியும்.

■

வறுமையும் வெறுமையும்
உரசி உரசி
எங்க உயிர்கள்
உரிந்து போகும்
எம்மிதயமும்
மயக்கம் ஆகும்.

■

கிண்ணியா சபறுள்ளா.

## எட்டாத க(ன்)னியே

எண்ண விதைகளை
காகித நிலத்தில்
விதைத்தேன்
முளைத்தன......
பார்த்தவர்கள்
பரிந்துரைத்தார்கள்
'கவிதைப் பயிர்கள்' தான்
இதுவென்று

■

உன்னால்
கவிஞனாக்கப்பட்ட
என்னை
இவர்கள்
கைகுலுக்கி
கௌரவிக்கிறார்கள்
ஆனால்-நானோ
உன்
கைவிரல் நகத்தைக்கூட
தீண்ட முடியாமல்
தவிப்பதுதான்
துரதிஷ்டமிங்கே.

■

ஏன் பெண்ணே
நான்
பார்க்கும் போது
மட்டும்தானா

உன் விழிகளுக்கு
வேறு வேலை......?
சொல்-உன்
ஈரப்பார்வைகளுக்கு
என்னவிலை
தர நான்...?

■

தண்ணீர் நிலைகளை(த்)
தேடும்
எருதுபோல்
என்னிதயம்
உன்னையே
தொடர்கிறதே...,
சத்தியமாக
விருது பெற வேண்டிய
உன் அழகுதான்
அதற்குக் காரணம்.

■

எட்டாவதாகவொரு
ஸ்வரத்தைக்கூட
எட்டிவிட்டாராம்
இசைஞானி.
எட்டாத உன்
மனதைத் தான்
இன்னும் என்னால்
கிட்டமுடியவில்லையே...

■

என்
மரணத்திற்கு
முன்பாக
அன்பாக
ஒரு
வார்த்தையாவது

பேசிவிடு
அன்பே
"உன்னைக்
காதலிக்க
முடியாதென்றாவது"

■

ஏ.ஜீ.சேகர்
அக்கரைப்பற்று.

## இலக்கிய நயம்



திருக்குறளுக்குப் பலர் விளக்கம் எழுதியிருக்கிறார்கள்.
ஆனால் கலைஞர் கருணாநிதி அவர்கள் குறளுக்குத் தந்த விளக்கங்கள் வெல்லத்திலும் இனிய சுவை.
அந்தத் தெவிட்டாத சுவையில் இது ஒரு சிறு துளி.

# சுவை தரும் ஊடல்!

**கலைஞர். மு. கருணாநிதி**

"அன்பே" என்றான். "ஆருயிரே" என்றாள். "அமிழ்தே" என்றான். "தரட்டுமா?" என்றாள். "தடையேது?" என்றான்.

"தங்கம் நீ எனக்கு" என்றாள். "தங்கத்தில் பதித்த வைரமல்லவோ நீ" என்று, அவளை இடைவெளிவிடாது தழுவிக் கொண்டான்.

பக்கத்தில் பண் எழுப்பியவாறு பாய்ந்து கொண்டிருந்த தேனருவியின் சிதறிப் பறக்கும் நீர்த்துளிகள் அவர்களுக்கு இயற்கையே பன்னீர் தெளிப்பது போல் இருந்தது. நனைந்திருக்கும் பாறைகளின் உச்சியிலே படர்ந்திருக்கும் பூங்கொடிகளுக்கு நடுவில் அமர்ந்து, குயிலினம், அவர்களின் இன்ப விளையாட்டுக்குப் பின்னணி இசையைப் பொழிந்து கொண்டிருந்தது. தருக்களின் இளந்தளிர்கள் மென்காற்றில் அசைந்து, தங்களைக் குடையாகக் கொண்டு கலவியின்பம் நுகரும் காதலர் தம் நெற்றியினில் முத்து முத்தாகத் தோன்றிடும் வியர்வையினைப் போக்க 'விசிறி' போட்டுக் கொண்டிருந்தன. உதிர்ந்த சருகுகளோ அவர்கட்குப் பஞ்சணையாக மாறும் பெரும் பேற்றினை அடைந்தோமே என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் சலசலத்தன.

இன்பத்தின் நாட்டியம், இரு கை வளையொலியின் நட்டுவாங்கத்துடனும் இதழ் நான்கின் - பக்கவாத்தியத்துடனும் (இன்னும் விரிக்க வேண்டுமா?) இனிது நிறைவேறியது.

சுவைமிகு பழச்சுளையாம் அந்த இன்பத்தை உண்டவர்க்கு மேலும் சுவை அளிக்க 'ஊடல்' எனும் மாமருந்தும் கிட்டுகிறது. சுவையளிப்பதை மருந்து என்கிறேன் நான்! இல்லை, இல்லை- வள்ளுவர் அப்படிச் சொல்கிறார்.

ஒருவன் அறுசுவை உணவைச் சாப்பிட்டுக் கொண்டேயிருக்கிறான். அந்தச் செயலை அவன் தொடர்ந்து கொண்டேயிருந்தால் அருந்திய உணவின் சுவையை அவனால் அனுபவிக்க முடியுமா? முடியாது! அதனால் என்ன செய்ய வேண்டும்? உணவு செறிப்பதற்குத் தேவையான இடைவேளை தரப்பட வேண்டும். "உண்பதைவிட முன் உண்ட உணவு, செறிப்பது இன்பமானது" என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அதுவும் ஒருவகையில் உடலுக்கேற்ற மருந்து தானே! அது போலவே காதலர் கூடிப் பெறும் சுகத்தைவிட, அந்தக் கூடலுக்குப் பிறகு விளையும் ஊடலில் சுகம் அதிகமாம். முதலில் உண்டது செறித்துப் பிறகு பசித்தபின் உண்ணத் தொடங்குவது தானே சிறப்புக்குரியதாகும்?

இதோ அதற்குக் குறள்:

*உணவினும் உண்டது அறல் இனிது காமம்*
*புணர்தலின் ஊடல் இனிது.*

(அதிகாரம் 133 ஊடலுவகை பாடல் 1326.)



## அரங்கேற்றம்

அடி தோழி!
யாரோடும்
எனக்கென்ன கோபம்?
காரணம்
புரியாத சோகம்!

பூத்தன விழிகள்.
இயலாமை மனசோரம்!
என் சுதந்திரப் பறவை
சிறகிழந்தது தானடி
காலத்தின் கோலம்!

வாழ்வில்
நானிட்ட பாவம்
கரை தன்னைச்
சேராத ஓடம்!
பிறர் வாழ்வு சந்தோஷம்
என்னுடன் மட்டும்
ஏனடி துயராகும்?
உன்னைக் கண்டதும்

வரும் நாளிலென்ன....?
வரங்களே ஞாபகங்கள்.
நினைவுகளே சுகங்கள்!
கவிதைகள் மனிதங்களாகி
மனங்கள் ரணங்களாகி,
நியாயங்கள் நெஞ்சோரம்
முகாரி பாடுகின்ற-
அரங்கேற்றமாகும்.....!!!

ஜெயபாலா-பம்பலப்பிட்டி

# இந்த வாரம் உங்கள் பலன்

(12.09.93 முதல் 18.9.93 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், வெள்ளி |
| கன்னி | - செவ்வாய், வியாழன், புதன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |

மிதுனம், கடகம், சிம்மம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சந்திரன் சஞ்சரிப்பார்.
கன்னி இராசியில் சந்திரன் 17.09.93ல் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- | வெளியிடப்பயணம், எதிர்பாரா செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கௌரவம், பணவரவு. | பி.ப 2 மணி |
| புதன்- | பொருள் சேர்க்கை, பூமியால் இலாபம். | பி.ப 4 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, கடன் தொல்லையகலல். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | போசன விருத்தி, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- | யோசனை மிகுதி, துயர் அதிகம். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தேகசுகம், மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| திங்கள்- | சினேகிதரால் தொல்லை, வீண் செலவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | மனக்குழப்பம், வீண் பிரயாணம். | பி.ப 3 மணி |
| புதன்- | பொருள் வரவு, கீர்த்தி, மேன்மை. | பி.ப 4 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் அலைச்சல், கடன் பயம். | காலை 11 மணி |
| சனி- | பாராட்டு, புகழ் அதிகம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள் -வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, காரியசித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | பணவரவு, பூமியால் வருமானம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | திடீர் சுகயீனம், செலவு. | பி.ப 3 மணி |
| புதன்- | பெரியோர்களால் நன்மை, துயர் நீங்கும். | காலை 11 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், பெரியோர் அனுகூலம். | காலை 10 மணி |
| வெள்ளி- | தூரஇடப் பயணம், வீண் பிரயாசம். | காலை 9 மணி |
| சனி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கலக்கம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | தொல்லைகள் தீரும், எதிர்ப்புகள் குறையும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை, காரிய நஷ்டம். | பகல் 11 மணி |
| புதன்- | எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினர் வருகை, உயர்ஸ்தானம். | காலை 11 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், காரிய சித்தி. | பி.ப 3 மணி |
| சனி- | அந்நியரால் தொல்லை, வீண் பிரயாசம். | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | திடீர்ப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| திங்கள்- | பணவரவு, கருமங்களில் வெற்றி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பொருள் சேர்க்கை, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| புதன்- | உயர்ந்தோர் நட்பு, மன அமைதி. | பி.ப 4 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, பொருள் நன்மை. | காலை 10 மணி |
| வெள்ளி- | தனலாபம், அகால போசனம். | காலை 11 மணி |
| சனி- | தேகசுகம் பாதிப்பு, வீண் செலவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் வருகை, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், வெளியிடப் பயணம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | தாய் வழியில் சோகம், தனவிருத்தி. | காலை 10 மணி |
| புதன்- | புதியோர் நட்பு, ஆடம்பரச் செலவு. | காலை 11 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, பூமியால் இலாபம். | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் பயம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| சனி- | பணக்கஷ்டம், எண்ணிய கருமம் வெற்றி. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உள்ளத் தெளிவு, வருமானம் குறைவு. | காலை 10 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, காரியானுகூலம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | பணப்புழக்கம், கௌரவம். | காலை 9 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பொருள் வரவுண்டு. | பி.ப் 3 மணி |
| வியாழன்- | எடுத்த கருமம் வெற்றி, பிரயாணம். | பி.ப 5 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், காரிய சித்தி. | பி.ப 4 மணி |
| சனி- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், கருமங்களில் வெற்றியுண்டு. | காலை 11 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு நீங்கும், மனமகிழ்ச்சியுண்டு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பணவரவு, காரியசித்தி. | காலை 11 மணி |
| புதன்- | புதிய ஸ்தானம், வீண் பணச் செலவு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், எண்ணங்கள் தடைப்படும். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | குடும்ப சுகம், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| சனி- | பணக்கஷ்டம், பிரயாணம். | பி.ப 5 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனஇலாபம், போசன மிகுதி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | நன்மதிப்பு, பெரியோர் சகவாசம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | எடுத்த கருமத் தடை, மனக்குழப்பம். | பி.ப 3 மணி |
| புதன்- | பூமியால் இலாபம், வீண் தொல்லை. | காலை 11 மணி |
| வியாழன்- | பகைவரால் தொல்லை, மன அமைதி குன்றும். | காலை 9 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, வருமானம் குறைவு. | காலை 10 மணி |
| சனி- | அந்நியர் உதவி, வீண் பிரயாணம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்வு, மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | அனுகூலம், நண்பர்களால் நன்மை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, வீண் பிரயாசம். | காலை 9 மணி |
| புதன்- | பகைவர் வெற்றி, கவலையதிகம். | காலை 11 மணி |
| வியாழன்- | புண்ணிய யாத்திரை, காரிய சித்தி. | காலை 10 மணி |
| வெள்ளி- | தனலாபம், காரியானுகூலம். | பி.ப 3 மணி |
| சனி- | வீண் சந்தேகம்,பெரியோர் பகை. | பி.ப 5 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியரால் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | தனதானிய இலாபம், வீண் குறை கேட்டால். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, நண்பர்கள் விரோதம். | காலை 11 மணி |
| புதன்- | கவலைகள் மறையும், காரியம் நடந்தேறும். | காலை 10 மணி |
| வியாழன்- | நண்பர்கள் உதவி, காரிய சித்தி. | காலை 8 மணி |
| வெள்ளி- | பணவரவு, பொருள் பேறு. | காலை 9 மணி |
| சனி- | துயர் நீங்கும், புதிய நன்மைகளுண்டு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பிள்ளைகளால் தொல்லை, பிரயாணம். | பகல் 12 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, யோசனை அதிகம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | மனைவியால் கவலை, பண நெருக்கடி. | காலை 9 மணி |
| புதன்- | பணவரவு, காரிய சித்தி. | காலை 11 மணி |
| வியாழன்- | புதிய திட்டங்கள், பணச்செலவு. | காலை 10 மணி |
| வெள்ளி- | அதிகார விருத்தி, உறவினர் பகை. | காலை 8 மணி |
| சனி- | செலவு மிகுதி, வீண் மனஸ்தாபம். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

# மருத்துவ + விந்தைகள்

## பிஞ்சுக் குழந்தைகளுக்கு சுவாசமளிக்க வந்துவிட்டது புதிய கருவி!



குறைப்பிரசவமான குழந்தைகள் சுவாசிப்பதில் பெரும் சங்கடப்படுகின்றன. இதனால் இவை சில மணி நேரங்களில் இறந்து விடுகின்றன.

இதுகால வரை இத்தகைய குழந்தைகளின் உயிரைக் காக்க பிராண வாயுவை அதிவேகமாக குழந்தையின் மூக்கினூடாகச் செலுத்தப்படும் குழாய்கள் மூலம் உட் செலுத்துவார்கள்.

இதனால் குழந்தையின் மூக்கு, தொண்டை மற்றும் நுரையீரல் ஆகியவை பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. குழந்தையின் இத்தகைய உறுப்புகள் மிக மென்மையாக இருப்பதனால் வேகமாகச் செலுத்தப்படும் பிராணவாயு இவற்றை இலகுவில் பழுதடையச் செய்துவிடுகிறது. தொண்டை வீக்கம் ஏற்படவும் தொண்டை அடைப்பு உண்டாகவும் இதனால் வாய்ப்புண்டு.

இப்பொழுது இக்குழந்தைகளின் சுவாசத்தை எத்தகைய தாக்கமுமின்றி மென்மையாகவும் இயல்பாகவும் ஆக்குவதற்கான புதிய சாதனம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள்.


கொனக்டிக்கட் மாநிலத்திலுள்ள நோர்வாக் மருத்துவ மனையைச் சேர்ந்த டாக்டர் எட்வட் கைனர் என்பவர் இந்தப் புதிய கருவியை உற்பத்தி செய்துள்ளார். குழந்தையின் மூக்குத் துவாரங்களுள் இக்கருவியின் இரு முனைகள் வைக்கப்படுகின்றன. குழந்தைக்குத் தேவையான அளவு பிராண வாயு சிரமமின்றி உட் செலுத்தப்படுகின்றது. குழந்தை இயல்பாகவே சுவாசிக்கின்றது.

இதனால் சுவாசப் பாதையின் எந்த உறுப்பும் பாதிப்படைய வாய்ப்பேற்பட இடமில்லை என்று டாக்டர் கைனர் தெரிவிக்கிறார்.

## இனி என்ன கவலை?

காது கேளாதோரின் காதுகளுக்குத் தேன் பாய்ச்சும் தகவல்! காது மடல்களில் ஒரு கருவியை மாட்டிக் கொண்டு திரிய வேண்டிய அவசியம் இனி அவர்களுக்குக் கிடையாது. காது மடலின் பின்புறமாக ஒட்டவைக்கும் கருவியை பெரும்பாலானோர் பயன்படுத்த விரும்புவதில்லை. தங்கள் குறைபாடு வெளியில் யாருக்கும் தெரியாமல் இருக்கட்டும் என்பது அவர்களுடைய எண்ணமாகவிருக்கலாம்.

இப்பொழுது கண்டுபிடிக்கப் பட்டுள்ள கேட்க உதவும் கருவி மிகச் சிறியது. காதின் வெளிப் புறத்தில் வைக்காமல் இதனை காதுத்துவாரத்துள்ளே தென்படும் எலும்புக்கருகில் ஒட்டவைத்து விடலாம். இக்கருவி இருப்பதே வெளியில் தெரியாது. மிகவும்



மென்மையானது மட்டுமல்லாமல் அதி சக்திவாய்ந்ததுமாகும். காதுப் பறையில் துல்லியமான தெளிவான இயற்கையான ஒலியைத் தரவல்லது.

## ஒரே ஒரு ஊசி போதும்! ஒற்றைத் தலைவலி போகும்!!



ஒற்றைத் தலைவலியால் துன்பப்படுவோரைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கும். வாழ்க்கையையே வெறுத்த நிலைக்குச் சென்று விடுவார்கள்.

இந்த நோயைக் குணப்படுத்தவும் புதிய ஊசிமருந்து ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது. ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த சில மருந்துகள் தலைவலியை நிறுத்திய போதும் வேறு பல பிரச்சனைகளை ஏற்படுத்தி விடுவதுமுண்டு. இதற்கு DHE 45 என்று பெயர். இதனை நரம்பினூடாகச் செலுத்துவார்கள். தலைவலி நீங்கி விடும். ஆனால் வயிற்றில் பல தரப்பட்ட சிக்கல்கள் ஏற்பட்டுவிடுவதுண்டு.

இதே மருந்தினை நோயாளியின் தொடையில் ஊசி மூலம் செலுத்தினால் அரைமணி நேரத்தில் தலைவலி ஓடி மறைந்து விடுகிறது. அத்துடன் வேறு பிரச்சனைகளும் எழுவதில்லை. ஃபுளோரிடாவிலுள்ள பாம்பீச் தலைவலி ஆய்வு நிலைய இயக்குநர் டாக்டர் போள் வின்னர் இத்தகவலை வெளியிட்டார். இம் மருந்தை மருத்துவ மனையில் வைத்துத்தான் நோய்க்குச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. நோயாளி தனக்குத் தானே இம் மருந்தைச் செலுத்திக் கொள்ளலாம் என்றும் டாக்டர் வின்னர் தெரிவிக்கிறார்.

## குட்டிக் கதை

# இராஜ்ஜியம் இழந்த ராஜகுமாரன்

**–ஷர்மிளா இஸ்மாயில்–**

"என் பிரிய ராஜகுமாரியே, எங்கிருக்கிறாய்? என்னை நினைந்திருக்கிறாயா இல்லை உன் மனத் தளத்திலிருந்து என் சுவடுகளை அழித்தவளாய் மறந்து போனாயா? பெண்ணே எப்படியடி உன்னால் என்னை முற்றிலும் துறந்து வாழ முடிகிறது? என்னால் உன் நினைவுகளிலிருந்தும் உன்னைப் பற்றிய கனவுகளிலிருந்தும் மீண்டு வரவே முடியவில்லை....."

"ஏய் சஞ்சீவ், என்ன தவம் பண்றியா? எழுந்து வா இந்தா. புரோக்கர் கொண்டு வந்திருக்கிற போட்டோவெல்லாம் நல்லா பாத்துட்டு எந்தப் பொண்ண பிடிச்சிருக்குன்னு சொல்." அண்ணாவின் குரலில் கலைக்கப்பட்டவன் எழுந்தான்.

இதயம் கல்லாய்க் கனத்தது. எனக்கெதுக்கு கல்யாணம்? கல்யாணக் கனவுகள் தந்தவளே இன்று கனவாகிப் போனாளே. "யாரையும் எனக்குப் பிடிக்கலே. எனக்கு கல்யாணமும் வேண்டாம். பொண்ணும் பார்க்க வேண்டாம். தயவு செய்து என்ன நிம்மதியா இருக்க விடுங்க." சட்டென தன்னை அவர்களிடமிருந்து கழற்றிக் கொண்டு அறைக் கட்டிலில் வந்து விழுந்தான். "பிரிய ராஜகுமாரியே ஏன் என்னை மறந்து போனாய்? உன் மேல் உயிரை வைத்திந்த என்னை எப்படியடி மறக்க முடிந்தது? என் உயிர் சுமந்து வரும் கடிதங்களுக்கெல்லாம் உன் மௌனம் பதிலாவதேனடி பெண்ணே? சிறைப்பட்டுள்ளாயா இல்லை இன்னொருவனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டாயா? பெண்ணே பதிலில்லையா?" அவனது வினாக்களுக்கு யாருமே விடை சொல்லவில்லை.

விடை தேடியவனாய் அவளது விலாசம் நோக்கிச் சென்றவனுக்கு... மிஞ்சியது ஏமாற்றம் தான். எப்போதோ விலாசம் மாறிப் போயிருந்தனர் அவனது இராஜகுமாரியும் அவளது வீட்டாரும். முகவரி தொலைத்த முகிலினம் அழுது கொட்டும் மழை போல இவனும் அழுதான். தனியே அழுதான். தண்ணீரில் அழும் மீனின் கண்ணீரைப் போல அவனது கண்ணீரும் அடையாளம் தவறிப் போயிற்று. அவளுக்கான தேடலை அவன் விட்டு விட்ட நேரம் அவனுக்கான பெண்ணை வீட்டிலுள்ளோர் தேட ஆரம்பித்தனர். ஆனால் திருமணம் என்பது அவனைப் பொருத்த வரையில் தேவையற்றதொரு நிகழ்வென கணித்திருப்பது வீட்டாருக்குப் புரியவில்லை.

இப்போது அவனுக்கு அடிக்கடி நெஞ்சு வலி வந்தது. தன் வேதனை வசப்பட்ட மனத்தின் வெறும் பிரமையா



இல்லை உண்மையில் நோயின் தாக்கமா என்பது தெளியவில்லை அவனுக்கு.

அதுவொரு தனியார் மருத்துவ நிலையம். டொக்டரிடம் "அப்பொய்ன்மென்ட்" எடுத்துப் போனாலும் டொக்டரின் வருகை தவிர்க்க முடியாத காரணமொன்றால் தாமதித்துப் போக இவன் இன்னும் காத்திருந்தான்.

வெள்ளையுடை நேர்ஸ்கள். மருந்து வாசனை. பலரக நோயாளிகள். வரவேற்பாளப் பெண்..... யாருமே இவன் கவனத்தை ஈர்க்கவில்லை. ஏதோ தனியானதொரு உலகத்தில் ஜீவிப்பவன் போல... மோன உருவெடுத்து அமர்ந்திருந்தான். இமை மூடி, கவிழ்ந்த தலையைக் கையில் பாரமாக்கி கனவுகண்டான். "என் பிரிய இராஜகுமாரியே..." மனசு மீண்டும் வழக்கமான நினைவுப் பதிவுகளை வெளிக்கொணர முயல அடக்கிக் ட.காண்டான்.

"நீங்க எந்த டொக்டரப் பார்க்கணும்?" ரிஷப்ஸனிஸ்ட் இனிமை மிக கலந்த குரலில் யாரிடமோ கேட்டுக் கொண்டிருந்தாள்.

"டொக்டர் இராஜபக்ஷ." பதில் வந்தது.

"சரி உங்கள் பெயர்?"

"மிஸிஸ் சுகன்யா ரகுராமன்."

"?".....அதிர்ச்சி வாங்கியவனாய் நிமிர்ந்தவன் மனது ஓவென ஆர்ப்பரித்தது.

எழுந்து நின்று "சுகன்யா" என்று கத்த வேண்டும் என்பது போல் துடித்தெழுந்த உணர்வுகளை அடக்க வெகு சிரமப் பட்டான். ஆம்! அவனது இராஜகுமாரி அவன் முன் நிற்கிறாள்! ஆனால்... ஆனால் இன்னும் அவள் அவனது இராஜகுமாரியல்ல..... பக்கத்தில் நிற்பது அவளது பட்டத்து இளவரசன். ஆனால் அவன் இவனல்லன்..... "ரூம் நம்பர் 6" ரிஷப்ஸனிஸ்ட் டொக்டர் இருக்கும் அறையின் இலக்கம் சொல்ல பற்றுச் சீட்டை வழங்க அவர்கள் அவனைக் கடந்து போயினர். இராஜ்ஜியத்தைப் பறிகொடுத்த மன்னவனொருவன் போல் கண்ணீர் முத்துக்கள் நிலம் சிந்த மருத்துவ நிலையத்தை விட்டும் வெளியேறினான். அவனது காதல் காயத்திற்கு 'இனி யாரால் தான் மருந்திட முடியும்?

(கற்பனை மட்டுமே)



## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—11




நிருபராஜ் வைத்த குறி தப்பியது. குலாம்ஷாவின் வலது காதோரமாக படாமல் விலகிச் சென்றது தோட்டா.

மறு முறை அவன் பிஸ்டலின் விசையைத் தட்ட முன் மதுமிதாவை தனது உடல் கவசமாக வளைத்து இறுக்கிக் கொண்டார் குலாம்ஷா.

மதுமிதாவின் வலது புற நெற்றியில் பிஸ்டல் முனை அழுத்தி உறுதியான குரலில் பேசினார்.

"மதுமிதா உன் முட்டாள் நண்பனை ஆறுதல்படுத்து. குலாம்ஷா குறி வைத்தால் எவன் விதியும் முடியாமல் விட்டதில்லை. இனி ஒரு தோட்டாவை உன் நண்பன் செலவு செய்தால் நான் இரு தோட்டாக்களைத் தர வேண்டியிருக்கும்.

"ஒன்று உனக்கு. மற்றது அவனுக்கு"

குரலில் தொனித்த உறுதியும் அழுத்தமாய்ப் பதிந்த பிஸ்டலின் முனையும், பிஸ்டலின் விசையில் பதித்திருந்த விரலும் மதுமிதாவை மண்டியிட வைத்தன.

"நிறுத்தடா நிருபராஜ். எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று உனக்கு தெரியவில்லை."

அச்சம் கலந்து குரல் பிசிற மதுமிதா சொல்ல, அதை ஆமோதிப்பவராய் குலாம்ஷா சிரித்துவிட்டு,

"எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று தெரிந்தவன்தான் பிரயோசனமானவன். பிரயோசன மானவர்களைத்தான் பெண்களுக்குப் பிடிக்கும். குறிப்பாக மதுமிதாவுக்கு."

குலாம்ஷா சொல்லிக் கொண்டிருக்க அவரது பின்புறமாய் பூனைபோல் நெருங்கினான் மாமிச மலைகளில், ஒருவன்.

குலாம்ஷாவின் கவனம் முன்னால் நிற்கும் நிருபராஜ் மீதே இருந்தது.

குலாம்ஷாவின் பிஸ்டலில் தோட்டா இல்லை. குலாம்ஷாவின் மனதில் தைரியம் இருந்தது. எனினும் வெற்றுப் பிஸ்டல் விசயம் தெரியாமல் இந்த விளையாட்டில் வெல்ல வேண்டுமே என்று கவலையும் இருந்தது.

பிஸ்டலை ஏன் பயன்படுத்தவில்லை என்று எதிரி சந்தேகிக்கக்கூடாது. அதற்கு சந்தர்ப்பமே இல்லாமல் வேகமாய் காரியத்தை முடிக்க வேண்டும். இங்கிருந்து தப்புதல் முக்கியம்.

குலாம்ஷா மனதில் திட்டம் வகுத்து தொகுத்துக் கொண்டிருக்க மாமிச மலை மிக அருகில் பின்புறமாய் நெருங்கிக் கொண்டிருந்தான்.

அவன் நெருங்குவதைக் கண்ட நிருபராஜ் முகம் முழுக்க சந்தோச மானான்.

"குலாம்ஷாவின் கதை முடியப் போகிறது. யார் தடுத்தாலும் குலாம்ஷாவை இனி உயிரோடு விடுவதில்லை. என் பிஸ்டலால் பிணமாக்கப்பட வேண்டும் குலாம்ஷா"

நிருபராஜ் உள்ளே கொலைவெறி எட்டிப் பார்த்தது. நினைக்கவே சந்தோசமாக இருந்தது.

அதிர்ச்சி நீங்கி மகிழ்ச்சி பரவிய நிருபராஜ் முகபாவம் புரிந்து குலாம்ஷா உஷாரானார். நிருபராஜின் கண்கள் சென்ற திசை உணர்ந்து பின்புறம் சட்டென்று திரும்பிப் பார்த்தார்.

குலாம்ஷா திரும்பிப் பார்க்கவும் மாமிச மலை தாக்குதலுக்கு தயாராகவும் சரியாக இருந்தது.

குலாம்ஷா பின்புறமாய் கால் உயர்த்தி, காலில் தன் பலத்தை இறக்கி மாமிசமலையின் நெற்றியின் மையத்தில் உதைத்தார்.

கற்ற பயிற்சி உரிய தருணத்தில் உதவிக்கு வந்தது.

நெற்றிப் பொட்டில் உதை வாங்கிய மாமிச மலை அதிர்ந்து சரிந்தான்.

"மதுமிதா என்னோடு விளையாட்டு வேண்டாம். உன் ஆட்களின் மோதிப் பார்க்கும் ஆசையை மூட்டை கட்டி வைக்கச் சொல்."

மதுமிதா வாய்திறக்காமல் இருந்தாள். தன் ஆட்களை நோக்கி விழிகளை செலுத்தினாள். மதுமிதாவின் மௌனம் குலாம்ஷாவை கோபமாக்கியது. பொறுமையைத் தொலைத்தார்.

"குயிக். உன் ஆட்களுக்கு உத்தரவிடப் போகிறாயா? அல்லது உன் உயிர் விடப் போகிறாயா பெண்ணே. முதலில் நிருபராஜ் பிஸ்டலை கீழே போட வேண்டும். சொல். சொல்லடி"

குலாம்ஷா உறுமினார். மதுமிதா அடங்கினாள்.

"நிருபராஜ் சொல்வதைச் செய்." குரலில் நடுக்கம் காட்டினாள்.

நிருபராஜ் குலாம்ஷா முகம் பார்த்து முறைத்தான். கசப்பு பூசிய வார்த்தைகளால் கேள்வி வீசினான்.

"யார் சொல்வதை செய்வது மது? குலாம்ஷா சொல்வதையா அல்லது...."

"இந்த நேரத்தில் போய் விவாதம் நடத்தப் பார்க்கிறாய் பார். உண்மையாகவே நீ பிரயோஜனமற்றவன்தான். மதுமிதா சொன்னதில் அனுபவம் தெரிகிறது."

குலாம்ஷா கேலி செய்ய வெறுப்பானான் நிருபராஜ். பிஸ்டலை கீழே போட்டான் நிருபராஜ். எடுக்க வசதியாக தன் கால் அருகில் இருக்குமாறு கீழே போட்டான்.

"நிருபராஜ் குலாம்ஷா விளையாட்டுப் பிள்ளையல்ல. மடையனே அந்த பிஸ்டலை விட்டு பத்தடி தூரம் பின்னாலே போ."

நிருபராஜ்! அசையாமல் நின்றான்.

"அசைய மாட்டாயா நிருபராஜ்? நல்லது அந்த இடமே உனக்கு சமாதி."

சொல்லியபடி மதுமிதாவின் வலது புற கன்னத்திலிருந்து பிஸ்டல் விலக்கி நிருபராஜ் நோக்கி குறிவைத்தார் குலாம்ஷா.

"என்ன மது உன் பிரயோசனமற்ற நண்பனை பூமிக்குப் பாரம் இல்லாமல் செய்துவிடலாமா?"

குலாம்ஷாவின் இடது கரத்தின் பிடியில் அவருக்கு கவசமாக மாறிவிட்ட மதுமிதா அவசரமாய் மறுத்தாள்.

"நிருபராஜ் பின்னாலே போ. மிஸ்டர் குலாம்ஷா உங்களுக்கு என்ன வேண்டும்?"

நிருபராஜ் மனமின்றி பிஸ்டல்விட்டு பின் சென்றான். மதுமிதா உஷாராகத் தொடங்கிவிட்டாள். நிதானமாக யோசிக்கத் தொடங்கிவிட்டாள். எதிரி தெளிவடைய சந்தர்ப்பம் கொடுத்தல் எப்போதும் ஆபத்து. எதிரியின் தெளிவு எமக்கு அழிவு. குலாம்ஷா விழித்துக் கொண்டார்.

உடனடியாக காரியத்தில் இறங்குவது, அடுத்த கட்டம் பற்றி எதிரி யோசிக்கவே சந்தர்ப்பம் கொடுக்காமல் அதிரடியாய் வித்தைகாட்டி நிலை குலைய வைப்பது அவைதான் முக்கியம்.

"எனக்கு நீ வேண்டும். உன் கூட்டம் வேண்டும். உன் கூட்டத்தின் தலைவன் வேண்டும். உன் கூட்டத்தின் ஒப்புக் கொள்ளப்பட்ட குற்றப் பட்டியல் வேண்டும். கேட்டால் தருவாயா பெண்ணே?"

கேட்டுவிட்டு நகைத்தார் குலாம்ஷா. துணிச்சலோடு இருப்பதை, உறுதியோடு இருப்பதைக் காட்டும் நகைப்பு அது. எதிரியே நெருங்க முயலாதே என்று அச்சுறுத்தும் நகைப்பு அது.

"பயப்படாதே பெண்ணே. இப்போதே அவை அனைத்தும் வேண்டும் என்று கேட்கப் போவதில்லை நான். இப்போது எனது தேவை ஒன்றுதான். அதை நிறைவேற்றுவது சுலபம்."

சொல்லியபடியே மதுமிதாவை கதவு நோக்கி நகர்த்திச் சென்றார் குலாம்ஷா.

நிருபராஜ் கீழே போட்டிருந்த பிஸ்டல் 'என்னைத் தொட்டுத் தூக்கி உன் வசமாக்கு' என்று சொல்லிக் கொண்டிருந்தது.

தன் கரமிருந்த பிஸ்டலை இடையிலே வேகமாய் செருகி தரையில் கிடந்த நிருபராஜ் பிஸ்டலை சட்டென்று குனிந்தெடுத்துக்கொண்டார் குலாம்ஷா.

"என்ன உங்கள் தேவை?" என்று கேட்டாள் மதுமிதா.

"தப்பிச் செல்வது. அதற்கு உன் கூட்டத்தின் தடை இல்லாமல் இருப்பது."

"எங்களை அழிக்க எங்கள் உதவி கேட்கிறான்."

நிருபராஜ் பொறுமையிழந்து கத்தினான்.

அலட்சியமாய் அவன் முகம் பார்த்த குலாம்ஷா,

"நீ சொல்வது உண்மைதான் நிருபராஜ். இது உயிர் விளையாட்டு. நட்புக்கு என்று அழைத்து குலாம்ஷாவோடு விளையாடினீர்கள். விளைவு இத்தோடு முடியாது."

கதவு அருகே ,மதுமிதாவை கொண்டு சென்று நிறுத்தியபடியே குலாம்ஷா பேசினார்.

"யாரும் புத்திசாலிகளாக நடந்து கொள்ள முற்பட்டால் சத்தியமாய் மதுமிதா தப்பமாட்டாள். குலாம்ஷா உயிர்விட ஒரு நாளும் அஞ்சான். பாவம் மதுமிதா! சாக வேண்டுமா என்பதை நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள். சாக வேண்டாம் எனில் உள்ளேயே இருங்கள். பத்திரமாக இருக்கலாம். கதவை மூடிவிட்டுத்தான் செல்லப் போகிறேன்."

சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார் குலாம்ஷா.

தன்பிடியில் இருந்த மதுமிதாவை கதவுக்கு வெளியே கொண்டுவந்து,

"மதுமிதா கதவை தாழிட்டு சாவியை எடம்மா."

உத்தரவு நிறைவேறியது. "சாவியை நீயே வைத்துக் கொள். இப்போது ஒரு உதவி செய்."

"என்ன உதவி?"

"இங்கிருந்து வெளியேறும் நேரான அபாயமற்ற வழி எதுவென்று சொல்ல வேண்டும். பொய் உதவாது பெண்ணே."

குலாம்ஷா சொல்லி முடித்த போது "முடியாது குலாம்ஷா, உன்னால் முடியாது. திரும்பிப்பார் முடியாது என்று தெரியும்"

திரும்பினார் குலாம்ஷா. குரலுக்குரியவன் குள்ளமாய் இருந்தான். முகத்தில் கொடியவனாய் தெரிந்தான். அவன் பின்னால் பத்துப் பேர் வரை- சிறிய பட்டாளமே ஆயுதங்களோடு நின்றது.

மதுமிதா சிரித்தாள்.

■

வெளியே கேட்ட வெடிச்சத்தங்கள் விபரீதம் பக்கத்தில் என்று உணர்த்தின.

டி.ஐ.ஜி டென்சிலின் நெஞ்சின் மையத்தில் கைவைத்து தள்ளிய மதுமிதா தானும் அவர் மேல் சாய்ந்தாள்.

மதுமிதா தள்ளிச் சாய்ந்திருக்காவிட்டால் வெளியே இருந்து சீறிவந்த தோட்டா டி.ஐ.ஜி டென்சிலின் தலையில் தங்கியிருக்க இடம் பிடித்திருக்கும்.

மேலே சாய்ந்து போர்வையாய் மூடிய மதுமிதாவை விலக்கிய டி.ஐ.ஜி டென்சில் தன் பிஸ்டல் உருவியபடி கட்டிலில் புரண்டு நிமிர்ந்தார்.

கட்டில் விட்டு எழுந்த மதுமிதா பதட்டமாய் வெளியே பார்த்தாள்.

ஜன்னலின் உடைந்த கண்ணாடி வழியே வெளியே நடந்த கோரம் தெரிந்தது.

கோரம் பார்த்தவள் "வேண்டாம் டி.ஐ.ஜி அவர்கள் பலர். மோத முடியாது." என்று டென்சிலின் கரம் பிடித்தாள்.

டுமீல்.டுமீல்....

சீறின மீண்டும் துப்பாக்கிகள்.

மதுமிதாவின் பிடி விலக்கி டி.ஐ.ஜி டென்சில் முன் செல்ல முயன்ற நொடியில்-

ஒரு தோட்டா வந்து மதுமிதா மீது பாய்ந்தது.

'வீல்'

என்று அலறியபடி சரிந்தாள் மதுமிதா.

(இன்னும் வரும்)

## சிந்தியா பதில்கள்

மாத்தையா எங்கே?

ரயிகம ம.ஸ்ரீகாந்தன்- இங்கிரிய.

அதைத்தான் நானும் கேட்கிறேன். பதில் தெரிந்தவர் ஒருவர் மட்டுமே.

■

கணவன் அமைவதெல்லாம் யார் கொடுத்த வரம்?

ருக்ஷன் அமீன்- உடுதெனிய.

சில சமயங்களில் கொழுத்த சீதனம் கொடுத்த வரம்.

■

இந்தியாவின் சந்தனக் கடத்தல் வீரப்பன் பற்றி உங்கள் கருத்து என்ன?

வெ.ரஞ்சினி- நுவரெலியா.

விபரீத அரசியல் தான் வீரப்பனையும் வளர்த்தது.

■

சீதனம் எடுப்பது, கொடுப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

ரிஸ்மியா பௌஸர்- கல்ஹின்னை.

எதிரான கருத்துத்தான். மாடு வாங்கலாம். மனிதர்களை......!

■

திரு காமினி திசாநாயக்க ஐ.தே.கட்சியில் சேருவார் என்று நம்புகிறீர்களா?

எஸ்.யோகநாதன்- கொழும்பு-5

அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் யோகன்.

■

டியர் சிந்தியா, ஆண்களை விட பெண்கள் பொறாமை மிக்கவர்களாக இருப்பதன் காரணம்?

பென்சி பெர்னாண்டோ-கொழும்பு-13.

பென்சி, உங்களுக்கு யாரோ பிழையான தகவலைத் தந்துவிட்டார்கள். அல்லது ஐந்து விரலும் ஒன்றுதான் என்று பிழையான முடிவை செய்திருக்கிறீர்கள்.

■

ரஜனிகாந்தும் விஜயகாந்தும் ஏன் இணைந்து நடிக்கவில்லை?

சுந்தரேசன்-தலவாக்கெலை.

சந்தர்ப்பம் வரவில்லை. சமயம் வாய்க்கவில்லை.

■

இறைவன் மனிதனை பல நிறத்திலும் படைத்து இருந்தால்?

எம்.எம். எம் தௌபீக்- புதிய காத்தான்குடி.

கலருக்கொரு சாதி. கலருக்கொரு கட்சி என்று சண்டை போட வசதியாக இருந்திருக்கும்.

■

திரைப்படங்களால் மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் திருப்பங்கள் என்ன?

எம்.முஸாதிக், மதனி குஷாக்-பேருவளை.

தியேட்டருக்குச் செல்லும் போது வழியில் ஏற்படும் திருப்பங்களோடு சரி.

■

வாழ்க்கையில் சாதனை என்று எதனைக் குறிப்பிடலாம்?

செல்வி ராதா ராமநாதன்- பூண்டுலோயா.

ஒவ்வொருவரும் வகுத்துக் கொள்ளும் இலக்கைப் பொறுத்தே சாதனை தீர்மானிக்கப்படும். இலக்கை எட்ட முடிந்தால் அதுதான் சாதனை. முடியாவிட்டால் முயன்று கொண்டேயிருப்பதும் சாதனைதான் ராதா.

■

பெண்ணைக் கண்டால் பேயும் இரங்கும் என்பார்களே அதன் கருத்தென்ன?

பி.கனேஸ்கரன்-புத்தளம்.

பெண்ணிடம் பலம் காட்டுகின்றவர்கள் பேயை விடவும் மோசமானவர்கள் என்று அர்த்தம்.

■

இனப்பிரச்சனை என்ற ஒன்று தோன்றாமல் இருந்திருந்தால் இலங்கையின் தற்போதைய நிலை எப்படி இருக்கும்?

ஆர்.மகேஸ்வரன்-நுகேகொடை.

இந்தக் குட்டித் தீவில் குருதி சிந்தி இருக்காது. குட்டிச் சொர்க்கம் ஒன்று உருவாகியிருக்கும்.

■

தயாரிப்பாளர்கள் சிலர் படம் எடுப்பதற்கு வெளிநாடு செல்வது ஏன்?

சுகந்தி கந்தசாமி-ஹட்டன்.

உள்நாட்டு காட்சிகள் அவர்களுக்கு அலுத்துப் போயிருப்பதால். புதிய இடங்களைக் காட்டி பிரமிக்க வைத்து வசூலை கறப்பதுமாக இருக்கலாம்.

■

அண்மையில் வெளியான உழைப்பாளி படத்தில் ரஜனி பேசும் வசனங்களில் அரசியல் வாடை வீசுகிறதே! அவரும் அரசியலில் இறங்குவாரா?

எம்.எஸ்.கே. ரகுமான் - காலி.

அவர் பேசவில்லை. வசனம் எழுதுகின்றவர்கள் பேசவைப்பதாக நினைத்தோம். வள்ளி படம் வந்த பிறகு அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டி வந்துவிட்டது. குதித்தால் ஆச்சரியமல்ல போல் இருக்கிறது.

■

அன்பின் சிந்தியா, என் காதலி தன் பெற்றோரைக் காரணம் காட்டி, காதலை வெறுக்கிறாள். என்ன செய்வது?

எம். பரீட்- கொழும்பு-12.

ஒன்றும் செய்ய முடியாது. மறந்துவிடும் பரீட். மறந்து விடும்.

■


ஏமாற்றுவதில் வல்லவர்கள் ஆண்களா? பெண்களா?

ஐ.எம். நசார்- நுவரெலியா.

இரு தரப்பிலும் வல்லவர்கள் உண்டு. ஏமாற்றுகிறவர்கள் விடயத்திலும் ஏன் பேதம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

■

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என். ரவி
வயது: 25
முகவரி: இல.37, கண்டி ரோட் நுவரெலியா.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: எஸ். கௌரி.
வயது: 21
முகவரி: கே.05, நவகம்புர, ஸ்ரேஸ் வீதி, கிராண்ட்பாஸ், கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: ஆர். தம்ஸீர் முஹம்மது
வயது: 20
முகவரி: 394/1, புளுகொறத்தென்ன, அக்குறணை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சஞ்சிகை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், விளையாட்டு.



பெயர்: எ எச். மொஹமட் பியாஸ்
வயது: 18
முகவரி: இல. 10, சென் பீற்றர்ஸ் பிளேஸ், கொழும்பு-4.
பொழுதுபோக்கு: உதைப்பந்தாட்டம், கிரிக்கெட் விளையாடுதல், நீச்சல், புத்தகங்கள், பத்திரிகைகள் வாசித்தல்.

பெயர்: பா. பிரியா
வயது: 19
முகவரி: இல. 767/6, திருகோணமலை வீதி, மந்தண்டாவளை, மாத்தளை.
பொழுதுபோக்கு: கவிதை எழுதுதல், கதைப்புத்தகம் பார்த்தல், ரீ.வி. பார்த்தல்.

பெயர்: ஜெசிலா
வயது: 15
முகவரி: நடுத்தீவு மூதூர்-07.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: எம்.ஏ. ஜப்பார்
வயது: 24
முகவரி: 6 டி, குருநாகலை வீதி, புத்தளம்.
பொழுதுபோக்கு: ரீ.வி. பார்த்தல், கரப்பந்தாட்டம், நீச்சல்.

பெயர்: த. தங்கராசா
முகவரி: உப தபால் நிலையம், நேரிய குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி, கதைகள் படித்தல்.

சிறுகதை

# பந்தமாவது பாசமாவது

**-இராஜகுமாரன்-**



"உலக பந்தத்தை அறுத்துவிடு பேரின்பத்தை அடைவாய்". அரை நூற்றாண்டுக்கு முன் சட்டிச் சாமியார் கூறிய வார்த்தையின் உண்மையை இப்போது தான் அறிந்து கொண்டேன். பெண்சாதி, பிள்ளைகள்-பேரப்பிள்ளைகள், சொந்த பந்தங்கள் ஆகிய பிணைப்புகளால் நான் படும் வேதனை-அப்பப்பா சொல்ல முடியாது- உலக பந்தத்தை அறுத்துவிட வேண்டியதுதான்.

அப்போது எனக்கு எட்டு வயதுதான் இருக்கும். சட்டிச் சாமியார் என்னைப் பார்த்துச் சொன்னபோது நான் கொண்ட கருத்து-இன்று நினைக்கச் சிரிப்புத்தான் வருகிறது.

பட்டம் கட்டி கச்சான் காற்றில் வானத்தில் ஏற்றி வேடிக்கை காட்டுவதில் என் சின்ன மாமா கெட்டிக்காரர். என் உயரத்தை விடச் சற்று உயரமான பட்டம் கட்டுவார். வண்ணப் பட்டுக் கடுதாசிகளை ஒட்டி பெரிய குஞ்சமாக வால் கட்டிப்பறக்க விடுவார். பட்டத்தைத் தொட்டுப் பார்க்கவும் அவர் அனுமதிக்க மாட்டார். ஆனால் அது வானில் மேலே எழும்பி ஆடிக் கொண்டிருக்கும் போது உண்மையில் அழகாகத் தான் இருக்கும். பட்டத்தை வானில் ஏற்றி விட்டு, தொங்கல் நூலை வீட்டின் முன்புறமிருந்த பப்பாசி மரத்தில் கட்டி விடுவார். சாமியார் வந்து போன அன்றைய தினமும் மத்தியானம் சின்ன மாமா பட்டம் ஏற்றினார். வழமைபோல் தொங்கல்நூலை மரத்தில் கட்டிவிட்டு எங்கோ போய்விட்டார். அப்போது தான் சாமியார் சொன்னவார்த்தைக்கு எனக்கு அர்த்தம் பிடிபட்டது. 'பட்டத்துக்குக் கட்டியிருக்கிற நூலை அறுத்து விடு. நூலறுந்த பட்டம் கோடி வீட்டில் குடியிருக்கும் பேரின்பம் என்பவன் வீட்டில் போய் விழும். பட்டத்தைத் தொட்டுப் பார்க்கவே விடாத அந்த சின்ன மாமாவுக்குத் தெரியாமல், பேரின்பம் வீட்டுக்குப் போய் பட்டத்தைத் தொட்டுப் பார்த்து மகிழலாம்.'

இன்றைக்கு நினைத்தாலும் அன்றையக் குழந்தைத்தனமான எண்ணம்- எனக்குச் சிரிப்பை மூட்டுகிறது. அதே வேளையில் குடும்ப பந்த பாசப்பிணைப்புகளை அறுத்துவிடுவதால் ஏற்படக்கூடிய உண்மையான பேரின்பத்தைப் பற்றிய தெளிவு பிறக்கிறது.

எனக்கு வயது 58. என்னை விட என் இல்லத்தரசி பொல்லாத செல்லாச்சிக்கு 7 வயது குறைவு. எனக்கு 24 வயதில் கலியாணம். அடுத்த வருடமே மூத்தவனைப் பெற்றெடுத்தாள். தொடர்ந்து ஆணும் பெண்ணுமாக மொத்தம் ஏழு பிள்ளைகளைப் பெற்றுப் போட்டாள். இப்போ மூத்த மகனும் அவனுக்கிளைய அவனுடைய தங்கைமார் இரண்டு பேரும் போட்டி போட்டுக் கொண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்து- வீடு நிறையச் செல்வங்கள். குழந்தைச் செல்வத்துக்குக் குறைவில்லை. ஆனால் அதுகளைச் சீராட்டி வளர்க்க வேண்டிய செல்வம் என்னுடைய- வீட்டோடு வீடாக வந்து சேர்ந்து விட்ட மாப்பிள்ளைமார் இருவரிடமுமில்லை. கொஞ்ச நஞ்சமாக சம்பாதிப்பதையும் பெண்டாட்டி பிள்ளைகளுடன் சேர்ந்து வாரம் ஒரு சினிமா பார்ப்பதிலும்- தெருவால போற 'ஐஸ் கிறீம்' முதலான பண்டங்கள் வாங்குவதிலும் தீர்த்துவிட்டு மூன்று வேளை சாப்பாட்டையும் இடைத்தீனிகளையும் தேட என்னையே எதிர்பார்க்குதுகள். போதாக்குறையாக தன் மாமனார் வீட்டிலேயே குடியிருந்த மூத்தவனும் தனது 4 பிள்ளைகளுடன் போன மாதம் கோயில் திருவிழாவுக்கென வந்தவன் இன்னும் குடி எழும்பவில்லை. நாலாவது மகனும்- தனிக்குடித்தனக்காரன் தான்- தனது மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் வந்தான்- திருவிழா பார்க்கத்தான்-இன்னும் நகரவில்லை.

மூன்று வருடங்களுக்கு முன்னர் பென்சன் வாங்கிக் கொண்டு வீடு வந்தேன். குடும்பச் செலவுக்குக் கட்டுப்படியாகாத மாதாந்த ஓய்வூதியம். இப்போ இரண்டு கடைகளுக்கு கணக்கெழுதி சமாளிக்கிறேன். ஏற்கனவே பாவித்து வரும் கண்ணாடிக்கும் வயதாகிவிட்டது போலும். பார்வை குறைவதால் இந்த மாதம் எப்படியாவது புதுக்கண்ணாடி வாங்கலாம் என்றிருந்தேன். திருவிழாக் கூட்டம் வீட்டில் கூடாரம் அடித்ததால் அதுவும் முடியாது போலிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமைதானே கொஞ்ச நேரம் கூடுதலாகப் படுக்கலாம் என்றால் மண்டபத்தில் கொட்டமடிக்கும் சின்னதுகளின் கூக்குரல் காதைப் பிளக்கிறது. கலவரமோ குளப்பமோ என்று பயந்து கண் விழித்தேன். இருந்தும் படுக்கையிலேயே புரண்டேன். "என்னங்க.... சந்தைக்குப் போறல்லியா? இப்படியே படுத்துக்கிடந்தா காய்கறியெல்லாம் நம்ம வீடுதேடி வருமாக்கும்" தர்மபத்தினி செல்லாச்சி திருப்பள்ளி எழுச்சி பாடிவிட்டாள். படுக்கையைச் சுருட்ட வேண்டியதுதான்.

"மங்கை.... அந்த துவாய எடுத்துட்டு வா...." "உக்கும்.... இனி எழும்பிட்டார்.... எல்லாத்துக்கும் மங்கை தான் வேணுமாக்கும்.... நான் உடுப்புத் தோய்க்கிறன். உங்கட செல்லக்குஞ்சி சுமதிய கூப்பிட்டுச் சொல்லுங்களன்." இது மூன்றாவதின் முனகல்.

"சுமதிக்கண்ணா...அப்பாட துவாய எடுத்துட்டு வா கண்ணு...."

அண்ணிமாரோடும் சின்ன அண்ணனோடும் லூடோ விளையாடிக் கொண்டிருந்தாள், சுமதி. "நான் விளையாடுறன் அப்பா... நீங்கதான் போய் எடுங்களன். கொடியிலதானே கிடக்கு..."

உண்மைதான்...இனிமேல் நம்முடைய வேலைகளுக்கு எவரையும் கூப்பிடக்கூடாது. நாம்தான் எல்லாவற்றையும் செய்தாக வேண்டும். முகம் கழுவிக்கொண்டு வந்தேன்."ஏய் மங்கை- கோப்பியக் கொண்டா..."

கோப்பிக் கோப்பையோட வந்த மங்கை, "அப்பா கடைக்குப் போறீங்களா?... என்ர செருப்பு பிய்ந்து போய்க் கிடக்குது. அதக் கொஞ்சம் தைச்செடுத்துட்டு வாங்க அப்பா... நாளைக்கு கிளாசுக்குப் போகக்குள்ள போட்டுட்டுப் போகணும்..." தன் காரியத்துக்காக வருகிறாள்.

உம்...இப்ப அப்பாட தயவு தேவைப்படுது. அதோ செல்லாச்சி முந்தானையால முகத்தைத் துடைத்துக் கொண்டு குசினி வாசல்ல நின்று எட்டிப் பார்க்கிறா....!

"இப்பதானே கோப்பி சாப்பிட்டீங்க... தோசைக்குப் போட்டிருக்கிறேன்... கடையால வந்து சாப்பிடுறீங்களா...? இல்ல இப்பவே..."

"ரெண்ட இப்பவே ஊத்தித்தா... சாப்பிட்டுத்தே போறன்..." 'கடைக்குப் போய் விட்டுத் திரும்புறதுக்குள்ள தோசையும் இருக்காது மாவும் இருக்காது' சொல்லுவதற்கு நாக்கு வரையும் சொற்கள் வந்து விட்டன.

சாப்பாட்டு மேசையில் போய் அமர்ந்தேன். செல்லாச்சி முதல் தோசையை சுடச்சுட பிளேட்டில் போட்டாள். வலது தோளில் மெல்லிய ரோசா இதழ் ஒன்று பட்டது. திரும்பிப் பார்த்தேன். சக்குட்டி.... என் மூத்த மகனின் இளையவன், தூக்கி மடியில் வைத்து தோசையைக் கிள்ளி அவன் வாயில் மெதுவாக வைத்தேன். சுவைத்தான். எங்கிருந்தோ ஓடி வந்தாள் அவனுடைய தாய். வெடுக்கென வாரி எடுத்தாள். "என்ன மாமா நீங்க. அவனுக்கு வயிற்றால போக மருந்து கொடுத்திருக்கு... துப்புடா... துப்பு" வாயில் ஒரு சின்னத் தெறி. குழந்தை வீரென்று கத்தியது. சக்குட்டி ஏன் கத்துகிறான்' என்று அவனுடைய அண்ணன் ரவி- அக்கா லெச்சி... எல்லோரும் ஓடிவந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துண்டு பங்கிட்டேன். இரண்டாவது தோசையும் என் வாயில் படவில்லை. சுமதியும் சின்னவளும் வந்து விட்டார்கள்.

"நீங்க தின்னுங்க- அதுகளுக்கு நான் கொடுப்பன் தானே...

"ஆமாம்... அவர்கள் தட்டில வைத்துக் கொடுத்தாலும் தூக்கி வைத்து ஊட்டினாலும் தின்னவே மாட்டுதுகள். தாத்தா கையால ஊட்டினால் மட்டும் தின்றுவிடுங்கள்." இது செல்லாச்சியின் விமர்சனம்.

பேருக்கு 'மூன்று தோசை சாப்பிட்டேன்' என்று கருதிக் கொள்ள வேண்டியதுதான். அந்த எண்ணமே பசியை விழுங்கிவிட்டது. புறப்பட்டேன். மூத்தமகள் ஓடி வருகிறாள். "அப்பா அவருக்கு நெஞ்சி வருத்தம் இருக்கப்பா. ஈரல் வதக்கிக் கொடுத்தால் நல்லது என்று அடுத்த வீட்டு அன்னம்மாக்கா சொல்றா. கொஞ்சம் வாங்கிட்டு வாங்கப்பா."

"அப்பா...எனக்கு கண்டோஸ்" இது காயா..

"எனக்கு ..லூயிங்கம் அள்பள்பா" இது சின்னவள்.

இப்பிடி ஒவ்வொருவரும் வெளிவாயில் வரை வந்து வழி அனுப்ப சந்தைக்குப் புறப்படுகிறேன்.

சே.. ஓய்வாக இருக்கலாம் என்றால் இந்த வீட்டில அது முடியாத காரியம். எப்போது பார்த்தாலும் ஒரே தொல்லை தான். நிம்மதியே இல்லாமல் போய் விட்டது. கண்களை மூடிக்கொண்டு கொஞ்ச நேரமாவதுதூங்க வசதியில்லை. இரவிலும் இதே கதிதான். யாரிடமோ வாங்கிக் கொண்டு வந்த ஸ்பீக்கரை பெரிய வொலியுமில் வைத்து மேல்நாட்டு சங்கீதங்களை இரவு 12 மணிக்கு மேலும் போடுகிறானுகள் இளையவனுகள். "சவுண்டைக் கொஞ்சம் குறையுங்கடா" என்று ஒரு நாள் சொன்னேன். கொஞ்சம் பஞ்சைக் கொண்டு வந்து என்னுடைய இரு காதுகளுக்குள்ளும் திணித்து விட்டுப் போய்விட்டானுகள்.

நிச்சயமாக இதிலிருந்து விடுதலை தேவை. பொறுத்துப் பொறுத்து பொறுமையின் எல்லைக்கே போய் விட்டேன். இப்பொழுதுதான் சட்டிச் சாமியார் 50 வருடங்களுக்கு முன்னர் உபதேசித்த மந்திரம் முழுமையாகப் புரிகிறது.

"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனைதான்... வாழ்க்கை என்றால் தாங்காது பூமி..."

தேத்தண்ணீர் கடையில் வானொலி ஒலித்தது. எனக்காகவேதான் அந்தப் பாட்டுப் போல் இருக்கிறது!

சந்தையை கால் வலிக்குமட்டும் சுற்றி விட்டு வீடு திரும்பினேன். புது மொடல் 'டொய்ட்டா- கொறோணா' வண்டி வாசலில் நிற்கிறது. யார் வந்திருப்பார்கள்....?

வீட்டில் ஏற்கனவே இருந்த ரகளையை விட பத்து மடங்கு சப்தம் அதிகமாகக் கேட்டது. மண்டபத்தில் காலடி எடுத்து வைத்ததும்... "அத்தான்" என்று ஓடி வந்து என்னைக் கட்டிக் கொண்டான் எனது அருமை மைத்துனன். மனைவி செல்லாச்சியின் தம்பி சபா.

பண்டாரவளையில் . தேயிலைத் தோட்டம் ஒன்றின் அதிகாரி. செல்வம்- அத்துடன் செல்வாக்கு. எதற்கும் குறைவில்லை. நன்றாகவே இருக்கிறான்.

"வாப்பா... வா.. என்ன இத்தனை வருசமா இந்தப் பக்கமே ஆளக்காணல்ல... எங்களையெல்லாம் மறந்திட்டியோ...?

ஓடி வந்து வாயைப் பொத்தினான்.

"உங்களையெல்லாம் எப்படி அத்தான் மறக்க முடியும்? வேலை கடுமை... அதனால தான் வர முடியல்ல..."

"என்னங்க... தம்பிர மகள் கோமதிக்கு கலியாணமாம். எல்லாரையும் வரட்டாம்..." செல்லாச்சி வாய் முழுவதையும் திறந்து மூடுகிறாள். தம்பியைக் கண்டதும் அவளுடைய முகத்தில ஒரு தனிக்குறுகுறுப்பு- காலையிலிருந்து இப்ப 10.30 - இதற்கிடையில் இவளுக்கு 10 வயது குறைந்திருக்குது போலிருக்குதே!

"அத்தான் குடும்பத்தோட எல்லாருமே வாங்க. கலியாணத்துக்கு இன்னும் 12 நாட்கள் தான் இருக்கு. இன்னும் இரண்டு மூன்று நாட்களில புறப்படுங்கள். எல்லாருக்கும் 'மினி பஸ்' ஏற்பாடு செய்யிறன். 36 பேர் பயணம் செய்யலாம். இரண்டு வாரம் எங்களோட தங்கிட்டு... இரண்டு வாரம் என்ன, இரண்டு மாதமே தங்கியிருந்து விட்டு ஆறுதலாக வரலாம். அக்காவுக்கும் பிள்ளைகளுக்கும் கொஞ்சம் சேஞ்சாகவுமிருககும். நல்ல மலை நாட்டு சுவாத்தியம் உங்களுக்கும் நல்லாயிருக்கும். மறுக்காம எல்லாருமே புறப்படுங்க...."

நல்ல 'ஐடியாதான். ஆனால் நான்! என் மனம் அமைதியைத் தேடுகிறது. தனிமையை விரும்புகிறது. பந்தங்களை அறுக்க...

"என்னத்தான் கடுமையாக யோசிக்கிறீங்க..?"

"இல்ல.... பிள்ளைகளுக்கெல்லாம் பள்ளிலீவுதான். எல்லாரும் போகலாம். ...ஆனா... என்னால தான்... கணக்குகள ஓடிட்டருக்கு அனுப்ப இன்னும் இரண்டு வாரம்தான் இருக்கு. சபா... அதுகளெல்லாம் வரட்டும். என்ன மட்டும் விட்டுடு.... எனக்கு வேல கிடக்குது...."

சபா மட்டுமல்ல..., செல்லாச்சி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லோருமே நச்சரித்தார்கள், வரும்படி ஆனால்... என்னால் முடியாது என்று ஒரேயடியாகக் கூறி விட்டேன்.

குறிப்பிட்ட நாள் வந்தது. முதல் நாள் இரவு எவருமே தூங்கவில்லை. பிரயாண ஆயத்தம், புதிய மினி பஸ் வீட்டு வாசலில் வந்து நின்றது. பெட்டி பெட்டியாக பல வண்டியிலேறின பலகார வகைகளெல்லாம் பெரிய பெரிய மண்பானைகளில்....!

... கடைசியாக ஆண்கள், பெண்கள் குழந்தைகள் குட்டிகள் எல்லாமாக 31 பேர் வண்டி நிறைந்தது. கடைசியாக வண்டியில் ஏறிய செல்லாச்சி.... ஏக்கத்தோடு என்னைப் பார்த்தாள். இரண்டு முத்துக்கள் கண்களிலிருந்து உருண்டன. கலியாணமாகி இத்தனை வருடங்களாகின்றன. இன்றுதான் என்னை விட்டு முதன் முதலில் பிரிகிறாள்.

எனக்கும் கொஞ்சம் மனது கனத்தது. இருந்தாலும் என்னையே நான் சமாளித்துக் கொண்டேன். சட்டிச் சாமியார் மனக்கண்முன் தோன்றுகிறார்... 'உலக பந்தங்களை அறுத்துவிடு.....,'

வண்டி புறப்பட்டு விட்டது. எல்லாரும் "அப்பா", "மாமா" "தாத்தா"... காதைப் பிளந்ததுமட்டுமல்ல அந்தத் தெருவையே நடுங்க வைத்த அந்தச் சத்தத்துடன் அந்த வண்டியின் இரைச்சலும் சேர்ந்து தேய்ந்து மறைந்தது.

"அப்பாடா... என்ன அமைதி...." வீட்டினுள்ளே நூழைகிறேன். கதிரவன் இப்போது தான் எட்டிப் பார்க்கிறான். இரவு முழுவதும் எல்லாரும் போட்ட பயண ஆயத்த ஆர்ப்பாட்டத்தில் கொஞ்ச நேரம் கூட கண் மூடவில்லை. இமைகள் ஒன்றோடு ஒன்று முட்டுகின்றன. முன் கதவைத் தாழிட்டு விட்டு 'ஈசிச் சேரி'ல் சாய்கிறேன். எங்கும் நிசப்தம். என்ன நிம்மதி...!

★★★

"அம்மா...பால்"..

"தங்கச்சி- பாத்திரத்தக் கொண்டாங்க சீக்கிரம் வாங்க...."

"..........

"அம்மா நான் பல வீடுகளுக்குப் போகணும் பாத்திரத்தக் கொண்டாங்க..."

விழித்தேன். அவன் பால்காரன் பாவம். எத்தனை இடங்களுக்குப் போக வேண்டியவன். இத்தனை பேர் இருக்குதுகள் ஒண்ணுக்குமே காது கேக்கலியா?

"செல்லாச்சி... எங்க சத்தத்தைக் காணோம்... மங்கை... மங்கை...!"

"சீக்கிரம் வாங்கம்மா. ஐயா நீங்களாவது பாத்திரத்தைக் கொண்டாங்களேன்..."

ஓஹோ வீட்டில யாருமே இல்லையே நான்தான் மறந்துட்டேன்!

கொஞ்சம் பொறு தம்பி... இதோ வந்துட்டேன்..." நானே போய் பால் வாங்கும் பாத்திரத்தைத் தேடினேன். கண்ணுக்குத் தென்படவேயில்லை. அடடே... இரவிரவாக என்னவெல்லாமோ பண்ணியதுகள் பாத்திரங்கள் எதையுமே கழுவி வைக்காம அப்பிடியே எல்லாத்தையும் போட்டுட்டுப் போய் விட்டுதுகள். ஏதோ ஒரு பாத்திரத்தை எடுத்து அலம்பி எடுத்துக் கொண்டு வர்ரதுக்குள்ளேயே பால்காரன் கத்துகத்தெண்டு கத்திவிட்டு, நான் வாயிலுக்கு வரமுதலே சைக்கிளை மிதித்துக் கொண்டு பறந்து விட்டான்.

மீண்டும் வந்து ஈசிக்சேரில் அமர்ந்தேன். சுவரில் மாட்டப்பட்டிருந்த மணிக்கூடு ஆறு முறை ஒலியெழுப்பியது. அடடே வேலைக்குப் போக வேண்டுமே...! "மங்கை அந்தக் கோப்பியை..." என்ன மறதி எனக்கு... அவர்கள் இப்போது 15 மைல் தூரம் போயிருப்பார்களே!

நானே சமயலறைக்குள் போனேன். கால் வைக்க முடியாது. எல்லாமே அலங்கோலமாகக் கிடந்தன. வெந்நீர் வைக்கும் பாத்திரத்தைத் தேடிப் பிடிக்கவே பத்து நிமிடமாச்சுது. 'கெரசின் ஸ்டோ'வின் திரியைத் திருகினேன். தீப்பெட்டி எங்கே...?

"சுமதி... சுமதி... அந்தத் தீப்பெட்டியை எடுத்திட்டு வா..."

ஓ... அவளும்தானே போய்விட்டாள்.

இவர்களை எல்லாம் இனி நான் ஏன் தேடவேண்டும்? இனிமேல் நான் தனி மனிதன்... பந்தமுமில்லை- பாசமுமில்லை. காலையில் கோப்பி தேவைப் படுகிறதே...! நாமே போட்டுக் குடித்தாலென்ன! ஆனால் தீமூட்ட தீப்பெட்டி...? அதோ அந்த டப்பாவுக்குப் பக்கத்தில இருக்கே... அப்பாடா.

அடுப்புத்திரிகள் எரிய ஆரம்பித்தன. பாத்திரத்தில் தண்ணீரைப் பிடித்து அதனை ஸ்டோவ் மீது வைத்தேன். முன்புறம் போனேன்.

"தங்கச்சி மங்க எங்கேடி இண்டைய பேப்பர்..?"

சே... மங்கையாவது மண்ணாங்கட்டியாவது.

முன் மண்டபத்தில் பேப்பரை வீசியெறிந்து விட்டிருந்தான் பேப்பர் பையன். கீழே கிடந்ததை எடுக்கக் குனிந்தேன்...."ஐயோ".. வாய்விட்டே கத்தினேன். இடது இடுப்பில் ஒரு பிடி... ஐயையையோ கடுமையான பிடிப்புப்போல இருக்கே..சே..!

"டேய் தம்பி மூத்தவா... அந்த பாமைக் கொஞ்சம் எடுத்துட்டு வா... அப்பப்பா என்னவலி!"

ஓ அவனும் போய் விட்டானா? ஏன் எனக்கென்ன? கண்ணாடி அலுமாரியில தானே பாம் டப்பா இருக்கு. நோவையும் தாங்கிக் கொண்டு அலுமாரியடிக்குப் போனேன். கதவை இழுத்தேன். பூட்டிக் கிடககிறது.

"ஏய் செல்லாச்சி! வீட்டுக்குள்ள இருக்கிற அலுமாரியையும் இப்பிடிப் பூட்டி வைக்க வேணுமா..?"

அடடே... நான் ஏன் எவருடைய உதவியையும் நாடவேண்டும். நான் சுதந்திர மனிதனாச்சே..! இந்த இடுப்பு நோ என்னை என்ன செய்யப் போகுது?

கோப்பி விடாய் நாக்கை வறட்டுகிறது. அடுப்படிக்குப் போனேன். பாத்திரத்துள் தண்ணீர் ஊற்றி வைத்து பத்து நிமிடமாச்சு. இன்னும் தண்ணீர் கொதிக்கவில்லையா? என்ன.. எடுப்பு- இப்பத்தானே கொழுத்திவிட்டுப் போனேன். யார் அடுப்பை அணைத்தது? இவன் ரவியின் வேலையாகத் தானிருக்கும்.

"டேய் ரவி... அப்பப்பாவோட விளையாடுற நேரம் இது தானா...?"

சே! என்ன மனசு எனக்கு? எல்லோருமே வீட்டைவிட்டுப் போன பிறகு அவர்கள் ஒவ்வொருவராகத் தேடிக் கொண்டிருக்கிறேனே! எதுவானாலும் சரி நான் இனி அமைதியான - ஏகாந்த வாழ்க்கையைத் தேடவேண்டியதுதான்.

விவரம் அறிந்த நாள் முதலாக காலையில் பல்விளக்கியும் விளக்காமலும் பருகிப்பழகிய கோப்பிக்கு இன்று முதல் விடுதலை.

குளித்துவிட்டேன். அதிலும் தடுமாற்றம்தான். சோப்பு, டவல் எல்லாவற்றுக்கும் ஒவ்வொருவருடைய பெயரையும் அழைத்துப் பார்த்துவிட்டேன். ஒரு படியாக எட்டேகாலுக்கு வெளியேற ஆயத்தமானேன். செருப்பைத் தேடினேன். இந்த வீட்டில எந்த ஒரு பொருளும் வைத்த இடத்தில இருக்காது. "ஏய் காயா எங்கடி எண்ட செருப்பு- வழக்கமாக மண்டபத்த நீ தானே கூட்டிப் பெருக்குவே...!"

காயா இப்போது 30 மைலுக்கப்பால் போயிருப்பாள்... நானே தேடிக் கண்டுபிடித்து வீட்டை விட்டு வெளியேறினேன். சுதந்திர புருஷன் என்ற சந்தோஷம் என் இதய மெல்லாம்- உடம்பு பூராவும் நிறைய நடந்து கொண்டிருந்தேன்.

கடைக்குச் சென்று கணக்கேடுகளைப் புரட்டினேன். கண் கனத்தது. எழுத்துக்கள் மங்கின. இரவு தூங்க முடியாதமையினால் ஏற்பட்ட தூக்க வெறியாயிருக்கும். அடடே வயிற்றிலும் ஏதோ..!

ஓஹோ காலைக் கோப்பியுமில்லை. பலகாரமும் இல்லை. எப்படியும் ஒரு கோப்பி குடித்தால் சரியாகிவிடும். கடைப்பையனை அழைத்து வெளிக்

அடுத்த பக்கம்......

# மக்கள் பிரதிநிதி

-தி/இளையவன்-

அமைதித் தென்றல் அடங்காத் தன்மை கொண்டு அடாவடித்தனம் செய்து கொண்டிருந்த நேரம் அது. வங்காளவிரிகுடா கடலின் கொந்தளிப்பு மட்டும் பெரிதாக ஊரைப் பய முறுத்திக் கொண்டிருந்தது. இப்போ அந்தப் பிராந்தியத்தில் மாலை 7 மணியாகி விட்டாலே இரவு 12 மணி போன்ற செயற்பாடு. நீண்ட காலங்களாக மின்சார விளக்குகள் எரியாத அந்தப் பிரதேசத்தில் கடல் அலை சப்தத்துடன் இடையிடையே எங்கோ, தூரத்தில் துப்பாக்கி வெடிச் சத்தங்கள்.

வௌவால்கள் கூட பறக்கத் தயங்கும் அந்த இரவுக் கோட்டைக்குள் இருவர் மட்டும் கடற்கரைப் பக்கமாக காடாய் வளர்ந்திருந்த அந்தத் தாழம் பற்றைகளுக்கு மறைவில்.....

"என்ன சொல்றாங்க...?"

"இப்போ எல்லாம் என்ட கதையை மதிக்கிறாப் போல இல்ல?"

அவனது இதயத்தைப் போல கொதித்துக் கொண்டிருந்த கடல் அலையைப் பார்த்து பெருமூச்சு விட்ட படியே... ,

"என்னையும் வேற மாதிரியா நெனக்கிறாங்க....!"

"வேற மாதிரின்னா....?"

"தங்களோட இனத் துரோகியா. விரைவில் பயங்கரவாதி என்று சாட்டுச் சொல்லி இவங்களாகவே சுட்டாலும் ஆச்சரியப்படக்கூடியதல்ல."

எவ்விதமான வார்த்தைகளுமின்றி சிறிது நேரம் அங்கு மௌனம் நிலை கொண்டது. எங்கோ தூரத்தில் ஒரு ஆள்காட்டி குருவியொன்று உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிப்பவனைப் போல தனது பலம் அனைத்தையும் திரட்டிக் காட்டுக் கூச்சல் போட்டுக் கத்திக் கொண்டு மறைந்தது. இருவரது பார்வையிலும் தென்பட்டது தூரத்தில் சென்று கொண்டிருந்த 'கன் போட்'.

"எல்லோரும் அப்படியா...?"

"இல்ல. வேலை வெட்டி இல்லாம ஊர் சுற்றித் திரிகிற கொஞ்சப் பேரால தான் இப்படி. என்னைக் கூட சமூக விரோதியா கதைத்துத் திரிகிறவர்களும் அவர்கள் தான். அவர்களுக்குச் சனமும் கொஞ்சம் பயம்."

"..............."

"இதுலெயெல்லாம் வேறு யாருக்கும் விருப்பமில்லதான். என்ன செய்றது வெளியில சொல்ல முடியாத பயம். அதை விட தனக்கேன் வம்பு என்கிற சுயநலம்தான் நெறைய இருக்கு."

"கரீம்! நாம எப்படி வாழ்ந்த ஆட்கள்.....? சே! எல்லாத்தையும் கொஞ்ச நாட்களுக்குள்ளேயே மறந்து இப்படி மனுசத்தன்மையே இல்லாம........"

"விதி. நாம என்ன செய்யறது?"

"இல்லை. அப்படி சொல்லி மழுப்பேலாது. எல்லா இடத்திலும் நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது இங்க மட்டும்தான் இப்படி யென்றால் இதுல ஏதோ உள் நோக்கம் இருக்கு."

"ஒரு சிலரது பழி வாங்கிற குணம்தான். அப்படித்தான் நெனைக்க வேண்டியிருக்கு."

"என்னடப்பா! இன்னும் பழசுகளை நெனைச்சுக்கொண்டு நடந்துக்கிட்டா இதற்கு முடிவு...!"

"ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்" கரீம் தொடர்ந்தான்.

"உதயா! இப்படி நாங்க சந்திக்கிறது சிலருக்குத் தெரிஞ்சு போச்சு. என்ன நடந்தாலும் எனக்குக் கவலையில்லை."

"எப்பவாவது சாகத்தானே வேண்டும். எப்படியென்றாலும் பழைய சமாதான நிலைமை வரணும். அதற்கு என்னோட உதவியும் இருக்குமென்றால் அத பெருமையா நெனைக்கிறேன்."

"கரீம்! நீ கிறேட்றா...! முந்தி எங்கட ஆட்கள் இந்திய இராணுவத்துடன் திரிஞ்சி உங்க ஆட்களுக்கு செய்த அநியாயங்களையெல்லாம் மறந்து.... நீ தாண்டா சமூகத்திற்கு தேவை."

"அந்த நேரத்துல இப்போ நான் இருக்கிற ஸ்தானத்துல தானே நீ இருந்தே. அதை எப்பவும் மறக்க மாட்டேன்."

"எல்லா சமூகத்திலும் நச்சுக் கொடி படர்ந்துதான் இருக்கு. அத நாம கண்டுக்காம விட்டா பின்னாடி எங்கட கழுத்தையும் சுற்றத்தான் செய்யும். இதுல வேதனை; படிச்சவங்களும் மௌனமாக இருப்பதுதான்."

"உதயா! இப்போ முந்தி மாதிரி யில்லை. எல்லோருக்கும் இதெல்லாம் பிழையென்று தெரியுது. நாளைக்கு நடக்க இருக்கிற சல்லித் திருவிழாவுக்கு உங்கட ஆட்கள் தைரியமா எங்க வழியால போகலாம். பாதுகாப்பிற்கு நான் உத்தரவாதம்."

"கரீம்! உன்னை நான் நம்புறேன். என் வார்த்தையை நம்பித்தான் எங்கட ஆட்கள் உங்கள் வழியால வரத்தயாராக இருக்காங்க."

"தைரியமா இருங்க இனிமேல் எந்த மோசமான நிலைமைக்கும் இடம் கொடுக்க மாட்டோம்." கரீமின் கைகளை எடுத்து அழுத்தமாக தன் முகத்தில் பதித்து பின்னர் முத்தம் கொடுத்தான்.

★★★

"ஹாஜியார்! உங்க மகன் போக்கு எங்களுக்குப் பிடிக்கல."

"எம்மவன் அல்லாஹ் ரசூலுக்கு மாற்றமாக நடக்கவே மாட்டான். அதனால நமக்கு எப்படியும் நன்மையைத்தான் செய்வான்."

"நீங்க இப்படி சொல்லக்கூடாது. காபீரோட உறவு எங்களுக்குத் தேவையில்லை."

"யார் காபீர்...? பரம்பரயா முஸ்லிமா வந்தா சரியா? ஒரு காபீருக்கும் முஸ்லிமுக்குமிடையில் வித்தியாசத்தைக் காட்டுவது தொழுகைதான் என்ற நபி வாக்கு இருக்கு. இந்த ஊர்லயும் எத்தனை பேர் தொழுகிறோம்? தம்பிமாரே! சும்மா முஸ்லிமென்று சொல்லிக் கொண்டால் அதற்கு அர்த்தமில்லை.

"மனிதர்களுக்கிடையில் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் நபியால அறிமுகப் படுத்தப்பட்டதுதான் இஸ்லாம். அதை முழுக்க முழுக்க பின்பற்றி நடப்பவர்கள்தான் உண்மை முஸ்லிம்."

"ஹாஜியார்! எங்களுக்கு இப்ப உங்கட பயான் தேவையில்லை. முந்தி அவங்கட கை ஓங்கியிருந்த போது என்ன ஆட்டமெல்லாம் போட்டானுகள். ரமீஷ் இஞ்ச வாடா. பாருங்க ஹாஜியார் நல்லா பாருங்க. இன்னும் எந்தத் தொழிலும் பார்க்க முடியாதபடி இருக்கிற இவன் கையைப் பாருங்க. இதையெல்லாம் மறந்திடச் சொல்றீங்களா...?"

"இல்லப்பா மன்னிச்சிடச் சொல்றேன்."

"நீங்க ஆயிரம் சொன்னாலும் சரி நாங்க ஏத்துக்க முடியாது. எவ்வளவு நாளைக்குத் தான் பொறுமை, பொறுமையென்று பொம்பளை மாதிரி வீட்டுக்குள்ள இருக்கிறது? இப்போ சரியான சந்தர்ப்பம் வந்திருக்கு. அத உங்கட மகன் கெடுக்கப் பார்க்கிறான். அத சொல்லிட்டுப் போகத்தான் இந்த ராத்திரி 11 மணியையும் பார்க்காம வந்தோம்."

"தம்பிமாரே! பொறுமையாளியோடும் தொழுகையாளியோடும் அல்லாஹ் இருக்கிறான் என்று ஹதீஸ் இருக்குப்பா. நமக்கு அல்லாஹுத்தாலாவின் உதவி அவசியம் தேவை. நாம அதுக்கு ஏத்தமாதிரியாக நடந்துக்கணும்."



"சும்மா போங்க ஹாஜியார். பொறுமைக்கும் ஒரு அளவுண்டு. உங்களுக்கும் உங்க மகனுக்கும் அவரோட சேர்ந்த ஒரு சிலதுக்கும் முன்னுக்கு வரத்தைரியமில்லை. தொடை நடுங்குது. அத வெளியில காட்டிக்காம சும்மா கதை உடுறீங்க."

தனக்குள் மௌனமாக அழுது கொண்ட சுல்தான் ஹாஜியார் இவர்களுக்கு நல்ல ஈமானைக் கொடுக்க வேண்டுமென மனதால் இறைவனை வேண்டிக் கொண்டு,

"பயம்தான். இத இப்படியே வளரவிட்டால் இப்போ அவங்க அழி வாங்க. அவங்க கை ஓங்கும் போது பிறகு நாம அழிவோம். இந்த அழிவுகளெல்லாம் இனியும் தொடரக் கூடாது என்ற பயம் தான். மனிதக் கொலை கொடிய பாவம். அந்தப் பாவமும் பழியும் நம்ம சமூகத்தின் தலையில விழுந்திடக்கூடாது என்ற பயம் தான். ஏன்.... இப்போ நல்லா அதுவும் உசாரா இருக்கிற உங்கட உயிருக்கும் உடம்புக்கும் எதிர்காலத்துல அழிவுகள் வந்திடக்கூடாது என்ற பயம்தான் போதுமா....?" சுல்தான் ஹாஜியாரோட பேச்சில் சற்று சூடு பறந்ததினால் அங்கு மௌனம் நிலவியது. எந்த வார்த்தையை யார் ஆரம்பிப்பது என்று இளைஞர்கள் குழம்பிக் கொண்டிருந்தார்கள்.

"அல்லாஹ்வுக்காக நாளைக்கு அவர்களை அவங்கட வழிப்பாட்டுக்குப் போக விடுங்க."

"நாங்களா தொடங்கினோம்? போன கிழமையும் அதால போன பஸ்ஸுக்குள் குண்டு வீசியது யாரு....?"

"யாருப்பா...? யாரு. உனக்குத் தெரியாது. உனக்கென்ன அவங்களுக்கே அது யாரு என்று தெரியாது. வீடு இழந்து உறவை பிரிஞ்சு, அனாதையா அகதியா கோயிலைச் சுத்தி குடும்பம் நடத்துற அவங்களை ஒரு தடவையாவது நீங்க யாராவது போய்ப் பார்த்தீங்களா....? எவ்வளவு பயத்திற்கு மத்தியில் அவங்க வாழ்வு போய்க்கிட்டிருக்கு. ஒரு சின்ன சீன வெடிச்சத்தம் கேட்டாலும் எடுத்த சாமான்களையும் அப்படியே போட்டு விட்டு காட்டுக்குள்ள ஓடி ஒழிஞ்சு தங்களைப் பாதுகாத்துக் கொள்ற அந்த சனங்களா குண்டு வீசி பழி வாங்கப் பார்த்தது என்று நீங்க நம்புறீங்க? தம்பிமாரே! நீங்க வளர்ந்தவங்க. உங்களால் எவ்வளவோ நல்ல விசயங்களை ஆக்க முடியும். அதைவிட்டு வீணா அழிக்கிற பாதயில போகாதீங்க."

ஒரு பெருமூச்சை விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு ஹாஜியார் தொடர்ந்தார்.

"உங்கள எத்தனே பேர் அவங்களோட தொழில் பார்த்தவங்க, விவசாயம் செய்தவங்க, படிச்சவங்க, விளையாடியவங்க இருக்கீங்க. அவங்க மனசுகளை ஏன் உங்களால் புரிஞ்சுக்க முடியல்ல? அவங்களுக்குள்ளும் கெட்டவங்க இருக்கத்தான் செய்றாங்க. ஆனால், நாம முஸ்லிம். சாந்தி மார்க்கத்தை உலகிற்கு சொல்லிக் கொண்டிருக்கிற இனம், ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துகிற மதத்தைச் சார்ந்தவங்க. நன்மைகளை மட்டும் தான் செய்யணும். அப்பதான் எங்கட வாழ்க்கையில அல்லாஹ்ட பரக்கத் கிடைக்கும்."

"ஹாஜியார்! நாங்களும் நல்லவர்களாகத்தான் இருக்க விரும்புறோம். ஆனால் அவர்களை நம்ப முடியாமல் இருக்கே...?"

"அவங்க உங்களை நம்பக் கூடிய வாறு வாழ்ந்து காட்டுங்க அதுலதான் வெற்றி."

அவர்கள் மனதில் ஏதோ ஒரு மாறுதல் தோன்றியிருக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிட சுல்தான் ஹாஜியார் அதுக்கும் மேலே எதுவும் பேச முயற்சிக்காது மௌனமாக இருந்தார். அவர்களும் மேற் கொண்டு பேச எதுவுமின்றி அமைதியாக அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

★★★

"உதயன் வந்தாச் சுங்களா........?"

"இன்னும் வரவில்லை."

"பார்ப்போம் எப்படியும் ஒரு நல்ல முடிவோடதான் தம்பி வரும்."

எல்லோர் எதிர்பார்ப்புகளும் உதயகுமார் வருகையினையும், அவன் சொல்ல இருக்கும் உறுதியான வார்த்தைகளையும் நம்பியே இருந்தன.

"ஐயா! நமக்கு சிக்கல் வருமென்றால் ஏன் போகணும்....?"

"அப்படியில்லை. எவ்வளவு காலத்திற்கு நாம இப்படி பிரிஞ்சு தனியா வாழ்றது?"

என்றைக்காவது அவங்களோட நாம் இணைந்தால்தான் நம்மட வயல், தொழிலை சிறப்பா நடாத்த முடியும். அதுக்கு இப்படியான விசயங்களைத் தான் பயன்படுத்திக் கொள்ளவேணும்."

"உயிருக்கே ஆபத்தென்றால் ஏன்......! நாங்க சல்லித் திரு விழாவிற்கு அதால போகாம சுத்தி காட்டுவழியால போனால் என்ன.....?"

கேள்வி கேட்டவரை தலை நிமிர்ந்து சற்றுக் கவனித்த கிருஷ்ணமூர்த்தி ஐயர்,

"போகலாம் தம்பி. அவங்களோட நாம முன்னர் போல இணைஞ்சு வாழ்வதற்கு இப்படியான சந்தர்ப்பங்களைத்தானே பயன்படுத்தணும் என்று சொல்றன்."

"எனக்கென்றால் நம்பிக்கையில்லை."

"எனக்கிருக்கு. எப்பவும் நாம் பிரிஞ்சிருக்கவே முடியாது. நிச்சயம் இன்று இதற்கொரு நல்ல முடிவை உதயன் கொண்டு வருவான். நீங்கள் நாளைக்குப் பயணம் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தைரியமாகக் கவனியுங்கள். இனிமேல் வரப் போற விடியல்கள் நல்லதாகவே இருக்கட்டும்."

★★★

அண்மையில் கேட்ட டுமீல்..... டுமீல்..... என்ற தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச் சத்தங்கள்தான் ஹாஜியாரின் தூக்கத்தைக் கெடுத்தது. எழுந்தவர் மணியைப் பார்த்தார். மணி 4.30. சுப்ஹுத் தொழுகைக்கு இன்னும் பத்து நிமிடங்களே இருப்பது கண்டு மீண்டும் உறங்க முயற்சிக்க வில்லை. 'லைட்'களைப் போட்டார்.

சுப்ஹுத் தொழுகையின் பின்னர் வெளிப்பள்ளிவாசலுக்கு வந்தவர் பார்வையில் தென் பட்டது சிறு கூட்டம்.

"ஹாஜியார்! ராத்திரி யாரோ ரெண்டு பயங்கரவாதிகளாம். சாமான்கள் வாங்க வந்திருக்கணும். வசமா மாட்டிக்கிட்டாங்க."

'யா அல்லாஹ்!' என்ற பெருமூச்சுடன் மௌனமானார். ஜமாத் தொழுகை முடிந்த பின்னர் தொழுகைக்கென வந்தவ ரொருவர் செய்தியையும் கொண்டு வந்தார்.

"சாமான்கள் வாங்கத்தான். கடற்கரையால வந்திருக்கானுகள் வசமா மாட்டிக்கிட்டதால ஓட முடியல. பக்கத்திலிருந்த தாழம் பற்றைக்குள்ள பதுங்கிட்டானுகளாம். விடுவாங்களா, தாழம் பற்றையை நோக்கிக் குறி வச்சதுல ரெண்டு பேரும் அவுட்டாம்."

இதற்கும் மேல் கதைகளை காதில் வாங்கிக் கொள்ள இஷ்டமில்லாதமையினால், 'திக்று' செய்வதற்கென பள்ளிவாசல் உள்ளே சென்றார் சுல்தான் ஹாஜியார்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது. ஊரே பரபரப்பானது. எங்கும் இனம்புரியாதவொரு பதட்ட நிலைமை. சுல்தான் ஹாஜியார் மகன் கரீமும் சுடப்பட்டவர்களில் ஒருவர் என்ற செய்தி விடியுமுன்னே ஊர்வலம் வந்தது.

அக்கினிச் சூரியன் தன் ஆவேச ஆயுதங்களைக் கொண்டு அனைத்தையும் சுட்டெரிக்க ஆரம்பித்தான். அதைப் பொருட்படுத்தாது கடற்கரையெங்கும் மனிதத் தலைகள்.

கடல் மணற்பரப்பில் இரண்டு உடல்களும் அமைதியடைந்திருந்தன. மௌனமாக அழுது கொண்டிருந்தார் சுல்தான் ஹாஜியார். நடை பெற்றிருக்கும் சதியின் விளையாட்டுக்கள் அனைத்தையும் அவரால் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவே இருந்தது. அவர் மௌனமாகவே அழுதார். எதிரே தூரத்தில், தலையில் அடித்துக்கொண்டு கந்தையா குடும்பம்.

அமைதிப் புத்திரர்களாக சமூகத்தில் உதித்தவர்கள் -மண்ணுக்கேற்றவர்கள் -மணற்பரப்பில் நெருக்கமாக அமைதியாக கிடந்தார்கள். பிரிந்த இனங்கள் மீண்டும் இணைய வேண்டும் என்ற வைராக்கியத்தில் செயற்பட்டவர்களுக்கு கிடைத்த சமூகத்தீர்ப்பு! சந்தி சிரித்தது. உண்மையான இனத்தின் 'பிரதிநிதிகளான அவர்களின் உடல்கள் ஒட்டிய நிலையில் ஒற்றுமையினை உணர்த்திக் கொண்டிருந்தன.

**வெளிச்ச விளக்குகளுக்கு- என்றும்**
**எண்ணையாக இருக்க வேண்டியவர்கள்-**
**இங்கு விளக்கை எறிந்து விட்டு**
**வீட்டைக் கொழுத்த வந்தால்- என்றும்,**
**விழிகளில் கண்ணீர் மழை**

*(-யாவும் கற்பனைதான்-)*

---

16ம் பக்கத் தொடர்ச்சி...

கடையில் ஒரு கோப்பி வாங்கிவரும் படி பணத்தைக் கொடுத்தேன்.

"என்ன ஐயா இது 50 சதம்? கோப்பி ஒண்டு கடையில அஞ்சு ரூபா?"

அஞ்சு ரூபாவா ஒரு கோப்பி? அதென்ன கோப்பியோ! எப்படியோ அது ஒன்று இப்போது அவசியம். "இந்தா பத்துரூபா இருக்கு. வாங்கிட்டு மீதியைக் கொண்டு, வா"

கோப்பி வந்தது. பார்த்தேன். அரிசி கழுவிய தண்ணி போலிருந்தது. வாயில் வைத்தேன். சே!...

தூ...துப்பினேன். ஏதோ ஒருவகை எண்ணை வாடை. கடையிலுள்ளவர்கள் எல்லோரும் என்னைத் திரும்பி வேடிக்கை பார்த்தார்கள். இருந்தாலும் செல்லாச்சியின் கையால் போடும் கோப்பிக்கு ஈடாகுமா?

சே... என்ன செல்லாச்சிவேண்டிக்கிடக்கிறது. கோப்பியாவது மண்ணாவது- எதுவுமே வேண்டாம்.

எப்படியோ சமாளித்து 12.30 வரை நேரத்தைக் கடத்திவிட்டேன். இப்போது வயிறு கொஞ்சம், தான் 'எங்கும் போகவில்லை- என்னுடன் தான் இருப்பதாக' நினைவூட்டியது. நாற்காலியின் சாயலில் நான் வழமையாக மாட்டி வைக்கும் 'டிஃபன் பொக்'சைத் தேடினேன். கடவுளே! பையை காணவில்லையே. யார் எடுத்திருப்பார்கள். கடையில் என்னோடு எவரும் சேட்டை விட மாட்டார்கள் வயதில் முதியவர் என்ற மரியாதை. இன்று எனது உணவுப் பையை எடுத்து ஒளித்து வைக்க எவருக்குத் துணிச்சல்...?

அடடே.. என்ன மறதி எனக்கு... இன்று தான் நான் சாப்பாட்டுப் பையையே கொண்டு வரவில்லியே. செல்லாச்சி இருந்தா, காலையிலேயே ஒரு சோறும் ஒரு குளம்பும் வச்சி மத்தியானச் சாப்பாட்டை தயார் செய்து பையில் போட்டுத் தந்திருப்பாள். இன்று காலையில் கோப்பியுமில்லை. காலைப் பலகாரமுமில்ல... போதாக்குறைக்கு மத்தியான உணவும் கிடையாது. பச்சைத் தண்ணி தான் வயிறு முட்டக்குடித்தேன்.

உடம்பு கொஞ்சம் கண கணத்தது. கடைக் கணக்குப்பிள்ளையிடம் சொல்லி விட்டு நாலைரை மணிக்கே வீடு நோக்கிக் கிளம்பினனேன். பஸ் பிடித்து தொத்திக் கொண்டேன். உடம்பெல்லாம் ஆடியது. உரிய பஸ் தரிப்பிலிறங்கி வீட்டை அடைந்தேன். கதவு பூட்டப்பட்டிருந்தது.

இந்த வேளையில் கதவு திறந்து தானே இருக்கும்? கதவைத் தட்டினேன். எவரையுமே காணோம். தொடர்ந்து நிற்க முடியாமல் கால்கள் தடுமாறின- பலம் முழுவதையும் திரட்டி "ஏய் செல்லாச்சி..." ஒரேயொரு முறைதான் கத்தினேன். அவர்கள் எவரும் வீட்டில் இல்லை என்ற நினைவு அப்போது தான் உள்ளத்தில் உறைத்தது. அடுத்த வீட்டு விசாலாட்சி வேலிக்கு மேலால் எட்டிப்பார்த்தாள். "என்னண்ணே அவங்க எல்லாருமே காலையில தானே பண்டாரவளைக்குப் போனாங்க... என்ன மறந்திட்டீங்களா?"

அசடு வழிய ஒரு இளிப்பை உதிர்த்து விட்டு சட்டைப் பையிலிருந்து சாவியை எடுத்து கதவைத் திறந்தேன். வெறிச் சோடிக்கிடந்தது. ஈசிச் சேரில் சாய்ந்தேன். எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தேனோ தெரியாது. விழித்துப் பார்க்கும் போது எங்கும் ஒரே இருள்.

"ஏய் மங்கை... இருட்டுப் பட்டுப் போச்சே அந்த லைட்டைப் போடவே தெரியல்லியா?"

எவருடைய சப்தமும் இல்லாதமையை உணர்ந்ததும் நிலமையையும் புரிந்து கொண்டேன். அவர்கள் எல்லோரும் இப்போது பண்டாவரளையில் சந்தோஷமாக இருப்பார்கள். நான் மட்டும் இங்கே...!

மெல்ல எழுந்து லைட்டைப் போட்டேன். வெளியே ஒளி பெருகியதே தவிர என் உள்ளத்தில் எந்த ஒளியையுமே காணோம். உடல் வெடுவெடுத்தது- நெருப்பாய்க் கொதித்தது. குடிப்பதற்குக் கூட கொஞ்சம் வெந்நீர் தரயாருமே இல்லை.

பெண்சாதி, பிள்ளை குட்டி, பேரப்பிள்ளைகள் எல்லாருமே இருந்தும் நான் இன்று தனிமையில்...!

ஐயையோ... கொடுமையிலும் கொடுமை. பசிக் கொடுமை...! ஒருபுறம் தனிமையெனும் கொடுமை! தாங்க முடியாத கொடுமை!

அடுத்த நாள் பொழுது விடிந்தது. முதல் நாள் பட்ட துன்ப துயரங்கள் போதும். பல்லை விளக்கி முகம் கழுவியதும் பெட்டியைத் தூக்கினேன். மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் பதுளை செல்லும் வண்டியில் ஏறினேன். அங்கிருந்து பண்டாரவளைக்கு மற்றுமொரு பஸ் பிடித்து ஏறினால், எப்படியும் மலைக்கு முன்னர்...!

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



இலக்கம்-07
சுப்பர் ஸ்டார் சந்திப்பு
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

பத்துவருட விசாரணை

# எதிர்க் கட்சித் தலைவரை சுட்டது யார்? பத்துவருடமாகியும் பதுங்கியிருக்கும் மர்மம்!!




உலக அரங்கில் அரசியல் தலைவர்கள் பலர் வேட்டையாடப் பட்டார்கள். அவர்களின் தலைகள் தரையில் உருட்டப்பட்டன.

சிலவற்றில் கொலையாளிகள் சிக்கிக் கொண்டார்கள்.

வேறுசிலவற்றில் கொலையாளிகள் இனம் காணப்பட்டுத் தேடப்பட்டார்கள்.

இன்றுவரை தேடப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

சில கொலைகள் அவிழ்க்க முடியாத புதிர்களாக இன்றுவரை ஆராயப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பிலிப்பைன்ஸ் நாட்டின் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர் நினோய் அக்கினோ.

1983ஆகஸ்ட் 21ம் திகதி பிலிப் பைன்ஸ் தலைநகரான மனிலாவில் விமானம் ஒன்றில் வந்திறங்கினார்.

வந்திறங்கியவரைத் துப்பாக்கி வேட்டுக்கள் வரவேற்றன.

அக்கினோ பிணமாகச் சரிந்தார். அதேஇடத்தில் கால்மான் என்பவனும் கொல்லப்பட்டான்.

அவன்தான் அக்கினோவைக் கொலைசெய்தவன் என்று கூறப் பட்டது.

## காவலுக்கு வந்தவர்களே காலனாக மாறினார்களா?

கொலையாளி கொல்லப்பட்டதாக் கூறப்பட்டாலும் அக்கினோ கொலை யின் சூத்திரதாரிகள், வெளியே இருப்பதாக நம்பப்பட்டது.

கொலை விசாரணைகள் நடை பெற்றபோதும் இதுவரை உண்மைகள் வெளியாகவில்லை.

கொலையாளி என்று கூறப்பட்டு கால்மன் என்பவன் இராணுவத்தால் கொல்லப்பட்டதும் சதியின் ஒரு கட்டம் என்றே கருதப்படுகிறது.

சர்வாதிகாரியாக பிலிப்பைன்ஸை ஆட்டிப்படைத்த மார்க்கோஸின் கரம் அக்கினோவை ஒழித்துக்கட்டிய சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாக மக்கள் பேசிக் கொண்டார்கள்.

அக்கினோவின் மரணம் மார்க்கோஸ் ஆட்சியை ஆட்டம்காண வைத்தது.

மார்க்கோஸ் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். மனைவி இமெல்டா வுடன் நாட்டைவிட்டு வெளியேறினார்.

1986இல் அக்கினோவின் மனைவி திருமதி கொறாஸோன் அக்கினோ பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியானார்.

தனது கணவனைக் கொன்ற குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தீவிரம் காட்டினார்.

அக்கினோ கொல்லப்பட்டபோது மனிலா விமான நிலையத்தில் பணியாற்றிய பதினைந்து இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆயினும் அவர்கள் மூலமும் போதிய விபரங்கள் கிடைக்க வில்லை.

அக்கினோ பயணம் செய்த விமானத்தில் இருந்த பயணி ஒருவர் அன்று தான் கண்ட காட்சியை விபரித்தார்.

அக்கினோவை விமானப் படிக்கட்டில் இறக்கிய பிலிப்பைன்ஸ் இராணுவ அதிகாரி ஒருவரே அவரை நோக்கிச் சுட்டதாகக் கூறினார்.

அதைத் தொடர்ந்து மேலும் சில விபரங்கள் வெளியாகின.

தைப்பேயிலிருந்து புறப்பட்ட சீன விமானம் ஒன்றில் அக்கினோ மனிலாவுக்கு வந்தார்.

பகல் 1.05க்கு விமானம் மனிலாவில் தரையிறங்கியது.

விமான நிலையத்தைச் சுற்றிலும் இராணுவம் குவிக் கப்பட்டிருந்தது.

வெளியார் எவரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அக்கினோவை ஏற்றிச்செல்ல படைப்பிரிவின் வாகனம் ஒன்று ஓடுபாதையருகே தயாராக நின்றது.

விமானத்திலிருந்து அக்கினோ இறங்கி வந்து கொண்டிருந்தார்.

அருகே இராணுவ அதிகாரி கள் சிலரும் வந்தனர்.

அக்கினோ தரையில் கால் வைத்த நேரத்தில் அவரது இடதுபுறமிருந்து துப்பாக்கி ரவைகள் பறந்து வந்தன.

சில அடிகள் முன்சென்ற அக்கினோ அப்படியே தரையில் குப்புற விழுந்தார்.

அவர் நேசித்த தாய்நாட்டு மண்ணை அவரது குருதி நனைத்தது.

அதேநேரத்தில் கால்மன் என்பவன் தரையில் உருண்டான்.

இராணுவத்தினரே அவனைச் சுட்டனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கால்மன் எவ்வாறு விமான நிலையத்திற்குள் வர முடிந்தது?

எப்படி விமானம் அருகே செல்ல முடிந்தது?

என்பன விடைதெரியாத வினாக் களாகவே இன்றுவரை இருக் கின்றன.

கொல்லப்பட்ட கால்மன் விமான நிலைய பணியாளன் போல நீலநிற சீருடையில் இருந்தான்.

உள்ளூர் கொம்யுனிஸ்ட் குழுவே அவனை ஏற்பாடு செய்து கொலை செய்ய அனுப்பிவைத்ததாக இராணுவம் குற்றம்சாட்டியது.

கால்மன் கொல்லப்பட்டு விட்டதால் மாபெரும் சதித்திட்டத்தின் சூத்திரதாரிகள் தப்பிக்கொண்டார்கள்.


பத்து வருடங்கள் உருண்டோடி விட்டன.

உண்மை இப்போதும் ஒளிந்து கொண்டிருக்கிறது.

1990ம் ஆண்டும் சிலர் கைது செய்யப்பட்டார்கள். இப்போதும் அவர்கள் சிறையில் இருக்கிறார்கள்.

ஆனால் சதித்திட்டத்தின் சூத்திர தாரிகள் இப்போதும் வெளியேதான் இருக்கிறார்கள்.

பத்துவருடங்களின் பின்னரும் விசாரணைகள் தொடர்கின்றன. விபரங்கள் வெளிச்சத்திற்கு வருமா என்பது சந்தேகம்தான்.



அக்கினோ கொலையைச் சித்தரிக்கும் வரைபடம்

தமிழக பிரபலங்கள் அலசல்

# அரசியலுக்கு வருவாரா ரஜனி?

## 'வள்ளி'பட வசனங்கள் எழுப்பியுள்ள கேள்வி!!

ஆகஸ்ட் 7ம் திகதி சென்னையில் 'எஜமான்' படத்தின் வெள்ளிவிழா நடைபெற்றது.

அங்கு ரஜனிகாந்த் உரையாற்றினார்.

அரசியல் பற்றிய தனது கருத்துக்களை 'வள்ளி' படத்தின் ஒரு கதாப்பாத்திரம் மூலமாக தான் சொல்லியிருப்பதாக ரஜனி கூறினார்.

அதையடுத்து வள்ளியின் வருகைக் காக அனைவரும் காத்திருந்தார்கள்.

ஆகஸ்ட் 20ம் திகதி தமிழகமெங்கும் வள்ளி திரைக்கு வந்தது.

வீரையன் என்னும் பாத்திரத்தில் தோன்றும் ரஜனி அரசியல் பற்றி சில காட்சிகளில் பேசுகிறார்.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை காரசாரமாகக் கண்டிக்கிறார்.

"நாம் என்ன பிச்சைக்காரர்களா? வேலை வெட்டி கேளுங்க. நாமே சேலை வேட்டி வாங்கிக் கொள்ளலாம்."

"இந்த அரசியலமைப்பு உள்ளவரை யார் முதலமைச்சராக வந்தாலும் நிலமை மாறாது. காந்தி போல் ஒருவர் மீண்டும் பிறந்து புரட்சி செய்யணும்."


"கதர் போட்டவன் எல்லாம் காந்தியவாதி. பேசத் தெரிந்தவன் எல்லாம் அரசியல்வாதி."

இவையெல்லாம் ரஜனியே எழுதி அவரே பேசியுள்ள வசனங்கள்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் செல்வாக்கு சரிந்து வருகிறது.

தி.மு.க. வின் உள்ளேயும் உட்பூசல்கள் மலிந்து வருகின்றன.

இதுதான் ரஜனி அரசியலுக்கு வருவதற்குப் பொருத்தமான நேரம் என்று அவரது அபிமானிகள் கூறுகிறார்கள்.



ஜி.வி.

ஆனாலும் வள்ளி படத்தில் அரசியலின் தரக்குறைவுகள் மீது ரஜனியின் அதிருப்தி தெரிகிறது. அரசியலில் குதிக்கும் ஆர்வம் தெரிய வில்லை.


தற்போதைய அமைப்புக்குள் எவர் வந்தாலும் இதைத்தான் செய்யமுடியும் என்று அவர் கூறுவது தன்னையும் சேர்த்துத்தான் என்றே கருத முடிகிறது.

வள்ளி படத்தில் ரஜனி பேசும் வசனங்கள் பற்றியும் அது தொடர்பான அபிப்பிராயங்களையும் தமிழக முக்கிய பிரமுகர்கள் சிலரிடம் கேட்டோம்.

அவர்கள் சொன்ன கருத்துக்கள் இங்கே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

பிரபல தயாரிப்பாளர் ஜி. வெங்க டேஸ்வரன் (ஜி.வி) கூறுகிறார்.

"ஆட்சியில் யார் வந்தாலும் பெரிய மாற்றங்களை உருவாக்குவது கஷ்டம்.



வைரமுத்து

இங்குள்ள சிஸ்டம் அப்படியிருக்கிறது. அதைத்தான் ரஜனி சொல்கிறார். அவர் சொல்வதை வைத்துப் பார்க்கும் போது அரசியலுக்கு வந்தால் அவர் புரட்சி யோடுதான் வருவார். இல்லாவிட்டால் வரமாட்டார். இது என் அபிப்பிராயம்."

பழம்பெரும் திரைப்பட இயக்குநர் மதி ஒளி சண்முகம் இப்படிக் கூறுகிறார்.

'வள்ளி' படத்தில் ரஜனி பேசியுள்ள வசனத்தையும், அவரது பாத்திரத்தையும் பார்க்கும் போது இப்போதுள்ள அரசியல் வாதிகள் குறித்தும், அரசியல் நிலமை குறித்தும் சாடியுள்ளார்.

"இனி ஒரு புதிய தலைமுறை ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். வருவேன் என்று நேரடியாகக் கூறாவிட்டாலும் ஒரு புதிய தலைமை தேவை என்று கூறியிருக்கிறார்.

"சினிமா மூலம் அரசியலுக்கு வந்தவர்கள் பலர் உண்டு. அதே போல ரஜனியும் சினிமா மூலம் தனது கருத்துக்களை சொல்ல ஆரம்பித்துள்ளார்.

"அவர் நினைத்தால் தனது ரசிகர் மன்றங்களை அரசியல் இயக்கமாக மாற்றக் கூடிய சக்தி உண்டு."

ரஜனியின் நண்பரும், கவிஞருமான வைரமுத்து அடிக்கடி ரஜனியைச் சந்தித்து பேசி வருபவர். அவரும் தனது அபிப்பிரா யத்தை வெளியிட்டுள்ளார்.

"வள்ளி பார்த்தேன். எனது அபிப் பிராயம் இதுதான். இந்த அரசியல் அமைப்பு மீது அவருக்கு நம்பிக்கை இல்லை. இந்த அரசியல் அமைப்பால் மக்களுக்கு நன்மை செய்யமுடியாது என்பது அவரது முழக்கமாக இருக்கிறது.

"இந்த அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என்ற தாகம் தெரிகிறது.

"அதை நான் தான் செய்வேன் என்று அவர் கூறவில்லை. ஆனால் மாற்றி யமைக்கக் கூடிய ஒரு தலைவன் தேவை என்பது அவரது வேட்கையாக இருக்கிறது. அது யாராகவும் இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது."

தனது பெயரை வெளியிட்டால் தேவையற்ற சர்ச்சைகள் உருவாகும் என்று கூறிவிட்டு தன் கருத்தை வெளியிட்டவர் தமிழக இளம் அரசியல்வாதி. ஜெயலலிதாவுக்கு எதிராக ரஜனியைக் கொண்டுவர தீவிரமாக இருப்பவர் என்று பேசப்படுகின்றவர்.

"தமிழகத்தில் தற்போதுள்ள இரு தலைவர்களும் குடும்ப ஆதிக்கத்தையே முன் நிறுத்துகிறார்கள். அதே நேரம் அவர்களுக்கு பரந்த செல்வாக்கும் இருக்கிறது. சாதாரண கட்சிகள் அவர்களை எதிர்த்து நிற்க முடியாது. எப்படி ஒரு எம்.ஜி.ஆர். இல்லாமல் கருணாநிதியை வெற்றி பெற்றிருக்க முடியாதோ அப்படித்தான் மக்களால் அறியப்பட்ட ஒருவர் இல்லாமல் இவர்களை வெல்ல முடியாது. அப்படி மக்களால் அறியப்பட்ட செல்வாக்குள்ளவர் ரஜனி ஒருவர் மாத்திரமே.


"ரஜனி விரும்புகிறாரோ இல்லையோ அவர் அரசியலுக்கு வரவேண்டி ஏற்படும். எப்போது அரசியல் பற்றி கருத்துச் சொல்ல ஆரம்பித்தாரோ அதிலிருந்தே அவர் அரசியலை நோக்கி தன்னையறியாமல் வந்து கொண்டிருக்கிறார்."

வள்ளி படத்தில் ரஜனி பேசியுள்ள வசனங்கள் தமிழக முக்கிய அரசியல் வட்டாரங்களிலும் பேசப்படுகிறது.

தமிழக முதல்வர் வள்ளி படத்தை விசேசமாகத் தருவித்துப் பார்த்திருக்கிறார்.

கலைஞர் கருணாநிதி படம் வெளியான அன்றே பார்த்துவிட்டதாகக் கூறுகிறார்கள்.

இனி வருங்காலம்தான் ரஜனியின் அரசியல் பிரவேசம் பற்றிப் பதில் சொல்ல வேண்டும். ●



- "இளையராஜா மாதிரி உலகப்புகழ் பெற டி. ராஜேந்தர் இசையமைச்சா அதுக்கு என்ன பேர் வைப்பார்?"
- "சிம்புனி இசை."

## வெறித்தனமான விளையாட்டு மரணப் போட்டியான மல்யுத்தம்!

## ஸ்போர்ட்ஸ்



விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி தோல்வி சகஜம். வெற்றி கொள்ளும் வெறி வீரர்களுக்கு அவசியம்தான். ஆனால் ஒருவரை ஒருவர் அழித்துவிடும் எண்ணம் இருக்கக்கூடாது.

விளையாட்டில் வீரம் வெளிப்படவேண்டும். இரத்த வெறிக் கோரம் வெளிப்படக்கூடாது.

மேலை நாடுகளில் இப்போது புதுவிதமான மல்யுத்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. வழக்கமான மல்யுத்தத்தில் இருந்து இவை மாறுபட்டவை.

தொலைக்காட்சிகள் மூலமாக நம் நாட்டிலும் அதனைக் காணமுடிகிறது.

துணி துவைப்பது போல ஆளை ஆள் தூக்கி அடித்து வெறித்தனமான ஒரு ரசனையை வளர்த்து வருகிறார்கள்.

ஜப்பானில் இன்னும் ஒருபடி மேலே போய்விட்டார்கள்.

மல்யுத்தம் நடைபெறும் இடத்தைச் சுற்றி முட்கம்பி வேலிகளை அமைத்து விடுகிறார்கள்.

எதிரியை முட்கம்பி வேலி மீது தள்ளிவிட்டு இரத்தம் சிந்துவதைப் பார்த்து வெற்றிபெற்றவர் ஆரவாரக் கூச்சல் போடுவார்.

இந்த வகை மல்யுத்தத்திற்கு மரணப் போட்டி என்று செல்லமாகப் பெயரும் சூட்டியிருக்கிறார்கள்.

விளையாட்டிலும் வெறித்தனம் புகுந்துவிட்டது. வன்முறைக்கு வரவேற்புக் கிடைக்கிறது.

## மரடோனா மறு பரிசீலனை!



உலகின் அதி சிறந்த கால்பந்து வீரர் மரடோனா.

போதை மருந்து விவகாரத்தில் சிக்கி தன் பெயரைக் கெடுத்துக்கொண்டவர்.

"கால்பந்து விளையாட்டுக்கு முழுக்குப் போடப் போகிறேன்" என்று அவர் அறிவித்திருந்தார்.

விளையாட்டு உலகத்தை விட்டு விலக வேண்டாம் என்று உலகெங்கும் இருந்து பல்லாயிரம் ரசிகர்கள் கோரிக்கை விட்டுள்ளார்களாம்.

உலகில் உள்ள கால் பந்து விளையாட்டுச் சங்கங்கள் தம்மோடு சேருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றன.

அழைப்புக்களையெல்லாம் தனது குடும்பத்தினரோடு இருந்து ஆர அமர அலசிப் பார்க்கப்போகிறாராம் மரடோனா.



## உதவாக்கரை என்றார்கள் உலக சாம்பியனாகிவிட்டார்! பானையில சோறு கண்டு தேடி வந்தன பூனைகள்!!

கடந்த நவம்பர் மாதம் உலக ஹெவி வெயிட் சாம்பியன் ஆனவர் ரிக்டிக்போவே.

உலக சாம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டதும் கூரையைப் பிய்த்துக் கொண்டு கோடிகள் கொட்டின. ஒரே இரவில் ரிக்டிக்போவே கோடீஸ்வரனாகிவிட்டார்.

அமெரிக்காவில் நடுத்தர நீக்ரோக்கள் வாழும் பின் தங்கிய பகுதியில் பிறந்து வளர்ந்தவர் ரிக்டிவ்போவே.

அவர் பணக்கஷ்டத்தில் வாடியபோது நெருங்கிய உறவுகள்கூட முகம் திருப்பிக் கொண்டன. 'உருப்படாதவன்' என்ற பட்டத்தையும் வழங்கின.

அப்படி 'உருப்படாதவன்' என்று அழைக்கப்பட்டவர் உலக சாம்பியன் ஆனதும் அதே உறவுகள் தேடி ஓடிவந்தன.

உலக சாம்பியன் பட்டம் வென்றவுடன் பலர் ஓடிவந்து "மாமன், மச்சான் உறவு கொண்டாடினார்கள். எனக்கு தூக்கிவாரிப் போட்டுவிட்டது. இத்தனைபேர் வந்து உறவு முறை கொண்டாடியது கண்டு ஆடிப் போய்விட்டேன். 20 வருட காலத்தில் இவர்களில் ஒருவரைக் கூட நான் பார்த்ததில்லை" என்கிறார் ரிக்டிக்போவே.

ஆனால் ரிக்டிக்போவே ஏமாளியல்ல. "உலகில் கஷ்டப்படுகின்றவர்களுக்கு உதவுவேன். இப்போது புதிதாக தேடிவரும் உறவினர்கள் விடயத்தில் கண்டிப்பாக இருப்பேன்" என்று சொல்லுகிறார்.

முன்னாள் உலக சாம்பியன் ஹோலிபீல்டை வீழ்த்தியதற்காக ரிக்டிக்போவே பெற்றுக் கொண்ட தொகை 6 மில்லியன் டொலர்.

மைக்கல் போக் என்னும் மற்றொரு குத்துச் சண்டை சூரனை சரித்ததில் கிடைத்த பணம் 7 மில்லியன். இது தவிர பரிசுப் போட்டித் தொகை. விளையாட்டு நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் என்று பணமழையில் நனைகிறார் ரிக்டிக்போவே.

மோதித் தேடிய செல்வம். திருடிச் சேர்த்ததுதான் நிலைக்காது. கஷ்டப்பட்டு மோதித் தேடியது நிலைக்கும்தானே!

## ஆன்மீகம்

## நிறையாத பொறுமை



கங்கைக் கரையில் ஒரு கிராமம் இருந்தது. ஒரு முனிவர் அங்கு வந்தார். அங்கிருந்த சிவலிங்கத்தைத் தரிசனம் செய்தார். தங்கள் ஊருக்கு வந்த முனிவரின் பாதங்களில் அம்மக்கள் விழுந்து வணங்கினார்கள். "ஸ்வாமி! மகானாகிய தாங்கள், நாங்கள் எல்லா வளங்களும் பெற்று வாழவும், மறுமையிலும் சிறப்புறவும் வழி கூற வேண்டும்," என்று வேண்டினார்கள்.

"இதோ இந்த ஈஸ்வரர் இங்கிருக்கும் போது, உங்களுக்கென்ன குறை இருக்க முடியும்? தினமும் 1000 குடம் கங்கை நீரைக் கொணர்ந்து, இந்தச் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யுங்கள். இப்படி 90 நாட்கள் செய்தால், அவனுக்கு இந்திரப்பதவி கிடைக்கும்" என்றார் முனிவர்.

அவர் போய் விட்டார். அவரவர் இல்லத் தொல்லைகளில் அவர் சொன்னதை அனைவரும் மறந்தே போனார்கள். ஆனால் ஒருவனுக்கு மாத்திரம் முனிவரின் இந்த மொழி, மனதில் ரீங்காரமிட்ட வண்ணமே இருந்தது.

அவர் சொன்னபடியே தினம் 1000 குடம் நீரைக் கொணர்ந்து அபிஷேகம் செய்யத் தொடங்கினான். கைகள் சளைப்பதையோ, கால்கள் துவள்வதையோ லட்சியம் செய்யவில்லை.

அன்று 90வது நாள். 999 குடம் நீரையும் கொணர்ந்து லிங்கத்தின் மீது பொழிந்தான். அது 1000வது குடம். கங்கையிலிருந்து நீரை முகர்ந்து கொண்டு வந்து விட்டான்.

சிவலிங்கத்தின் மீது பொழிய குடத்தைத் தூக்கியவன் மனதில் ஏமாற்றமும் கோபமும் எழுந்தன. "இத்தோடு முனிவர் சொன்ன கணக்குத் தீர்க்கிறது. ஆனால் இங்கே லிங்கம் மாத்திரம் தான் இருக்கிறது. எனக்கு இந்திரப் பதவி கிட்டவில்லை," என்று கோபத்தோடு, நீரோடு குடத்தை அப்படியே சிவலிங்கத்தின் மீது போட்டுடைத்தான்.

அப்போது அந்த லிங்கத்தினின்று சிவபிரான் காட்சி கொடுத்தார். அவன் பயந்து போய் வணங்கினான். "ஏனப்பா, என் தலை மீது ஏன் குடத்தைப் போட்டு உடைத்தாய்? என்மேல் உனக்கென்ன கோபம்?"

அவன் நடுங்கினான். "முனிவர் சொன்னபடி இந்திரப் பதவி கிடைக்கவில்லையே என்று கோபத்தில் அப்படிச் செய்து விட்டேன். மன்னிக்க வேண்டும்," என்றான்.

"இந்திரப் பதவி எப்போது கிடைக்கும் என்று முனிவர் சொன்னார்?" என்று சிவபிரான் கேட்டார்.

"தினம் 1000 குடமாக, 90 நாள் அபிஷேகம் செய்தால் கிடைக்கும் என்று...."

"அப்படிச் செய்து முடிந்ததா?"

"இல்லை. இன்று 90 வது நாள். இந்தக் குடம் தான் கடைசி."

"இந்த ஒரு குடத்தை அபிஷேகம் செய்தால்தான் 1000 என்ற கணக்கு பூர்த்தியாகிறது. அதற்குள் பொறுமையிழந்து என் தலையில் போட்டுடைத்தாய். இல்லாவிட்டால் இப்போதே உனக்கு இந்திரப் பதவி கிடைத்திருக்கும். நீ பொறுமையிழந்ததன் பலனால் இன்னொரு பிறவி எடுத்து ராம தரிசனம் பெறுவாய். அதற்குப் பின் என் அருளால் இந்திரப் பதவி பெறுவாய்," என்று கூறிச் சிவபிரான் மறைந்தார்.

இந்தப் பக்தனே ஹைதராபாத்தில் தானீஷா என்ற மன்னாகப் பிறந்தான். ஸ்ரீராமதாசர் வரி வசூல் பணத்தில் பத்ராசலத்தில் கோவில் கட்டிச் செலவளித்தபோது, இம்மன்னன் வெகுண்டு அவருக்கு மரணதண்டனை விதிக்க, ஸ்ரீராமரும், லக்ஷ்மணரும் ஓர் இரவில் தானீஷாவிடம் வந்து காட்சி கொடுத்து, தாங்களே வரிவசூல் பாக்கிப் பணத்தைக் கொடுத்து ராமதாசரை விடுவிக்கச் சொன்னார்கள்.

எப்படியோ, அவ்வளவு பெரிய பக்தரான ராமதாசருக்குக் கூடத் தரிசனம் கொடுக்காத ஸ்ரீராமர், தானீஷாவிற்குத் தரிசனம் கொடுத்தார். பின் இந்திரப் பதவியும் கிட்டியது. ஆனால் பொறுமையைக் கடைப்பிடித்திருந்தால், ஒரு பிறவி எடுக்க வேண்டிய அவசியம் நேராமலே அவனுக்கு உடனடியாக இந்திரப்பதவி கிடைத்திருக்கும்.

இந்திரப் பதவி கிடைக்கிறதோ இல்லையோ, பொறுமையின்மை காரிய வெற்றியைத் தாமதமாக்கும் என்பது இந்தப் புராண நீதி.

## புனித வேதாகமம் கூறும்-சோதனையில் ஆறுதல்

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்.

(1கொரிந்தியர் 10:13)

தேவன் தாமே சோதிக்கப்பட்டுப் பாடு பட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

(எபிரேயர்2:18)

சோதனைகளைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கிய பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.

சோதிக்கப்படுகிற எவனும் தான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பாயாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுபவரல்ல. ஒருவரையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகின்றான்.

(யாக்கோபு 1: 12,13,14)

இதனாலே நீங்கள் மிகவும் சந்தோசப்படுகிறீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

அழிந்து போகிற பொன், அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக் காணப்படும்.

(1 பேதுரு 1:6,7)

## விபசாரம் கூடாது

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து தான் விபசாரம் செய்வதற்கு அனுமதி தரவேண்டும் என்று கேட்டார்.

இதனைக் கேட்ட அங்கிருந்த ஸஹபாக்கள் அம்மனிதர்மீது பெரும் கோபம் கொண்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ பொறுமையுடன் அம் மனிதரை அருகில் வரும்படி அழைத்தார்கள். பின் அவரிடம், யாரேனும் ஒருவர் உன் தாயாருடன் விபசாரம் செய்வதை நீ விரும்புவாயா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் "நான் தங்களுக்கு அர்பணமாவேனாக இதனை நான் ஒரு போதும் விரும்பமாட்டேன்" என்றார். "அப்படியா? மற்ற மனிதர்களும் தங்கள் தாய்மார் உடன் விபசாரம் செய்வதை விரும்ப மாட்டார்கள்" என்ற பின் "உன் மகளுடன் விபசாரம் செய்வதை விரும்புவாயா?" என்றுகேட்டார்கள்.

"நான் தங்களுக்கு அர்ப்பணமாவேனாக. 'இதனையும் நான் விரும்ப மாட்டேன்' என்றார். "இவ்வாறுதான் மற்ற மனிதர்களும் தங்களுடைய மகளுடன் வேறொருவர் விபசாரம் செய்வதை விரும்பமாட்டார்கள்" என்று கூறிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம் மனிதரிடம் இவ்விதமே சகோதரி, சிறிய தாயார், மாமி ஆகியோரை பற்றியும் கேட்டு விட்டு தங்களுடைய புனிதமான திருக்கரத்தை அம் மனிதரின் நெஞ்சின் மீது வைத்து,

"யா அல்லாஹ் இவருடைய உள்ளத்தைப் பரிசுத்தமாக்கி வைப்பாயாக. இவருடைய குற்றத்தை மன்னிப்பாயாக இவருடைய மர்மஸ் தானத்தை பாவங்களை விட்டும் பாதுகாப்பாயாக" என்று துஆச் செய்தார்கள். பின் அம் மனிதருக்கு விபசாரம் போன்று வெறுப்புள்ள விஷயம் வேறு எதுவும் இருந்ததில்லை.

எனவே விபசாரச் செயல்களில் ஈடுபடுவோருக்கு இது ஒரு பாடமாகவும் அமையட்டும்.

கல்முனை எம்.சி.கலீல்.



"ரோஜாவை வைத்து செல்வமணி படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பார்?"
"என் ரோசாவின் மனசிலே..."

தரம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் வடிப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள்
ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொ.பேசி: 436331








லக்கிலாண்ட் பிஸ்கட்ஸ்
ஈடில்லாச் சுவை. இலங்கையெங்கும்
இணையற்ற விற்பனை
சிறுவர் முதல் முதியோர் வரை லக்கிலாண்ட்
பிஸ்கட்டுக்கள் என்றால்
விரும்பிடுவதும் இரகசியம் என்ன?
அதில் — சுவை மட்டுமல்ல —
இதுவன்றோ பிஸ்கட்ஸ்
Luckyland Biscuits
Natterampote,
Kundasale.
Sri Lanka
Tel:
08-24217
08-32574


வால் வால்



இந்த
சின்ன விலங்குக்கு
விரல் கொடுத்த
வள்ளல் யாரோ?
முல்லைக்கு
தேர்கொடுத்த
பாரி
இந்த விரல்
கொடுத்தானிடம்
தோற்றுத்தான்
போனார்
போங்கள்.



## உலகம் வியக்க ஊதியவை!

நம் ஊர்களிலும் பபிள்கம் சப்பிவிட்டு ஊதிக்கொண்டு திரிகின்றவர்களைக் கண்டிருப்பீர்கள். அவர்களும் ஒரு நாள் சாதனை யாளராக மாறக் கூடும். யார் கண்டது. கலிபோர்னியாவில் 1985ல் பபிள்கம் ஊதும் போட்டியில் சூசான் மொன்ற் கொமெரி வில்லியம்ஸ் என்பவர் ஊதிய பபிள்கம்மைப் படத்தில் பார்க்கிறீர்கள். இதன் அளவு 55.8 சென்றி மீற்றர். அதாவது 22 அங்குலம். இது ஒரு உலக சாதனை. பபிள்கம் பிரியர்களே ஊதுங்கள்.



## கனவு பிழைத்தது!

அர்னோல்ட் ஸ்வாஸநேக்கர் பெரிதும் எதிர்பார்த்த படம் 'த லாஸ்ட் ஆக்ஷன் ஹீரோ!' (கடைசி வீரக் கதாநாயகன்) வசூலில் ஹொலிவூட்டை ஒரு கலக்குக் கலக்கும் என்று எதிர்பார்த்தார். திரையிடப்பட்ட முதல் வாரத்தில் ஒன்றைக் கோடி டொலர்கள் வசூலாகக் கிடைத்தன. தொடர்ந்து வசூல் வந்து குவியும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் வசூலில் தொய்வு ஏற்பட்டுவிட்டது. வெற்றி நாயகனாக ஹொலிவூட்டை வலம்வர நினைத்த ஸ்வாஸ நேக்கருக்கு கவலை தான்.



படத்தில் இருப்பது பிரான்ஸ் நாட்டு மன்னன் 14வது லூயிசின் அந்தப்புர நாயகி. அழகுராணி இவள். கட்டுவிழ் அசைத்தால் போதும் லூயி தட்டாமல் ஆடுவார். பின்னர் இவள் போனஇடம் தெரியவில்லை. ஓவியம் மட்டும்தான் இருக்கிறது.

## தேங்காய் கரட் ஹல்வா

காரமான உணவு வகைகளைப் பற்றி இது வரை பார்த்தோம். இடையில் சற்று இனிமையும் தேவை என்பதனால் இம்முறை தேங்காய்-கரட் ஹல்வா செய்முறையினை இங்கு தருகிறோம். இது வட இந்தியாவில் இந்திய உணவாகத் தயாரிக்கப்படுவதுண்டு.

கரட் பருப்பு சாதாரணமாகக் கடைகளில் வெவ்வேறு சுவைகளில் கிடைக்கும். இம்முறை தயாராகும் அல்வாவுக்கு 'ஸ்ரோபெறி' சுவையினைத் தேர்ந்தெடுத்தல் நல்லது.

தேவையானவை:
கரட் பருடர்- 4 1/2 மேசைக்கரண்டி
தேங்காய்ப்பால் 1 1/2 கோப்பை
சீனி - 1/4 கோப்பை
கொடி முந்திரி வத்தல்- 150 கிராம்
வாதாம் பருப்பு-20
அல்லது
முந்திரிப்பருப்பு-30
நெய்- 1 மேசைக்கரண்டி
உப்பு- சுவைக்கேற்ற அளவு.

செய்முறை:
தேங்காய்ப்பாலில் சீனி கரட் பவுடர் ஆகியவற்றைக் கலந்து ஒரு சோஸ்பானில் ஊற்றி இளஞ்சூட்டில் அடுப்பில் வைக்கவும். கொதிக்க ஆரம்பித்ததும் ... கிளறிக் கொண்டு ... நிமிடங்கள் அடுப்பிலே வைத்திருக்கவும். இப்பொழுது கொதிக்கும் கலவையில் நெய்யை விடவும் சிறிதளவு உப்புத்தூள் இப்பொழுது சேர்க்கலாம். வாதாம் அல்லது முந்திரிப் பருப்பைச் சிறு சிறு துண்டுகளாக்கி பாதி அளவினை கலவையில் போடவும். கலவை இறுகி வருவதை அவதானித்ததும் அடுப்பிலிருந்து இறக்கி தட்டையான ஒரு பாத்திரத்தில் ஊற்றவும். இதன் மீது எஞ்சியுள்ள பருப்பையும் முந்திரி வத்தலையும் தூவவும். சூடு ஆறியதும் துண்டுகளாக வெட்டிப் பரிமாறலாம்.

## சமைப்போம் சுவைப்போம்






இப்பத்திரிகை கொழும்பு ... 25, வெல்லவ, ... செப்டெம்பர் ... 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது